ஸ்ரீ ராமாநுஜன் 216

சென்னை ஸத்க்ரந்த ப்ரகாசனஸபா மூலமாக மாதந்தோறும்
வெளிவரும் பத்திரிகை.

ஆசிரியர்: ஸ்ரீ காஞ்சீ P. B. அண்ணங்கராசாரியர்.

ஸம்புடம் 18	1966௵ டிசம்பர் மாதத்திற்காக நவம்பர் முதல்தேதி வெளியிடப்பட்டது.	ஸஞ்சிகை 12

திருவாய்மொழி நூற்றந்தாதி 92.

கெடுமிடர்வை குந்தத்தைக் கிட்டினாற் போலத்
தடமுடை யனந்தபுரந்தன்னில்—*படவரவில்
கண்டுயில்மாற் காட்செய்யக் காதலித்தான்மாறன்*உயர்
விண்டனிலுள்ளோர் வியப்பவே.

மாறன், உயர் விண் தனில் உள்ளோர் வியப்ப	நம்மாழ்வார், உயர்ந்த பரமபதத்திலுள்ள நித்ய ஸூரிகளும் ஆச்சரியப் படும்படி,	தடம் உடை அனந்தபுரம் தன்னில்	தடாகங்களையுடைய திருவனந்தபுரத்திலே
கெடும் இடர் வைகுந்தத்தை கிட்டினால் போல	துக்கமற்றதான ஸ்ரீவைகுண்டத்தை யடைந்து அடிமை செய்யப் பெற்றாற்போலே	படம் அரவில் கண் துயில் மாற்கு	படமுடைய ஆதிசேஷன் மீது பள்ளிகொண்டருளும் திருமாலுக்கு
		ஆள் செய்ய காதலித்தான்	அடிமை செய்ய விரும்பினார்.

***பத்தாம் பத்தில் இரண்டாம் பதிகமான *கெடுமிடராயவெல்லாம்* என்னுந் திருவாய்மொழியின் ஸாரார்த்தமருளிச் செய்யும் பாசுரமிது. மலை நாட்டுத் திருப்பதிகளில் தலையான திருவனந்தபுரத்தில் அனந்த பத்மநாபப் பெருமாள் திருவடிகளிலே ஆழ்வார் தாமும் தமருமாகச் சென்று கைங்கரியஞ் செய்ய விரும்பினபடியைக் கூறும்பதிகமிது. கீழ் ஒன்பதாம்பத்தின் முடிவு பதிகமான *மாலை நண்ணியில் ஆழ்வார் திருநாட்டுக்கு நாளிடப் பெற்றவராகையாலே திருநாட்டைக் கிட்டினதாகவே பாவிக்கலானார். திருநாட்டிலுள்ள நித்ய முக்தர்க

அடிமை செய்வதில் வியப்பில்லை; அவர்களுங்கூட வியக்கும்படியாக இந்நிலத்தில் அடிமைசெய்யக் குதூஹலங் கொண்டபடியை இப்பதிகத்திலருளிச்செய்தார்.

இப்பாட்டின் முதலடியின் முடிவில் (போல்) என்று எங்கும் வழங்கிவரும் பாடம் தளைக்குச் சேராது. அங்குத் தேமாச்சீர் இருக்க வேண்டுதலால் 'போல' என்பதே பாடமென்றுணர்க. ... ... (92)

பதினெண்பிராயப் பரிபூர்த்தி.

நமது ஸ்ரீராமாநுஜனுக்குப் பதினெட்டாவது பிராயம் பூர்த்தியடைவது மார்கழிமாதத்திலானாலும் மார்கழிமாதத்துராமாநுஜன் இப்போதே அவதரிப்பதனால் பதினெண்பிராயப் பூர்த்தியும் இப்போதே யென்று கொள்ளவேணும். வேதத்தில் "த்வாதச மாஸாஸ் ஸம்வத்ஸர:" என்று பலபல விடங்களில் ஓதாநிற்கச்செய்தேயும் [தைத்ரீய ஸம்ஹிதையில் ஆறுவது காண்டத்தில்] "அஸ்தி த்ரயோதசோ மாஸ இத்யாஹு:" என்றோதப்படுகிறது. 'பன்னிரண்டுக்குமேல் பதின்மூன்றாவதான மாஸமும் உண்டென்று சொல்லுவர்கள்' என்பது இந்த வேதவாக்கியத்தின் பொருள். இந்த க்ரமம் ஸௌரமாநத்தில் இல்லையாயினும் சாந்த்ரமானத்தில் அடிக்கடி யநுபவிக்கப்பட்டு வருகிறது. நம் ஸ்ரீராமாநுஜனுக்கு இந்தப் பதினெட்டாவது பிராயம் அதிகமான மாஸமொன்றைக் கொண்டு பூர்த்தி பெறுகின்றதென்று கொள்வோம் இந்தப் பிராயத்தின் தொடக்கத்தில் பதினெட்டு பதினெட்டான பதினெட்டு மஹார்த்தங்களை வெளியிடுவதென்று ஸங்கல்பித்து அவிச்சேதேந வெளியிட்டு வருகிறோமானாலும் அந்தப் பதினெட்டு இன்னமும் பூர்த்திபெறவில்லை. அது மேன்மேலும் வளர்ந்து சென்றாலும் ப்ரத்யவாயமொன்றுமில்லையே. இதைப் பூர்த்திபண்ணிவிட்டு விச்ராந்தி யடையப்போகிறோமென்பதில்லையே எம்பெருமான் இவ் விபூதியிலே வைத்திருக்கும்நாள்வரையில் குர்வத்ரூபங்களான கரணங்களைக்கொண்டு ஏதோ ஸேவை நடத்திக்கொண்டு தானே யிருக்கவேணும். ஆகவே இந்த அஷ்டாதச மஹார்த்த நிதியை 18-ஆம் பிராயத்திலேயே பூர்த்தி பெறுவிக்கவேணுமென்று நிர்ப்பந்தங்கொண்டிலேன். கீழே வெளிவந்த பதினெட்டுகளைக் கடாக்ஷித்த வித்வத்ரஸிகர்கள் – விசேஷித்து பகவத்விஷயப் பதினெட்டைக் கடாக்ஷித்தவர்கள்—"திருவாய்மொழியாயிரத்தில் ஒரு பதினெட்டைக் காட்டிவிட்டுப் பர்யாப்திகொண்டதெங்ஙனே? ஒவ்வொரு பத்துக்கும் பதினெட்டு என்று கொண்டு காட்டினால் நியமபங்கமேதேனும் வந்திடுமோ?" என்று கேட்டிருக்கிறார்கள். உண்மையில் ஒரு நியமபங்கமுமில்லை. *அந்த: ப்ரவிஷ்டச் சாஸ்தா ஜநாநாம்* என்று உபநிஷத்து ஓதின கட்டளையிலே உள்ளுறையும் பெருமான் உகந்து நியமித்தருளும்படியே நடைபெறும்.

முன் ஸம்வத்ஸரத்தில் இதில் வெளியிடத்தொடங்கின ஸ்ரீவரவரமுநி சதக வியாக்கியானமும் தயாசதக வியாக்கியானமும் மற்றும் சிலவும் எப்போது பூர்த்தியடையுமென்று பலர் கேட்கிறார்கள். எதுவும் மறந்ததில்லை. பூர்த்தியடைந்தே தீருமென்று விச்வஸித்திருக்க. ... ... (*)

ஸ்ரீமத் வரவரமுநீந்த்ரக்ரந்தமாலையின்
ஆவிஷ்கார நிகழ்ச்சி.

சென்ற ஸ்ரீராமாநுஜனிதழில் வெளியிட்டிருந்தபடி 19-10-66வ முதலைப்பசித் திருமூல நன்னாளினன்று மணவாள மாமுனிகள் ஸன்னிதியில் பகல் 3-மணிக்குத் திருப்பாவை சாத்துமுறை கோஷ்டியில் ஸ்ரீக்ரந்தமாலையின் அரங்கேற்றத் திருவிழா வெகு சிறப்பாக நடந்தேறியது. ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி. அழகிய மணவாள ராமாநுஜ யதீந்த்ரப்ரவணஜீயர்ஸ்வாமி, மாமுனிகள்ஸன்னிதி ஆதீனம் ஸ்ரீஉவே. வானமாமலை திருவேங்கடாசார்யஸ்வாமி, ஸ்ரீஉவே. திருமலை ஈச்சம்பாடி வரதாசாரியர் ஸ்வாமி, சென்னைப் பிரபல அட்வகேட், V. ராஜகோபாலாசார்ய ஸ்வாமி, ஸ்ரீஉவே காஞ்சீபுரம் அட்வகேட் N. S. பாஷ்யகாரர்ஸ்வாமி, ஸ்ரீஉவே. காஞ்சீபுரம் அட்வகேட். C. கண்ணமாசார்ஸ்வாமி, ஸ்ரீஉவே. நல்லப்பா. ஜீயப்பங்கார்ஸ்வாமி முதலான வைதிக லௌகிகத் தலைவர்கள் பலர் கூடியிருந்து அரங்கேற்றத்தைச் சிறப்புற நடத்தி வைத்தார்கள். சென்னையிலிருந்து ஸ்ரீமத் V. ராஜகோபாலாசாரியர் ஸ்வாமி எதிர்பாராதபடி இதற்கென்றே [டாக்டர்களின் கட்டளையையுங் கடந்து] எழுந்தருளி இந்த மஹா கோஷ்டியில் அந்வயித்தது அனைவர்க்கும் மஹத்தான ஆனந்தத்தையும் ஆச்சரியத்தையும் விளைத்தது.

மேலே குறித்த மஹான்கள் அனைவரும் அரங்கேற்ற ஸம்பந்தமாகச் சொற்பொழி வாற்றினார்கள். "இந்த க்ரந்தமாலை பலவாண்டுகட்கு முன்னமே வெளி வந்திருக்கவேண்டும்; மணவாள மாமுனிகள் இப்போதுதான் திருவுள்ளம்பற்ற ப்ராப்தமாயிற்று" என்பதே ஒவ்வொருவருடைய சொற்பொழிவினுடையவும் ஸாரமாயிருந்தது. ஸ்ரீஸூக்திகளின் பெருமையைப் பன்னிப் பகர்ந்தவர்களுமுண்டு.

ஸ்ரீக்ரந்தமாலை அன்று அரங்கேற்றமடைந்து விட்டாலும் அந்த ஸமயம் மழையின் கனத்தினால் அதிகமான பிரதிகள் பயிண்டு செய்விக்கப் படாமலிருந்தது. இப்போது க்ரமேண பயிண்டாகி வருகிறது முன்னாடிப் பொருளுதவி செய்த மஹான்களுக்கு ஸ்ரீகோசம் ரிஜிஸ்தர் தபால் மூலம் அனுப்பப்பட்டு வருகிறது. அபேக்ஷகர்கள் ஸ்ரீகோசத்தின் கிரயம் 25 ரூபாயும் தபால் செலவு 2 ரூபாயும் ஆக 27 ரூ. M. O. மூலம் அனுப்பிப் பெறலாமென்று ஸவிநயம் தெரிவிக்கப் படுகிறது. காலபரிஸ்திதிக்கு 25 ரூ. கிரயத்தை அதிகமென்று நினைக்கலாகாது. இருபத்தைந்து வருடங்களுக்கு முன் தெலுங்கு லிபியில் அச்சிட்ட இதே க்ரந்த மாலைக்கு 5 ரூ. 7 ரூ. தான் விலை வைத்திருந்தேன். அப்போது தெலுங்கு லிபியில் அச்சிட்ட பகவத்ராமானுஜ க்ரந்த மாலைக்கும் அப்படியே. இக்காலத்தில் காகிதத்தின் கிரயமும் அச்சுக்கூலிகளும் பயிண்டிங் சார்ஜும் திநே திநே ஏறிக்கொண்டேயிருப்பதால் இப்போது வைத்திருக்கிற ஸ்ரீகோசத்தின் கிரயத்தைக் குறைவென்றே நினைக்க வேண்டியதாகிறது. புஸ்தக ப்ரகாசனப்பணியில் கை வைத்திருக்குமவர்களுக்கு இஃது அறியவெளிதாம்.

ஆங்காங்கு புஸ்தக ப்ரசுரங்கள் செய்யுமவர்கள் லாபத்தைக் கருதியே பெரும்பாலும் செய்வது வழக்கம். இதுவரையில் அடியேன் அச்சிட்ட அனேக க்ரந்தமாலைகளுக்கு வரவு எவ்வளவு, செலவு எவ்வளவு? என்ற கணக்குப் பார்த்ததே கிடையாது. இப்போதும் அப்படியேதான். ஒரு அத்யவஸாயம் அடியேனுக்கு இயற்கையாகவே உண்டு; நாம் பிறக்கும்போது ஒரு காசும் உடன் கொண்டு வரவில்லை. பரமனடி சேரும்போதும் ஒரு காசும் கொண்டு போவதுமில்லை. அரை நாணையும் அறுத்துக்கொண்டு நம்மையனுப்புகிறார்கள். இடையில் ஏதோ தாண்டவமாடுகிறோம். ஐம்பது வருடங்களுக்கு மேற்பட்ட ஸ்வகீய அநுபவமொன்று விஜ்ஞாபிக்கிறேன். எம்பெருமான் செலவுகளை முன்னடி ஸங்கல்பித்தே வரவுகளைக் கற்பிப்பது இருபதாவது வயது முதல் கண்டு வருவதாம். சில நாட்களில் 100, 200, 500, 1000 இப்படி கையில் வந்து சேரும். அன்றே அதற்குச் செலவுகளையும் எம்பெருமான் ஸங்கல்பித்தே தீருவன். ஆதலால் அடியேன் வருமானங்களையுத்தேசித்துக் களிப்பது மில்லை; செலவுகளை நோக்கிக் கவர்வதுமில்லை. "களிப்புங் கவர்வுமற்று" என்ற ஆழ்வாரருளிச் செயல் அடியேனுடைய வாழ்க்கையில் பொருளுடைத்து.

ஈண்டு அடியேன் இவ்வளவுதூரம் ப்ரஸங்கிப்பதன் காரணத்தையும் சுருங்க வரைந்து நிற்கிறேன். ப்ரக்ருத க்ரந்தமாலைக்கு 25 ரூ. விலை வைத்ததைப்பற்றிச் சில மஹான்கள் அடியேனோடு தர்க்கிக்கத் தொடங்கி இங்கெழுதத்தகாதவற்றையும் இயம்பினார்கள். அதற்கு அடியேன் ஒரு விடையும் தாராது இங்கு இதை விஜ்ஞாபித்துக்கொண்டு மனச்சாந்தி பெற்றபடி. இந்த க்ரந்தமாலையிலுள்ள திவ்யக்ரந்த மொவ்வொன்றையும் தனித்தனிப் புத்தகமாக ஆக்கினோமாகில் மொத்தத்தில் முப்பதுருபாயாகுமென்பதை அவரவர்கள் எளிதாக வுணரக்கூடும். ப்ரவசந ப்ரவீணர்களாய் காலக்ஷேபபரர்களாயுள்ள மஹான்களுக்கு அடியேனே ஸமர்ப்பிக்க மநோரதித்திருக்கிறேன். ... ... (*)

மணவாளமாமுனிகள் மஹோத்ஸவம்.

நிகழும் ஐப்பசித்திங்களில் முதலில் கடந்த திருமூல நன்னாளும் எங்கும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அடுத்து வரப்போகிற திருமூல நன்னாளை முன்னிட்டே எங்கும் திருமூல மஹோத்ஸவம் நடைபெறும். 21வ ஞாயிற்றுக் கிழமையன்று உத்ஸவம் தொடக்கமாகி 30வ செவ்வாய்க்கிழமை திருமூலத்தன்று சாத்துமுறையாகும். (6-11-66 முதல் 15-11-66 வரை). இம் மஹோத்ஸவம் திவ்யதேசங்கள்தோறும் நடைபெற்றாலும், தேவப்பெருமாள் மணவாளமாமுனிகள் ஸன்னிதியில் நடைபெறும் வைகரி வேறெங்கும் ஸேவிக்க இயலாததாயிருக்கும். பத்துநாளும் காலை 10 மணி முதற்கொண்டே அலங்காரத் திருமஞ்சனத்திற்கு ஸந்நாஹமாகும். 12 மணிக்குத் திருமஞ்சனம் முடிவுபெற்றபின் அருளிச்செயல் ஸேவை தொடங்கி 3 அல்லது 3-30 மணிக்கு சாத்துமுறை யாகும். மாலை 6-30 மணிக்குமேல் திருவாசற்பந்தல் பத்தியுலாத்தல் புறப்பாட்டுக்கு ஸந்நாஹமாகி 8 மணிக்கு அது முடிந்தபின் திருவாய்மொழி ஸேவை தொடக்கமாகி 10-30 மணிக்கு சாத்துமுறை யாகும். இரண்டுவேளையும் அருளிச்செயல் ஸேவையின்

இனிமையைப்பற்றித் தெரிவிக்கவேணுமானால் ''கேட்டு ஆரார்வானவர்கள்செவிக்கினிய செஞ்சொல்லே'' என்னும் பாசுரத்தைத்தான் நினைக்கலாகும். ஜகதப்யுதயைகமூலமான சாத்துமுறை நன்னாளினன்று அறுபது நாழிகையும் மஹோத்ஸவமயமாகவே யிருக்கும். தேவப்பெருமாள் திருவீதி யலங்கரித்து மாமுனிகள் ஸந்நிதியேற வெழுந்தருளி ''ராத்ரிரேவ வ்யரம்ஸீத்'' என்னும்படியாக நடைபெறும் விசேஷங்களை நேரில் அநுபவித்து *அம்ருதஸாகராந்தர்நிமக்நஸர்வாவயவஸ்ஸுகமாஸீத* என்று எம்பெருமானாரருளிச்செய்த நிலையிலே நிற்க ப்ராப்தம். மறுநாள் இயற்பா ஆயிரமும் ஸேவித்து சாத்துமுறையாகும். தேவப்பெருமாள் ஸன்னிதியில் நடைபெறும் மஹோத்ஸவங்களுள் *இச்சுவை தவிர ... அச்சுவை பெறினும் வேண்டேன்* என்னத்தக்க ஸந்நிவேசம் இம் மஹோத்ஸவ ஸமயமொன்றே யென்பது அநுபவ ரஸிகர்களின் அந்தரங்கஅநுஸந்தானம். .... *

ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ காஞ்சீ நம்பிள்ளை மஹோத்ஸவ ப்ரகடனம்

(பராபவஹு 1966)

ஸ்ரீ காஞ்சீ தேவப்பெருமாள் ஸன்னிதியின் திருமுன்பே திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் நம்பிள்ளைக்கு நாளது கார்த்திகைமீ 3வ (18—11—66) வெள்ளிக்கிழமை உத்தராட நக்ஷத்திரத்தில் திருவவதார மஹோத்ஸவம் தொடக்கமாகி கார்த்திகைமீ 12வ (27—11—66) ஞாயிற்றுக்கிழமை திருக்கார்த்திகைத் திருநக்ஷத்திரத்தில் சாற்றுமுறையாகும். பத்து நாட்களிலும் அலங்கார திருமஞ்சனமும் இரண்டு வேளைகளிலும் திவ்யப்ரபந்த ஸேவை கோஷ்டிகளும் ததீயாராதனமும் விசேஷ வைபவமாக நடைபெறும். வித்வான்களின் உபந்யாஸங்களும் இடையிடையே நடைபெறும். ஆஸ்திகர்களனைவரும் வந்திருந்து அநுபவித்து ஆனந்திக்கவேணும். இம்மஹோத்ஸவ ஸேவார்த்தமாக வெளியூர்களிலிருந்து வரும் பக்த பாகவதோத்தமர்களுக்கு ஸ்தல வசதி முதலிய ஸௌகரியங்கள் விசேஷமாகச் செய்து கொடுக்கப்படும். ஸ்ரீவைஷ்ணவ பக்த சிகாமணிகள் குழாங்கூடியிருந்து அநுபவிக்கக் கூடிய மஹோத்ஸவமிது.

இரண்டாயிரம் ரூபாய் செலவில் விசேஷ வைபவங்களுடன் நடைபெற்று வருகின்ற இந்த மஹோத்ஸவத்திற்கு பக்தர்கள் உகந்து உபகரிக்கும் பொருளும் அபேக்ஷிதமாகும். அவரவர்கள் யதாசக்தி பொருளுதவி புரிந்து ஆசார்ய ஸார்வபௌமருடைய இம் மஹோத்ஸவத்தை மிகவும் சிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். .... *

இங்ஙனம்.

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம் **அண்ணங்கராசாரியர்,**

(நம்பிள்ளை ஸன்னிதி காவலாளர்.)

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திருக்குறுங்குடி திருஜீயர் மடம் ஸ்ரீகார்ய ஸ்வாமி எழுதுகிறர்

ஸ்ரீஸ்வாமி அழகியநம்பி ஸந்நிதி சித்திரகோபுரத்தில் மாண்புமிக்க கலைச் செல்வங்கள் அநேகமாயிரம் உள்ளன. அவற்றில் கல்லில் செதுக்கியுள்ள ஒரு பிம்பம் இருக்கிறது. அதன் வரலாறு தெரியவில்லை. சிற்பியின் மனோதர்மம் என்றும் கூறுவதற்கில்லை. ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி. பெரிய ஸ்வாமிக்கு இது விஷயம் தெரிந்திருக்கும். அடியோங்கள் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை. அதன் விபரம் கெருடாழ்வான் தனது மூக்கில் ஒரு வடவிருக்ஷத்தின் முறிந்த கிளையைக் கௌவிக்கொண்டும், வலது திருக்கையில் ஒரு யானையையும் இடது திருக்கையில் ஒரு கூர்மத்தையும் தூக்கிக்கொண்டு வாயுவேகமாகச்செல்லுகிறபடி. முறிந்த கிளையில் நான்கு ரிஷிகள் தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருக்கிறர்கள். ஸனகாதி மஹாயோகிகளாக இருக்கலாம் என்று ஊஹிக்கிறேன். கீழே தடாகம் ஒன்று இருக்கிறது; அது தடாகமோ அல்லது ஸமுத்ரமோ தெரியவில்லை. பக்கத்தில் ஒரு வடவிருக்ஷம் நிற்கிறது இவ்வளவேதான். பலரும் இது விருத்தாந்தத்தைக் கேட்கிறர்கள். பல பெரியார்களிடம் கேட்டும் தெரியவில்லை. இது எந்த புராணத்திலிருக்கிறது என்ற விஷயம் தேவரீருக்குத் தெரிந்திருக்குமாகில் அதன் விபரத்தை அருளிச் செய்யவேணுமென்று பிரார்த்திக்கிறேன். அல்லது ஸ்ரீராமாநுஜனில் இதை வெளியிட்டு அதன் வாயிலாகத் தெரிவித்தாலும் நலம்.

எம்பெருமானர் திருவடிகளே சரணம். ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத்வரவரமுநயே நம:

யதீந்த்ரரும் - யதீந்த்ரப்ரவணரும்.

மணவாள மாமுனிகளுக்கு யதிவரபுநரவதார பூதரென்னும் ப்ரஸித்தி தொன்று தொட்டு விளங்கி வருகின்றது. எம்பெருமானரே மீண்டும் மணவாள மாமுனிகளாகத் திருவவதரித் தருளினரென்றபடி. இதற்குரிய உபபத்திகள் பலவுண்டு. அதை முன்னம் ச்லோக ரூபேண விஜ்ஞாபித்துப் பின்னை வியாக்கியான மிட்டு விளக்குகின்றேன்.

(ச்லோ.) [illegible]

(ச்லோ) வ்யாக்க்யாநக்ரந்ததாநாத் பரிவதநகதாகந்தவைதேசிகத்வாத்
நாநாசாஸ்த்ரார்த்தப்ருந்தப்ரசுரபணிதிபி: ப்ராஜ்ஞஹ்ருத்ரஞ்ஜகத்வாத்.
பூர்வாசார்யோக்திராகாத் சடரிபுமுநிராட்ஸூக்திஸம்வர்த்தகத்வாத்
பீடாதீசப்ரதிஷ்டாபநக்ருதிகரணாத் திவ்யதேசாபிமாநாத்.
பணிராஜாவதாரத்வாத் ஸ்ரீரங்கஸ்ரீவிவர்த்தநாத்,
யதீந்த்ரப்ரவணஸ் ஸாக்ஷாத் யதீந்த்ரோ பாஷ்யக்ருத் த்ருவம்.

—இதற்கு ஸங்க்ஷேபமான வியாக்கியானம் காண்மின்—

1. வ்யாவ்யாநக்ரந்தாநாத்=வ்யாக்க்யாநக்ரந்த தாநாத். பெரும்பாலும் வியாக்கியானங்களருளிச் செய்வதிலேயே ஊக்கம் எம்பெருமானுர்க்கும் மாமுனிகளுக்கு மொக்கும். ஸ்ரீபாஷ்யம், வேதாந்த தீபஸாரங்கள், கீதாபாஷ்யம் என்னுமிவை வியாக்கியான க்ரந்தங்களேயன்றே. மாமுனிகளின் வியாக்கியான க்ரந்தங்களும் ப்ரஸித்தங்கள். வேதார்த்த ஸங்க்ரஹம் கத்யத்ரயம்-என்று சில மூலக்ரந்தங்களும் ஸ்வாமி ஸாதித்தது போலே மாமுனிகளும் யதிராஜ விம்சதி உபதேசரத்தினமாலை முதலிய மூலக்ரந்தங்களுமருளிச் செய்தது ப்ரஸித்தம்.

2. பரிவதநகதாகந்தவைதேசிகத்வாத்=பரிவதநகதாகந்த வைதேசிகத்வாத். பரிவதநமாவது பரீவாதம்; நிந்தையென்றபடி. ஸ்தாநேயோ அஸ்தாநேயோ நிந்தாபரிஹாஸங்களை நிரப்பி நூல்களெழுதுவாருமுளரே; அங்ஙனம் நிந்தையையோ பரிஹாஸத்தையோ அணுவளவும் புகவிடாமல் பரமபவித்திர ஸ்ரீ ஸூக்திகளையருளுந்தன்மை ஸ்வாமிக்கும் மாமுனிகளுக்குமேயொக்கும்.

3. நாநாசாஸ்த்ரார்த்தப்ருந்தப்ரசுரபணிதிபி: ப்ராஜ்ஞஹ்ருத்ரஞ்ஜகத்வாத் = நாநா சாஸ்த்ரார்த்த ப்ருந்தப்ரசுரபணிதிபி: ப்ராஜ்ஞஹ்ருத் ரஞ்ஜகத்வாத். தொட்ட தொட்ட விடமெங்கும் பலபல சாஸ்த்ரார்த்தத் திரள்களே மலிந்த ஸ்ரீஸூக்திகளினுலே பண்டிதர்களின் உள்ளத்தை உகப்பிக்குந்தன்மை ஸ்வாமிக்கும் மாமுனிகளுக்குமேயொக்கும்.

4. பூர்வாசார்யோக்திராகாத்=பூர்வாசார்யோக்திராகாத். எம்பெருமானுர் ஸ்ரீபாஷ்யம் தொடங்கும் போதே "பகவத் போதாயந க்ருதாம் விஸ்தீர்ணம் ப்ரஹ்மஸூத்ரவ்ருத்திம் பூர்வாசார்யாஸ் ஸஞ்சிக்ஷிபு:, தந்மதாநு ஸாரேண ஸூத்ராக்ஷராணி வ்யக்க்யாஸ்யந்தே." என்றருளிச் செய்து பூர்வாசார்ய ஸூக்திகளில் தமக்குள்ள அபிநிவேசாதிசயத்தை விளங்கக் காட்டியருளினுர். மாமுனிகளும் *முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் கேட்டு* முன்னவராம் நங்குரவர் மொழிகள் உள்ளப் பெற்றோம் முழுதும் நமக்கவை பொழுது போக்காகப் பெற்றோம்* இத்யாதிகளாலே தமக்குள்ள பூர்வாசார்யஸூக்தி பஹுமானத்தைக் காட்டியருளினதோடு நில்லாமல். தம்முடைய வியாக்கியானக்ரந்தங்களைப் பூர்வாசார்யஸூக்திமயமாகவே அவதரிப்பித்தருளினுர்.

5. சடரிபுமுநிராட்ஸூக்திஸம்வர்த்தகத்வாத்= சடரிபுமுநிராட்ஸூக்தி ஸம்வர்த்தகத்வாத். ஸ்வாமியின் வாழி திருநாமத்திலே *மாறனுரை செய்த தமிழ் மறைவளர்த்தோன் வாழியே* என்று ஓதா நின்றோம். *ஆய்ந்த பெருஞ்சீரார் சடகோபன் செந்தமிழ் வேதந்தரிக்கும் பேராதவுள்ளம் பெற-ஏய்ந்த பெருங் கீர்த்தியிராமானுச முனி தன் வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன்* என்று அக்காலத்து சிஷ்யவர்க்கங்கள் பணிக்கக் காணுநின்றோம். இதுபற்றி மாமுனிகள் திறத்திலே சொல்லவேணுமோ? *சேற்றுக் கமல வயல் சூழரங்கர் தம் சீர்தழைப்பப் போற்றித்தொழு நல்லவந்தணர்வாழ விப்பூதலத்தே, மாற்றற்ற செம்பொன் மணவாளமாமுனி வந்திலனேல், ஆற்றில் கரைத்த புளியல்லவோ தமிழாரணமே. என்றவொரு பாசுரம் போதுமே.

6. पीठाधीशप्रतिष्ठापनकृतिकारणात्=பீடாதீசப்ரதிஷ்டாபநக்ருதி கரணாத். ஸ்வாமி எழுபத்து நான்கு ஸிம்ஹாஸநாதி பதிகளை ஸ்தாபித்தருளி அவர்கள் வழியாக தர்சந நிர்வாஹம் செய்தருள்வது ஸுப்ரஸித்தம். *லக்ஷ்மீநாதாக்ய ஸிந்தௌ சடரிபுஜலத:* இத்யாதிச்லோக ரத்னத்திலும் இது ஸுவ்யக்தம். மாமுனிகளும் "திரமாக திக்கஜங்களிட்டருளும் பெருமாள்" என்கிறபடியே அஷ்டதிக் கஜாசாரியர்களை ஸ்தாபித்தருளி அவர்கள் வழியாக தர்சந நிர்வாஹம் செய்தருள்வது நாடு நகரமும் நன்கறிந்தது.

7. दिव्यदेशाभिमानात्=திவ்யதேசாபிமாநாத். (இதற்கு இரண்டு வகையாகப் பொருள்.) *மன்னியதென்னரங்காபுரி மாமலை மற்றுமுவந்திடு நாள்* என்றும், *ஸ்ரீரங்கம் கரிசைல மஞ்ஜநகிரிம் தார்க்ஷ்யாத்ரி ஸிம்ஹாசலௌ........ ஸ்ரீரங்கேசஜயத்வஜோ விஜயதே ராமாநுஜோயம் முநி:* என்றும் சொல்லுகிறபடியே ஸ்வாமி ஸகல திவ்யதேசங்களிலும் அபிமானம் காட்டியருளினவர். மாமுனிகளும்* அடைவுடனே திருப்பதிகள் நடந்த வேர்வையாறவோ * என்கிறபடியே திவ்யதேசயாத்திரைகள் செய்தருளி அவற்றில் அபிமானம் காட்டியருளினபடி ஸுப்ரஸித்தம். (அதவா) திவ்ய தேசாபிமாந மாவது—திவ்ய தேசச்ரேணியில் சேராதிருந்த ஸ்தலத்தை திவ்யதேசமாக அபிமானித்தல். ஸ்வாமி திருநாராயண புரத்திற்கு * ஒரு நாயகமாய் * என்கிற திருவாய்மொழியை ஸமர்ப்பித்து அத்தலத்தை திவ்யதேசமாக அபிமாநித் தருளினதும், மாமுனிகள் ராஜமன்னார் ஸன்னிதிக்கு * தீர்ப்பாரையாமினி * என்கிற திருவாய்மொழியை ஸமர்ப்பித்து அப்பதியை திவ்யதேசமாக அபிமானித் தருளினதும் அநுஸந்தேயம்.

8. फणिराजावतारत्वात्=பணிராஜாவதாரத்வாத். ஸ்வாமி சேஷாவதாரமென்பது ஸுப்ரஸித்தம். கருடவாஹன பண்டிதர் பணித்த திவ்யஸூரி சரிதத்திலும், வடுகநம்பி பணித்த யதிராஜவைபவத்திலும் மற்றும்பல பிரபந்தங்களிலும் இது விசதம். மாமுனிகள், வரவரமுநி शतकத்திலே *துக்தோதந்வத் தவளமதுரம் சுத்தஸத்வைகரூபம் ரூபம் யஸ்யஸ்புடயதிதராம் யம் பணீந்த்ராவதாரம் * என்றருளிச்செய்தபடியும் மற்றும் சரித்ரப்ரஸித்தியின்படியும் திருவனந்தாழ்வான் திருவவதார பூதரென்பது ஸுவ்யக்தம்.

9. श्रीरङ्गश्रीविवर्धनात्—ஸ்ரீரங்கஸ்ரீவிவர்த்தநாத். ஸ்வாமி * தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்திவைத்தான் வாழியே* என்று எண்டிசையும் வாழ்த்து கிறபடியும், கோயிலொழுகு முதலானவற்றில் காண்கிற இதிஹாஸ விஸ்தாரப்படியும் ஸ்ரீரங்கஸ்ரீயை வளர்த்தருளினவர் என்பது விச்வவிதிதம். மாமுனிகள் திறத்து மிங்ஙனமே யன்றோ? "அரங்கநகர்வாழ இன்னுமொரு நூற்றாண்டிரும்" என்றன்றோ நிச்சலும் வாழ்த்துகின்றதுலகம்.

ஆக இத்தன்மைகளாலே, யதீந்த்ரப்ரவணஸ் ஸாக்ஷாத் யதீந்த்ரோ பாஷ்யக்ருத் த்ருவம்—யதீந்த்ரப்ரவணரென்று திருநாமம் பெற்ற மணவாளமாமுனிகள் ஸாக்ஷாத் எதிராசரே யென்னத்தட்டில்லையென்றதாயிற்று. இங்ஙனே நிர்வஹிக்கக்கூடிய உபபத்திகள் மற்றும்பலவுள. அவற்றை அடியேனுடைய பிறநூல்களிற் கண்டுகொள்வது. ....*

ஸ்ரீரஸ்து.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:

அஷ்டாதசாஷ்டாதச மஹார்த்தநிதியில் முமுக்ஷுப்படி திருமந்த்ர ப்ரகரணத்தில் பதினெட்டு.

குறிப்பு — முமுக்ஷுப்படி மூன்று ப்ரகரணங்களிலுமாகப் பதினெட்டு மஹார்த்தங்களை விளக்குவதாக முன்னம் பிரதிஜ்ஞை செய்யப்பட்டுள்ளது. அவ்வளவால் த்ருப்தி விளையாதென்று கருதி ஒவ்வொரு பிரகரணத்திலும் பதினெட்டு மஹார்த்தங்கள் விளக்கப் படுகின்றன. ஆக முமுக்ஷுப்படிக்குள் ஐம்பத்து நான்கு மஹார்த்தங்கள் தேறும். ப்ர-அ.]

1. முமுக்ஷுக்களுக்கு உபஜீவ்யங்களான ஸகல க்ரந்தங்களினுள்ளும் ரஹஸ்ய க்ரந்தங்களே மிகச் சிறந்தவை. ரஹஸ்யார்த்தங்களில் தெளிவுள்ளவர்களுக்கே இதிஹாஸ புராண மஹார்த்தங்களும் பகவத்விஷயார்த்தங்களும் ரஸிக்கும். ஆகவே ரஹஸ்யார்த்தங்களில் தெளிவுபெற வேண்டியது முக்கியம். திருமந்த்ரம், த்வயம், சரமச்லோகம் என்கிற மூன்று ரஹஸ்யங்களின் பொருளை பட்டர் அஷ்டச்லோகி யென்கிற வடமொழிச் சிறுநூலில் அதிஸங்க்ஷேபமாகவருளிச் செய்தார். தேவப்பெருமாளுடைய அபராவதார பூதரும், வடக்குத் திருவீதிப் பிள்ளையின் திருக்குமாரரும் ஸர்வஜ்ஞருமான பிள்ளை லோகாசாரியர் தாம் ரஹஸ்யார்த்த விவரணக்ரந்தங்களை மிக விரிவாகவும் அழகாகவும் அநவத்யமாகவும் அருளிச் செய்தவராவர். அஷ்டாதசரஹஸ்யமென்று ஸுப்ரஸித்தமானக்ரந்தஜாலம் பிள்ளைலோகாசாரியர்பணித்ததே.

2. உபதேச ரத்தினமாலையில் *ஓராண் வழியாய்* என்னும் பாசுரத்தில்*ஏராரெதிராசரின்னருளாலென்று தொடங்கிப் பரமகாருணிகராகப் போற்றப்பட்ட எம்பெருமானார் தாமும் ப்ரபந்தரூபேண வெளியிட்டருளாமல் மறைத்து வைத்திருந்த மஹார்த்தங்களைப் பிள்ளைலோகாசாரியர் ஒருவரே பல பிரபந்தங்களினால் வெளியிட்டருளினவராதலால் க்ருபாமாத்ரப்ரஸந்நாசார்யர்களில் எம்பெருமானாரைக் காட்டிலும் இவரே முதல் ஸ்தானம் பெற்றவராவர். இப்பேராசிரியர் மூலமருளிச் செய்திருந்தும், ஸூத்ரம் போன்ற அந்த திவ்ய ஸூக்திகளின் பொருளையும் கருத்தையுமறிவதற்கு வழியில்லா திருந்த காலத்தில் விசதவாக்சிகாமணிகளான மணவாளமாமுனிகள் தேனும் பாலுமமுதுமான வியாக்கியானங்களையிட்டருளி மஹோபகாரம் செய்தருளினவராதலால் பிள்ளை லோகாசாரியரையுங் காட்டில் மணவாள மாமுனிகளே பரமகாருணிகரென்று போற்றுதற்குரியராவர். மாமுனிகளின் வியாக்கியானங்கள் திருவவதரிக்க வில்லையென்றால் உபயவேதாந்தங்களிலும் மற்று எத்தனை க்ரந்தங்கள் அவதரித்திருந்தும் அவை பகல்விளக்கு என்னத்தக்கவையேயாகும்.

3. பிள்ளை லோகாசாரியர் அருளிய அஷ்டாதச ரஹஸ்யங்களுள், யாத்ருச்சிகப்படி, பரந்தபடி, ச்ரிய:பதிப்படி என்னும் க்ரந்தங்கள் ரஹஸ்யத்ரய வியாக்கியானமாக அவதரித்திருந்தவைகளிருந்தாலும் முமுக்ஷுப்படி யென்னும் திவ்யக்ரந்தமே பலபடியாலும் பெருமை பெற்று விளங்கா நின்றது. மற்ற க்ரந்தங்கள் அதிஸங்க்ரஹம், அதிக விஸ்தரம் ஸம்ஸ்க்ருத வாக்ய பாஹுள்யம் முதலியவற்றால் குறைபெற்றிருக்குமென்றும், அவ்வகைக் குறைகளுக்கு இடமின்றியே அவை யெல்லாவற்றுக்கும் பின்பு முமுக்ஷுப்படி யென்னும் திவ்யக்ரந்தம் அருளிச் செய்யப்பட்டதென்றும், இதன் சீர்மையைக் கண்டு ஆஸ்திகர்கள் அனைவரும் இந்த கந்தரத்னத்தையே விசேஷித்துப் பரிக்ரஹிக்கலாயினர் என்றும் மணவாள மாமுனிகளின் ஸ்ரீஸூக்தியிலிருந்து அறியக்கிடக்கின்றது. மற்ற க்ரந்தங்களில் அருளிச் செய்யப்படாத பல அபூர்வ விஷயங்களும் இதனில் குடிகொண்டிருக்கின்றன வென்பதும் இதற்குத் தன்னேற்றம். [இனி க்ரந்தத்திலிறங்குவோம்.] ... ... *

பகவன்மந்த்ரங்களின் பாகுபாடும் திருமந்த்ரத்தின் சிறப்பும்.

4. திருமந்த்ரம், த்வயம், சரமச்லோகம் என்கிற மூன்று ரஹஸ்யங்களும் முமுக்ஷுக்களுக்கு நித்யாநுஸந்தேயங்கள். இவற்றுள் திருமந்த்ரமென்கிறது ஸ்ரீமதஷ்டாக்ஷர மஹா மந்த்ரம். இது ஸ்ரீபதரிகாச்ரமத்திலே வெளியிடப்பட்டது. எம்பெருமானைப் பற்றின மந்த்ரங்கள் அபரிமிதங்களாயிருக்கும். அவற்றுள் வ்யாபகமந்த்ரங்களென்றும் அவ்யாபக மந்த்ரங்களென்றும் இரு வகுப்புண்டு. பகவானுடைய ஸர்வத்ர வ்யாப்தியைத் தெரிவிக்கும் மந்த்ரங்களே வ்யாபகமந்த்ரங்களெனப்படும். அவை எவை யென்னில், விஷ்ணு மந்த்ரம், வாஸுதேவ மந்த்ரம், நாராயண மந்த்ரம் என்பவை. இம்மூன்று மந்த்ரங்களே பகவானுடைய மற்றெல்லா மந்த்ரங்களிற் காட்டிலும் சிறந்தவை. இம்மூன்றினுள்ளும் நாராயண மந்த்ரமே மிகச் சிறந்தது. விஷ்ணு மந்த்ரமானது ஆறெழுத்துடையதாகும். வாஸுதேவ மந்த்ரமானது பன்னிரண்டெழுத்துடையதாகும். நாராயண மந்த்ரமானது எட்டெழுத்துடையதாகும். இதனையே திருவஷ்டாக்ஷர மஹா மந்த்ரமென்பர். இதன் பெருமையையே ஆழ்வார்கள் "எட்டெழுத்து மோதுவார்கள் வல்லர் வானமாளவே" என்பது முதலான பல பல பாசுரங்களினால் வெளியிட்டுள்ளார்கள்.

திருமந்த்ரத்தின் முதற் பதமான ப்ரணவத்தின் பொருள்விளக்கம்.

5. இந்த மந்த்ரத்தில் முதற்பகுதி (ஓம்) என்னும் ப்ரணவம். அகாரம், உகாரம், மகாரம் ஆகிய மூன்றெழுத்துக்கள் சேர்ந்து (ஓம்) என்று ஒரே எழுத்தாயிற்று. ஸகல ஜகத்துக்கும் காரண பூதனும் ஸர்வரக்ஷகனுமான எம்பெருமானைச் சொல்லுகிறது அகாரம். எம்பெருமான் ஸ்ரீ மஹாலக்ஷ்மியோடு கூடியிருந்தே ரக்ஷணத் தொழிலை நடத்தவல்லவனாதலால் இவ்வகாரத்திலே பிராட்டியையும் சேர்த்து அநுஸந்திக்க வேணுமென்பது நூற்கொள்கை. அகாரத்தின் மேல் நான்காம் வேற்றுமையுருபு ஏறியிருந்து அது வேதத்திற்கு உரிய இலக்கணத்தினால் லோபமடைந்து விட்டது. அதன் பொருள் உரிமைப் பட்டிருத்தல் (சேஷத்வம்) ஆகும். மூன்றாவதான எழுத்தாகிய மகாரத்திற்கு அறிவுள்ளவனான [சேதனனாகிய] ஜீவாத்மா அர்த்தமாதலால், ஜீவாத்ம ராசிகளெல்லாம் பகவானுக்கும் பிராட்டிக்கும் சேஷப்பட்டவை என்றதாயிற்று. இடையில் இருக்கின்ற உகாரத்தின் பொருள் யாதெனில் வடமொழியில் அவதாரணப் பொருள் எனப்படும். தமிழில் பிரிநிலைப் பொருளெனப்படும். ஸ்ரீமந்நாராயணனொருவனுக்குத் தவிர மற்ற எவர்க்கும் சேஷப்பட்டவனல்லன் என்றதாகத் தேறிற்று. உலகில் ஒருவனுக்கு உரியவனானவன் மற்றும் பலர்க்கும் உரிமைப்பட்டிருத்தலைக் காணாநின்றோம். இங்கு அப்படியல்லாமல் நாராயணனுக்கு சேஷப்பட்டவன் நாராயணனுக்கேயன்றி மற்றொருவற்கும் சேஷப்பட்டவனல்லன் என்றதாயிற்று. இதுதான் உகாரத்தில் தேறின பொருள். ஆக, ப்ரணவத்தினால் எம்பெருமானுக்கே உரிமைப் பட்ட தன்மையும் பிறர்க்கும் தனக்கும் உரிமைப்படாத தன்மையும் சொல்லிற்றாயிற்று.

நம:பதார்த்த விவரணத்தில் விரோதிகளின் விவரணமும் அவை கழியும்விதங்களும்

6. இனிமேல் (நம:) என்பதும் (நாராயணாய) என்பதும் நிற்கிறது. இவை மந்த்ர சேஷ மெனப்படும். இதனால் கீழ்ப் பிரணவத்தில் (ஓம் என்றதில்) சொன்ன பொருளே விவரிக்கப்படுகிறது. (நம;) என்பதனால் விரோதி கழிக்கப்படுகிறது. மூன்று வகையான விரோதிகள் அறியத்தக்கன. ஸ்வரூப விரோதி யென்றும், உபாய விரோதி யென்றும், புருஷார்த்த விரோதி யென்றும் விரோதிகள் மூவகைப்படும். அஹங்கார மமகாரங்களோடு கூடியிருக்கும் நிலை ஸ்வரூப விரோதி யெனப்படும். அந்த நிலையை ஆழ்வார் "யானே யென்னை

யறியகிலாதே யானே யென்றனதே யென்றிருந்தேன்'' என்ற பாசுரத்தினுலும், இந்த விரோதி கழிந்த நிலையை "யானே நீ என்னுடைமையும் நீயே'' என்ற பாசுரத்தினுலும் அநுஸந்தித்துக் காட்டியருளினுர். இனி, தன்னைக் காப்பாற்றிக் கொள்ளத் தான் முயற்சி செய்கை உபாய விரோதியெனப்படும். அது கழிந்த நிலையை ஆழ்வார் "களைவாய் துன்பம் களையா தொழிவாய் களைகண் மற்றிலேன்'' என்ற பாசுரத்தினுல் காட்டினுர், நமது துன்பத்தை எம்பெருமான் தீர்த்தாலும் தீர்க்காவிட்டாலும் ஒருவிதமான முயற்சியையும் செய்யகில்லோம் என்றிருக்கையே உபாய விரோதி கழிந்த நிலையாகும். இனி புருஷார்த்த விரோதியாவது, பலனை யனுபவிக்கும்போது அதனுல் தான்ஆனந்தப்படுகை. அது இவனுக்குத் தகாது. அந்த ஆனந்தம் எம்பெருமானுடையதே யென்று கொண்டிருக்கை—புருஷார்த்த விரோதி கழிந்த நிலையாகும். இது *மற்றை நங்காமங்கள் மாற்று*என்ற ஆண்டாள் பாசுரத்தில் காணத்தகும். ஆக, இம்மூன்று விரோதிகளின் கழிவும் (நம:) என்னுமதில் தெரிவிக்கப்படுகிறது.

பாகவத சேஷத்வம் உய்த்துணரும் வகையும் அதன் பெருமையும்

8. இனி (நம:) என்றவதின் ஆழ்பொருள் விவரிக்கப்படுகின்றது. ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் பகவானுக்கு சேஷப்பட்டிருப்பதிற் காட்டிலும் பாகவதர்களுக்கு சேஷப்பட்டிருத்தல் மிகச் சிறந்ததாகக் குலாவப்படுகிறது. திருமங்கையாழ்வார் "மற்றுமோர் தெய்வமுளதென் றிருப்பாரோடுற்றிலேன், உற்றது முன்னடியார்க் கடிமை, மற்றெல்லாம் பேசிலும் நின் திருவெட்டெழுத்தும் கற்று நான் கண்ணபுரத்துறையம்மானே'' [பெரிய திருமொழி 8-10-3] என்றருளிச் செய்துள்ள பாசுரத்தையே முக்கியமான பிரமாணமாகக் கொண்டு பாகவத சேஷத்வத்தைத் திருமந்திரத்திற்குத் தலையான பொருளாகக் கூறுவர் பேராசிரியர்கள். இதில் எந்த எழுத்தினுல் (அல்லது) எந்த பதத்தினுல் பாகவத சேஷத்வம் தெரிவிக்கப்படுகிறதென்று ஆராய வேண்டும். ஒன்றினுலும் தெரிவிக்கப்படவில்லையென்றே நினைக்கக் கூடியதாயிருக்கும். அப்படியில்லை; ப்ரணவத்தில் அகாரத்திலே இதை யநுஸந்திப்பாருளர். எங்ஙனே யென்னில்: அகாரத்தின்மேல் சதுர்த்தி விபக்தி [நான்காம் வேற்றுமை யுருபு] ஏறிக் கழிந்திருப்பதாக (லோபித்திருப்பதாக)க் கீழே விவரிக்கப்பட்டது. லுப்த சதுர்த்தியோடு கூடின அந்த அகாரத்தினுல் பகவானுக்கு சேஷப்படுந் தன்மை தெரிவிக்கப்பட்டதன்றே. பாகவத சேஷத்வ மென்பது பகவத் சேஷத்வத்தின் எல்லைநிலமே யாதலால் அந்த அகாரத்திற்குப் பொருளுரைக்கும்போதே இதையும் சேர்த்துப் பொருளாக வுரைத்திடுவர்கள் சில ஆசாரியர்கள். வேறு சிலர், அந்த அகாரத்திற்கு அடுத்த உகாரத்திலேயும் பாகவத சேஷத்வத்தை யநுஸந்திப்பர்கள். எங்ஙனே யென்னில்: உகாரத்தினுல் பகவானுக்குத் தவிர மற்றையோர்கட்கு சேஷப்பட்டவனல்லன் என்பது [அநந்யார்ஹத்வம்] தெரிவிக்கப்படுகிறதல்லவா? பாகவதர்கள் பகவானுடைய திருவடிஸ்தானத்திலேயே சேர்ந்தவர்களாகையாலே, உகாரத்தின் பொருளை அநுஸந்திக்கும்போதே இந்த பாகவத சேஷத்வத்தையும் சேர்த்து அநுஸந்திப்பர்களென்றதாயிற்று.

பாகவத சேஷத்வத்தை நம: பதத்தில் அநுஸந்திப்பதின் ஔசித்ய நிரூபணம்

9. ஆகவிப்படி முதற்பதமான ப்ரணவத்திற்குள்ளேயே பாகவத சேஷத்வம் அநுஸந்திக்கத் தக்கதாயிருந்தாலும் இடையிலுள்ள (நம:) என்னும் பதத்திலே இதனை யநுஸந்திப்பது மிகவும் பொருத்தமானதென்று பேராசிரியர்களின் திருவுள்ளம். ஏனென்னில்: அஹங்கார மமகாரங்களை அறவே விட்டுத் தொலைத்தவர்களுக்கே பாகவத சேஷத்வம் ருசிக்கும். நமச்சப்தார்த்தம் ஊறவூற அஹங்கார மமகாரங்கள் அறவே நீங்குமாதலால், இங்

நனம் நீங்கப்பெற்ற அதிகாரிகளுக்கே பாகவத சேஷத்வம் உறைத்திருக்குமென்றுகொண்டு நம் ஆசார்யர்கள் பாகவத சேஷத்வத்தை (நம:) என்பதிலே அநுஸந்திக்கும்படி நியமித்தருளினது மிகப் பொருத்தமானது.

பகவச் சேஷத்வத்தின் காஷ்டையே பாகவத சேஷத்வம் - என்னும் மருமமுணர்த்துதல்

10. பாகவத சேஷத்வம் என்பதன் உண்மை ஸ்வரூபத்தை யறியாதார் பலர் இதில் ஆக்ஷேபங்களைச் செய்து கொண்டிருப்பர்கள்; பகவானுக்கே அடிமைப்பட்டிருக்கக் கடமைப்பட்டிருக்கின்ற நாம் வேறு சில வழிப்போக்கர்களுக்கு அடிமைப் படுகையாவது என்? ப்ரணவத்தில் உகாரத்தினால் உறுதி செய்யப்பட்ட அநந்யார்ஹ சேஷத்வத்தோடு முரண்பட்டதன்றோவிது; இதைத் திருமந்திரார்த்தமாகக் கொள்வது எப்படி சேரும்? என்று ஆக்ஷேபிப்பதுண்டு. அன்னவர்களைத் தெளிவிக்கிறோம். ஒரு வஸ்துவிலே நாம் அன்பு வைத்தால் அவ்வன்பு அந்தவொரு வஸ்துவோடு முடிந்து நிற்பதில்லை; அத்தோடு ஸாக்ஷாத் ஸம்பந்தமும் பரம்பரா ஸம்பந்தமும் பெற்ற வஸ்துக்களிலேயும் அன்பு பரந்து செல்லா நின்றது. மனைவியினிடத்திலே கணவன் வைக்கிற அன்பு அவளோடு ஸம்பந்த ஸம்பந்தம் பெற்றவர்களிடத்தும் பெருகிச் செல்வதை எங்கும் காண்கிறோம். எம்பெருமானும் நம்மிடத்திலே வைக்கிற அன்பு நம்மளவிலே நிற்காமல் "கேசவன் தமர் கீழ்மேலெமரேழெழு பிறப்பும் மாசதிரிது பெற்று" என்று ஆழ்வார் அருளிச்செய்கிறபடியே நம்மோடு உறவுபெற்றோரிடத்திலும் பெருகிச் செல்வதை இதிஹாஸ புராணகதைகளினாலுமறிகிறோம். இவ்விதமாகவே நம்முடைய அன்பும் எம்பெருமானளவிலே சுவறிப் போகாமல் அடியாரடியார் தம்மடியாரடியார் தமக்கடியாரடியார் பக்கலிலும் பெருகிச் சென்றால் இது பகவத் பக்தியின் உறைப்பேயொழிய வேறன்று. ஆக, பாகவத பக்தியென்பது பகவத் பக்தியின் ஒரு காஷ்டையே யொழிய வேறுபட்டதன்று என்றதாயிற்று. இதில் செய்யும் ஆக்ஷேபங்கள் இதன் உண்மையை உணராதார் செய்யுமவையத்தனை யென்று விடுக்க.

நாராயண பதார்த்த விவரணமும், ஸ்வரூபதோநித்ய - ப்ரவாஹதோநித்யங்களின் விவரணமும்

11. இனி (நம:) என்பதற்கு அடுத்ததான நாராயண பதத்திற்குப் பொருள் விவரிக்கப்படுகிறது. நார-அயந என்று இரண்டு பதங்கள் சேர்ந்து நாராயண என்றாகிறது. நாரங்களுக்கு அயநமாயிருப்பவன் நாராயணன். நித்ய வஸ்துக்களின் திரள்களுக்கு ஆதாரமாயிருப்பவனென்றபடி. நாராயணன் நித்ய வஸ்துக்களுக்கு ஆதாரமாயிருந்தால் அநித்ய வஸ்துக்களுக்கு ஆதாரமாயிருப்பவன் யாவன்? என்று கேள்வி பிறக்கும்; கேண்மின்; வேதாந்த ஸித்தாந்தத்தில் அநித்ய வஸ்துவே கிடையாது; எல்லாம் நித்ய வஸ்துக்களேயாகும். அழிந்தொழியும் பொருள்களை நாம் கட்கூடாகக் காணாநிற்க, அநித்ய வஸ்துவே கிடையாதென்றால் எப்படி பொருந்துமென்று கேள்வி பிறக்கும். இங்குத் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயமாவது—நித்ய வஸ்துக்கள் இருவகைப்படும்; ஸ்வரூப நித்யமென்றும், ப்ரவாஹ நித்யமென்றும். எப்போதும் எவ்விதத்தாலும் அழிவில்லாத பொருள்கள் ஸ்வரூப நித்யமெனப்படும். ஆன்மா, மூலப்ரக்ருதி, காலம் முதலானவை இந்த வகுப்பிற் சேர்ந்தவை. இனி ப்ரவாஹ நித்ய வஸ்துக்கள் எவையென்னில்: உற்பத்தியையும் விநாசத்தையுமுடையனவாக இருக்கச் செய்தேயும் முன்னிருந்த நாமம் உருவம் லிங்கம் முதலானவற்றின் மாறுபாடின்றிக்கேயிருக்கப்பெற்ற பொருள்கள் ப்ரவாஹ நித்யங்களெனப்படும். பஞ்ச பூதங்களின் விகாரப் பொருள்களாக உலகிற் காணப்படுகின்ற செடி கொடி மரம் பானை துணி முதலான ஸகல வஸ்துக்களும் ப்ரவாஹ நித்யங்களாம். ஒரு பானை உடைந்து போனாலும் அதே விதமான பல பானைகளை என்ஞான்றும் காணாநின்றோம்; ஒரு துணி கிழிந்து போனாலும்

அதே விதமான பல துணிகளை எங்களும் பார்க்கின்றோம். இங்ஙனே ஒவ்வொரு பொருளின் விஷயத்திலும் கண்டுகொள்ளலாம். இவையெல்லாம் ப்ரவாஹதோ நித்யமெனப்படும்.

ப்ரஸங்காத் உத்பத்தி விநாசஸ்வரூபத்தின் உபபாதனம்

12. அன்றியும், வேதாந்திகளின் மதத்தில் ஒரு வஸ்துவுக்கும் புதிதாக உற்பத்தியும் அழிவும் ஒப்புக்கொள்ளப்படவில்லை. ஒரு அவஸ்தையிலிருந்து மற்றோரவஸ்தைக்கு மாறுவதே உற்பத்தியாகும். அந்த நிலைமையினின்று மற்றோர் நிலைமைக்கு வருவதே விநாசமாகும்; ஆக ஸூக்ஷ்மாவஸ்தைக்கும் ஸ்தூலாவஸ்தைக்கும் மாறி மாறி வருவதே உத்பத்தி விநாசங்களாகையாலே இந்த வகையில் எல்லாப் பொருள்களையும் நித்யங்களென்று கொள்ளக் குறையில்லை. நாராயண னென்பதற்குப் பொருள் அருளிச் செய்யா நின்ற பிள்ளை லோகாசார்யர் முமுக்ஷுப்படியில் "நாராயண னென்றது, நாரங்களுக்கு அயந மென்றபடி; நாரங்களாவன நித்ய வஸ்துக்களினுடைய திரள்" என்று பணித்து உடனே அந்த நித்ய வஸ்துக்களை விவரிக்கத் தொடங்கி, "அவையாவன—ஜ்ஞாநாநந்த அமலத்வாதிகளும்...பெரிய பிராட்டியார் தொடக்கமான நாச்சிமார்களும் நித்யஸூரிகளும்...ப்ரக்ருதியும் பத்தாத்மாக்களும்...அண்டங்களும் அண்டத்துக்குட்பட்ட தேவாதி பதார்த்தங்களும்" என்று அருளிச் செய்தார். இதனால் விண்ணுலகிலும் மண்ணுலகிலும் ஒரு பொருளையும் விடாமல் எல்லாமும் நாரமென்னுஞ் சொல்லுக்குப் பொருளாகச் சொல்லிற்றாயிற்று. இப்பொருள்களுக்கெல்லாம் ஆதாரமாயிருப்பவன் நாராயணன்—என்று முடிக்கப்பட்டது.

நாராயண பதத்தின் தத்புருஷ பஹுவ்ரீஹி ஸமாஸங்களினால் தேறின பொருள்

13. பகவான் இப்பொருள்களிலே யிருக்கின்றானா? அல்லது இப்பொருள்கள் பகவானிடத்து இருக்கின்றனவா? என்று பார்க்குமளவில் இரண்டு வகைக்கும் குறையில்லையென்றே நூற்கள் கூறுகின்றன. எல்லாப் பொருள்களிலும் பகவானுளன்; எல்லாப் பொருள்களும் பகவானிடத்து உள்ளன என்பதே நூற்கொள்கை. பகவானிடத்துள்ள பரத்துவம் ஸௌலப்யம் என்கிற இரண்டு திருக்குணங்களும் மேற்கூறிய இருவகைப் பொருள்களினாலும் விளக்கம் பெற்றனவாகும். எங்ஙனே யென்னில்: எல்லாப் பொருள்களும் பகவானிடத்தே யுள்ளன வென்னும்போது எல்லாப் பொருள்களுக்கும் தான் ஆதாரமாயிருக்கையாகிற பரத்துவம் விளங்கிற்றாகும். எல்லாப் பொருள்களிலும் பகவானுளன் என்னும் போது அறப் பெரியனான தான் ஸகல சேதநாசேதநங்களிலும் தன்னை அமைத்துக் கொண்டு புகுந்திருக்கையாகிற ஸௌலப்யம் [எளிமை] விளங்கிற்றும். ஆக நாராயணபதத்தின் பொருள் ஒருவாறு விவரிக்கப்பட்டதாயிற்று.

நாராயண பதத்தின் மேலுள்ள விபக்தியினால் கைங்கர்ய ப்ரார்த்தனை செய்யும்விதம்

14. இனி நாராயண பதத்தின் மேலுள்ள நான்காம் வேற்றுமையின் பொருளாவது, கைங்கர்ய ப்ரார்த்தனை யென்பர்; அதாவது, நாராயணனுக்கே எல்லா வடிமைகளும் செய்யப் பெறுவேனாக வேணுமென்று கோரப்படுகிற தென்கை. எவ்விதமான கைங்கர்யம் செய்ய வேணும்? என்கிற கேள்விக்கு இடமில்லை; ஸகல தேசங்களிலும் ஸகலகாலங்களிலும் ஸகலாவஸ்தைகளிலும் ஸகலவிதமான கைங்கர்யங்களையும் செய்வதற்கே இட்டுப் பிறந்தோம். இதனை நம்மாழ்வார் 'ஒழிவில் காலமெல்லாமுடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்ய வேண்டு நாம்" என்கிற பாசுரத்தினால் தெளிவித்தார்.

கைங்கர்ய ஸ்வரூபசோதனமும், கைங்கர்யத்தில் இருவகைகளின் நிரூபணமும்

15. கைங்கர்யம் செய்வது மனம் மொழி மெய்களாலும் பொருளாலுமாகக் கூடியது. இவற்றுள் மனத்தினுலும் வாக்கினுலும் கைங்கரியம் செய்வதில் அருமையில்லை; உடலைச் சிரமப்படுத்தி அடிமை செய்வது அரிது; அதுதான் முக்கியமானது. பொருளைச் செலவு செய்து கைங்கரியம் செய்வதுதான் மிகச் சிறந்ததென்று சிலர் நினைக்கக் கூடும்: அது மிகத் தாழ்ந்ததென்பதை நிரூபிக்கிறோம் காண்மின்: ஒருவன் தவறு செய்து ராஜ தண்டனைக்கு உட்படுகிறுன்; அரசன், ஒரு மாதம் கடுங்காவல், அல்லது ஆயிரம் ரூபாய் அபராதம் என்று விதித்தால் எப்படிப்பட்ட ஏழையும் சிரமப்பட்டாகிலும் பணத்தைச் செலுத்தப் பார்க்கிறுனே யொழிய, தேஹத்தை நலிவுறுத்தக் கூசி சிறைவாஸத்திற்கு உடன்படுவதில்லை. இதனுல் அனைவர்க்கும் தேஹத்திலே தான் அதிகமான அன்பு என்றும், பொருளில் அன்பு கிடையாதென்றும் கண்டுகொள்கிறோ மல்லவா? நாம் எதை அதிகமாக அபிமானிக்கிறோமோ அதைச் சிரமப்படுத்திச் செய்யும் கைங்கர்யமே சிறந்ததாகுமென்பதில் தட்டில்லை. ஆகவே, திரவியத்தைக்கொண்டு செய்யும் பணிவிடையிற்காட்டிலும் உடலைக் கொண்டு செய்யும் பணிவிடையே மிகச் சீரியதென்று தேறுகின்றது. கோவில்களில் எம்பெருமானுக்குத் திருத் தேர்த் திருவிழா நடைபெறுகின்றது; அன்பர்களே! திருத்தேரை யிழுக்க வாருங்கள் என்றழைத்தால், பத்தெட்டு ரூபாயைக் கொடுத்துக் கைகூப்பி நிற்கும் அதிகாரிகளே மலிந்துள்ளார்கள். உடலைச் சிரமப்படுத்திக் கைங்கரியம் செய்வோமென்று குதுகலிப்பவர்கள் மிகச் சிலரே. அத்தகைய கைங்கர்யமே எம்பெருமானுக்குப் பரம ப்ரீதியை விளைக்கும். இங்கு ஒன்று கேட்கலாம்; ஒருவற்குப் பணிவிடை செய்வதென்பது உலகில் கிலேசமாகக் காணப்படுகிறதேயொழிய ஆனந்தமாகக் காணப்படவில்லை. "ஸேவா ச்வவ்ருத்தி ராக்யாதா தஸ்மாத் தாம் பரிவர்ஜயேத்" என்று மநுமஹர்ஷியும் கூறியுள்ளார்; இதன் பொருளாவது பணிவிடை செய்வதென்பது நாய்த்தொழிலாதலால் அதனை விட்டுவிடவேண்டு மென்பதாம். ஆனந்தமயனுன ஆன்மா ஆனந்த ஹேதுவான செயல்களைச் செய்து ஆனந்தப்பட வேண்டியிருக்க, கிலேசத்திற்கே ஹேதுவாள பணிவிடையைச் செய்துவருந்தலாமோ வென்பர். இதற்கு ஸமாதானம் கேண்மின்; உலகிற் பணிவிடைகள் இரண்டு வகையாகவுண்டு. தேஹபோஷணத்திற்காகப் பணிவிடை செய்வது ஒன்று; அதாவது கூலி வேலை செய்வது. ஆத்மானந்தத்திற்காகப் பணிவிடை செய்வது மற்றொன்று. அதாவது பகவத் பாகவதாசார்ய விஷயத்திற் கைங்கரியஞ் செய்வது

கைங்கரியம் துக்கரூபமன்று என்பதன் நிரூபணம்

16. இவற்றுள் முந்தின பணிவிடையினுல் கிலேசம் விளையுமே யல்லது பிந்தின பணிவிடையினுல் சிறிதும் கிலேசம் விளையாது; பரமானந்தமே கொந்தளிக்கும். சிஷ்யன் ஆசார்யனுக்குச் செய்யும் பணிவிடைகளையும், காமுகன் காமினிக்குச் செய்யும் பணிவிடைகளையும் பார்க்கின்றோம். இவை வெகு மகிழ்ச்சியுடன் நடைபெறுகின்றன வென்பதை உலகிற் காண்கிறோம்.

17. துஷ்யந்த மஹாராஜன் வேட்டையாடிக்கொண்டு செல்லும்போது ஒரு மஹர்ஷியின் ஆச்ரமத்தில் இளைப்பாறப் புகுந்தான்; அங்கே சகுந்தலை யென்னும் தெய்வமாதைக் கண்டு காதல் கொண்டான்; அவளோடு ஸம்பாஷிக்கவும் பெற்றுன்; அப்போது சொல்லுகிறுன் :—"ஸம்வீஜயாமி நளிநீதள தாளவ்ருந்தை:, அங்கே நிதாய கரபோரு! யதாஸுகம் தே ஸம்வாஹயாமி சரணுவுத பத்மதாம்ரௌ" என்கிறுன்; சகுந்தலையின் முகத்தில் வேர்வை நீர் பெருகுவதைக் கண்டு அரசன் பொறுக்கமாட்டிற்றிலன்; தாமரையிலையை

விசிறியாகக் கொண்டு விசிறட்டுமா? உன்னுடைய பாத பல்லவங்களை மடியிலே யிட்டுக் கொண்டு நோவு தீர வருடட்டுமா? என்று கேட்கிறான்; கேட்டுக்கொண்டே அப் பணிவிடை களையும் செய்கிறான். இவனோ சக்ரவர்த்தி: அவளோ ஒரு காட்டுப் பெண்; காதல் விளைந்ததே காரணமாகக் கைங்கர்யம் செய்வதில் அன்பு ததும்பிய குதூஹலம் விளைகின்றது. இதனால் என்ன தெரிந்துகொள்ளுகிறோம்; உகப்பில்லாதவிடத்தில் செய்யநேரும் பணிவிடையே துக்க ரூபமானதென்றும், உகப்புள்ளவிடத்தே செய்ய ப்ராபதமாகும் கைங்கர்யமானது ஆனந்த மயமாகவே யிருக்குமென்று முணருகிறோம்.

கைங்கர்ய ப்ரார்த்தனை பண்ணுவது ஸ்வரூபாநுரூபமேயென்று சொல்லித் திருமந்த்ரப் பொருளை நிகமித்தல்

18. ஆகவே எம்பெருமானிடத்தில் ஸ்வரூபத்தாலும் திருக்குணங்களடியாகவும் உகப்புகொண்டவர்களுக்குக் கைங்கர்யம் ருசித்திருக்குமே யொழிய க்லேச ரூபமென்று வெறுக்கத் தக்கதாயிராதென்று தெரிந்துகொள்ளுகிறோம். இவ்விஷயத்தைப் பிள்ளை லோகா சார்யர் எவ்வளவு அழகாகத் தெரிவித்தருளுகிறார் பாருங்கள்— "சேஷத்வம் துக்கரூபமாக வன்றோ நாட்டில் காண்கிறதென்னில்; அந்த நியமமில்லை; உகந்த விஷயத்துக்கு சேஷமா யிருக்குமிருப்பு ஸுகமாகக் காண்கையாலே" என்பது அவ்வாசார்ய சிகாமணியின் திவ்யஸூக்தி. வேதார்த்த ஸங்க்ரஹமென்னும் நூலின் முடிவில் ஸ்வாமி ராமாநுஜர் தாமும் அருளிச்செய்த அர்த்தமிது. கைங்கர்யப் பிரார்த்தனை செய்வது ஸ்வரூபாநுரூபமே யாதலால் *நாராயணாய வென்பதனால் அது செய்யப்படுவதில் குறையொன்றுமில்லை யென்க. ஆக இவ்வளவாலும் திருமந்திரப் பொருள் விளக்கப்பட்டதாயிற்று. ... (*)

திருமந்த்ரத்தில் பதினெட்டு மஹார்த்தநிரூபணம் முற்றிற்று.

முமுக்ஷுப்படி - த்வய ப்ரகரணத்தில் பதினெட்டு

த்வயமந்த்ரத்தின் ஏற்றத்தை விரியவுரைத்தல்

1. நமது ஸம்பிரதாயத்தில் திருமந்திரத்திற் காட்டிலும் த்வயத்திற்கே ஏற்ற மதிகம். திருமந்திரத்திற்கு மந்த்ரராஜமென்று பெயர்; த்வயத்திற்கு மந்த்ர ரத்ன மென்று பெயர். ராஜாவும் விரும்பக்கூடிய வஸ்து ரத்னமாதலால் ரத்னமென்று திருப்பெயர் பெற்ற த்வயமே சிறந்ததாகும். மூன்று ரத்னங்கள் பிரஸித்தமாக வழங்கப் பெறுகின்றன. பராசரமஹர்ஷி பணித்த விஷ்ணு புராணம் புராண ரத்னமென்றே ப்ரஸித்திபெற்றது. "ஸந்தர்சயந் நிரமிமீத புராண ரத்நம் தஸ்மை நமோ முனிவராய பராசராய" என்றருளிச் செய்தது காண்க. ஆளவந்தாரருளிச் செய்த ஸ்தோத்ரமானது ஸ்தோத்ரரத்னமென்றே புகழ்பெற்றொளிர்கின்றது. த்வயமந்த்ரம் மந்த்ரரத்னமென்று வழங்கப்பெறுகின்றதென்று சொன்னோம். எறும்பியப்பா பணித்த மணவாள மாமுனிகளின் திநசர்யையில் "மந்த்ரரத்நாநுஸந்தாந ஸந்தத ஸ்புரிதாதரம், ததர்த்ததத்வ நித்யாந ஸந்நத்த புலகோத்கமம்" என்றருளிச் செய்திருப்பது காண்க. திருமந்த்ராநுஸந்தானத்திற்குக் காலநியதியுண்டு; த்வயாநுஸந்தானத்திற்கு அஃது இல்லை. சரணாகதி கத்யத்தில் "த்வயம் அர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதா ஏவம் வக்தா யாவச்சரீரபாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ" என்று எம்பெருமானார்க்கு அழகிய மணவாளன் இட்டருளின கட்டளை. நம் பூர்வாசாரியர்கள் அந்தேவாஸிகளையும் அந்தரங்கர்களையும் ஆசீர்வதிக்க வேண்டுமிடத்து "திருமந்த்ரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து த்வயைகநிரதராவீர்" என்று ஆசீர்வதிப்பர்களென்று ப்ரஸித்தம். திருமந்திரத்திற் காட்டிலும் சரமச்லோகத்திற் காட்டிலும் த்வயம் மிகச் சிறந்ததென்பதை யாவரும் எளிதாகவறியலாம். எங்ஙனேயென்னில்;

"இதிலே ஸ்ரீ ஸம்பந்த மநுஸந்தேயம்" என்று பிள்ளை யுலகாசிரியரருளிச் செய்தபடியே திருமந்திரத்தில் பிராட்டி ஸம்பந்தம் ஆர்த்தமாகக் கிடைப்பதேயன்றி ஸ்பஷ்டமாகவில்லை. சரமச்லோகத்தில் லக்ஷ்மீஸம்பந்த ப்ரஸ்தாவமே செய்தார்களில்லை. இக்குறைதீர த்வயத்தில் பூர்வகண்டத்தின் தொடக்கத்திலும் உத்தர கண்டத்தின் தொடக்கத்திலும் லக்ஷ்மீஸம்பந்தம் ஸுஸ்பஷ்டமாக விளங்காநிற்பது ஒரு விசேஷம். அவ்விரண்டு ரஹஸ்யங்களிலும் திருவடிகளின் ப்ரஸ்தாவமேயில்லாமை பெரியகுறை. அக்குறையும் தீர இதில் திருவடிகளையே தஞ்சமாகக் காட்டிக்கொடுத்தது மற்றொரு விசேஷம். ஆகப் பல படிகளால் த்வயத்தின் சிறப்பை அறிவித்தோமானோம்.

வைஷ்ணவாதிகாரிக்கு அவச்யாபேக்ஷிதங்களை நிரூபித்தல்

2. ஸ்ரீவைஷ்ணவனாயிருப்பானொருவனுக்கு த்வயரஹஸ்யம் மிகவும் உபாதேயம். இந்த ப்ரஸங்கத்திலே வைஷ்ணவாதிகாரிக்கு அவச்யாபேக்ஷிதங்களானவற்றை முந்துற முன்னம் தெரிந்துகொள்ள வேண்டுவதும் முக்கியமாகும். பத்து விஷயங்கள் வைஷ்ணவாதிகாரிக்கு அவச்யாபேக்ஷிதங்களாம். அவையாவன: - *பிதரம் மாதரம் தாராந்* இத்யாதிப்படியே பாஹ்ய விஷய ஸங்கங்களையடைய மறுவவிடாதபடி ஸவாஸநமாக விடுகை. (2) வேறொன்று தஞ்சமென்கிற நினைவு கலசாதபடி நிருபாதிகரக்ஷகனை ஸர்வேச்வரனையே தஞ்சமாகப் பற்றுதல் (3) பேறு கனத்திருப்பதையும் அதற்குரிய உபாயம் நம்பக்கலில் இல்லாமையையும் நாம் செய்யும் பாபங்கள் அளவு கடந்திருப்பதையும் நோக்கித் தளும்பாமல் பலன் தப்பாது கைபுகும் என்று விச்வஸித்திருக்கை. (4) இப்படி விச்வஸித்து 'பேறுஸித்தித்தபோது காண்கிறோம்' என்று ஆறியிராமல் * தாவி வையங்கொண்ட தடந்தாமரைகட்கே கூவிக்கொள்ளுங் கால மின்னங் குறுகாதோ*என்கிறபடியே க்ரமப்ராப்தி பற்றாமல் பதறுகை. (5) பரமபதத்திலே போய் பகவதநுபவகைங்கரியங்களைப் பண்ணுகையாகிற பேற்றில் பதற்றம் நடவாநிற்கச் செய்தேயும் இந்த வுடம்போடேயிருக்கும் வரை திவ்ய தேசங்களிலே *கண்டியூரரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லையென்று மண்டுகையாகிற ப்ராவண்யத்தை யுடையனாய், அந்த திவ்ய தேசங்களிலே நிற்கிறவனுடைய கல்யாண குணாநுபவமும், அது அடியாகக் கரணத்ரயத்தாலும் அவன் விஷயத்தில் பண்ணும் கைங்கர்யமுமே காலக்ஷேப விஷயமாம்படி யிருக்கை. (6) கீழ்ச் சொன்ன விவையெல்லா முடையராயிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களைக்கண்டால் 'இந்தளத்திலே தாமரை பூத்தாற்போல இந்த விபூதியிலே இப்படியும் சில மஹான்கள் உண்டாவதே!' என்று அவர்களது வைபவத்தை யறிந்து உகந்திருக்கை. (7) இதர மந்த்ரங்களின் அருகே மறந்தும் செல்லாமல், த்யாஜ்யோபாதேயங்களைத் தெளியவறிவிக்கும் திருமந்த்ரத்திலும் அதின் அர்த்தத்திற்கு விவரணமான த்வயத்திலும் நிஷ்டனாயிருக்கை. (8) கீழ்ச் சொன்னவற்றையெல்லாம் உபதேசத்தாலே தனக்குண்டாக்கின ஆசார்யன் விஷயத்தில் பக்தி அதிசயித்திருக்கை. (9) நித்ய ஸம்ஸாரியான தன்னை நித்ய ஸூரிகளநுபவிக்கும் பேற்றுக்கு உரியனாம்படி இரும்பைப் பொன்னாக்குவாரைப்போல திருத்தின அந்த ஆசார்யனிடத்திலும், அந்த ஆசார்ய ஸம்பந்தத்தை யுண்டாக்கின எம்பெருமானிடத்திலும் இடையறாது நன்றி பாராட்டுதல். (10) தான் கலங்கினாலும் கலங்காமல் நோக்குவதற்காகவும் கீழ்ச் சொன்னவை தனக்கு வளர்ந்து செல்லுகைக்காகவும் ஜ்ஞாந பக்த விரக்தி சாந்தி ஸம்பந்நனாய்ப் பரமஸாத்விகனாயிருப்பானொரு பாகவதனோடே ஸஹவாஸம் பண்ணுகை-ஆக இவை இத்தனையும் வைஷ்ணவனென்றிருப்பானொரு அதிகாரிக்கு அவச்யாபேக்ஷிதங்கள்.

த்வயத்தின் பொருளின் மேன்மையை விரிவாக விளக்குதல்.

3. இனி த்வயத்திற் சொல்லுகிற அர்த்தத்தின் அதிசயத்தை யறிவிப்போம். ஸகல சாஸ்த்ரங்களிலும் இன்னது சொல்லுகிறது, திருமந்திரத்தில் இன்னது சொல்லுகிறது,

சரம ச்லோகத்தில் இன்னது சொல்லுகிறது என்று தெரிந்துகொண்டு பிறகு த்வயத்திற் சொல்லுகிறது இன்னது என்று தெரிந்துகொண்டால் நலமாகும். ஸகல சாஸ்திரங்களுக்கும் சேதநனுடைய விசிஷ்ட வேஷத்திலே நோக்கு, விசிஷ்ட வேஷமாவது தேஹவிசிஷ்ட வேஷம். ப்ராஹ்மணாதி வர்ணதர்மங்களைப் பற்றியும் ப்ரஹ்மசர்யாதி ஆச்ரமதர்மங்களைப் பற்றியும் பேசுவதே ஸகல சாஸ்திரங்களுக்கும் விஷயமாகையாலும், அந்த வர்ணாச்ரமங்கள் தேஹத்தைப் பற்றிநிற்கையாலும் ஸகல சாஸ்திரங்களுக்கும் தேஹவிசிஷ்ட வேஷத்திலே நோக்கு என்னத் தட்டில்லை. அப்படிப்பட்ட ஸகல சாஸ்திரங்களிலும் தேறுகிற அர்த்தமாவது—ஸாதநாநுஷ்டான யோக்யமான தேஹத்தாலே இவனுக்குப் புருஷார்த்த லாபம் என்பதாம். திருமந்திரத்திற்கு சேதநனுடைய நிஷ்க்ருஷ்ட வேஷத்திலே நோக்கு. (அதாவது, சுத்த ஆத்மவஸ்துவிலே நோக்கு என்றபடி.) திருமந்திரமானது ஸகலாத்மாக்களுக்கும் பொதுவான தன்மையைத் தெரிவிப்பதேயன்றி ஜாத்யாச்ரம ஸம்பந்தியான விஷயமொன்றையும் தெரிவிப்பதல்லாமையாலே திருமந்திரத்திற்கு நிஷ்க்ருஷ்ட வேஷத்திலே நோக்கு என்னத் தட்டில்லை. அப்படிப்பட்ட திருமந்திரத்தில் இவன் தன்னைத்தான் ரக்ஷித்துக்கொள்வதில்நின்றும் கைவாங்கினாலொழிய ஈச்வரனுடைய ரக்ஷகத்வம் ஜீவியாமையாலே அந்த ஈச்வரனுடைய ப்ரவ்ருத்திக்கு விரோதியான ஸ்வப்ரவ்ருத்தியை விட்டிருக்கும் ஆத்மாவாலே புருஷார்த்தலாபம் என்கிறது. நம:பதார்த்தப்ராதாந்யத்தையிட்டு இங்ஙனே சொல்லுகிறதென்க. ஈச்வரனுடைய ஸ்வாதந்திரியத்திலே நோக்கான சரம ச்லோகத்தில் இவனுடைய ஸ்வீகாரமும் மிகையாம்படி தானே கைக்கொண்டு ப்ராப்தி ப்ரதிபந்தகங்களான ஸகலபாபங்களையும் தள்ளிப்பொகட்டுத் தன் திருவடிகளிலே சேர்த்துக்கொள்ளும் ஈச்வரனாலே புருஷார்த்தலாபமென்கிறது. இனி, ஈச்வரனுடைய லக்ஷ்மீவிசிஷ்ட வேஷத்திலே நோக்கான த்வயத்திலோவென்னில், விசேஷணபூதையான பெரிய பிராட்டியாராலே புருஷார்த்த லாபமென்கிறது. பேறுபெறுவதற்கு தேஹமும் வேணும், ஆத்மாவும் வேணும், ஈச்வரனும் வேணும், பிராட்டியும் வேணும்; முக்கியமாக வேண்டுவது பிராட்டியாகையாலே அவளாலே புருஷார்த்தலாபமென்று தெரிவிக்கிற த்வயம் மிகச் சிறந்தது என்றதாயிற்று. உபாயம் எம்பெருமானாயிருக்க, பெரிய பிராட்டியாராலே புருஷார்த்த லாபமென்றால் என்ன அர்த்தம்? என்னில், இவனுடைய குற்றங்களைப் பாராதே ரக்ஷிக்கும்படி இவள் புருஷகாரமானாலொழிய எம்பெருமான் இவனுக்குக் காரியம் செய்யானென்பதே தேறின தாற்பரியம்.

த்வயாதிகாரியின் அருமையும், த்வயத்தின் திரண்ட பொருளும்

4. ஸித்தோபாய வரணத்தைக் கூறுமதான த்வய ரஹஸ்யத்திற்கு அதிகாரிகள் கிடைப்பது அரிது. ஆகிஞ்சந்யமும் அநந்ய கதித்வமுமாகிற இரண்டு முடையவனே த்வயாதிகாரியாவான். ஆகிஞ்சன்யமாவது—*நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்* என்கிறபடியே ஒருவிதமான கைம்முதலுமில்லாமை; அநந்யகதித்வமாவது—* புகலொன்றில்லாவடியேன்* களைகண் மற்றிலேன்* என்கிறபடியே வேறு ரக்ஷகனை நெஞ்சிலும் நினையாமை. ஆக இவ்விரண்டும் வாய்க்கப்பெற்ற அதிகாரியே த்வயாதிகாரியாவான். இரண்டு கூறாக [கண்டங்களாக] இருக்கின்ற இந்த த்வயத்தில் முதற்கண்டத்தினால்—பெரிய பிராட்டியாரைப் புருஷகாரமாகப் பற்றி எம்பெருமான் திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறது. ஸ்ரீமத் என்பதனால் பெரிய பிராட்டியாரை முன்னிடுகிறது; நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே என்பதனால் எம்பெருமான் திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறது. உத்தரகண்டத்தாலே, பெரிய பிராட்டியாரும் அவனுமான சேர்த்தியிலே கைங்கரியம் பண்ணவேணுமென்கிற ப்ரார்த்தனை காட்டப்படுகிறது. [ஸ்ரீமதே என்று பிராட்டிய மவனுமான சேர்த்தி; நாராயண

பதத்தின் மேலுள்ள சதுர்த்தி கைங்கர்யப் பிரார்த்தனையைக் காட்டும். நமஸ்ஸு கைங்கர்ய விரோதி நிவ்ருத்தியைக் காட்டும்.]

த்வயத்தின் பிரதிபதார்த்த விவரணங் காட்டுதல்

5. இனி, பிரதிபதார்த்தம் விவரிக்கப்படுகிறது. ஸ்ரீ என்கிற சொல்லுக்கு ஸம்பத்து முதலியவைகளும் பொருளானாலும் இங்கே இச் சொல் பெரிய பிராட்டியார்க்குத் திருநாமமாயிரா நின்றது. *ஸ்ரீரிதி ப்ரதமம் நாம லக்ஷ்ம்யா:* என்கிற ப்ரமாண வசனம் காண்க. ''ஸ்ரீரித்யேவ ச நாம தே'' என்றார் ஆளவந்தாரும். இந்த ஸ்ரீ சப்தமானது, *ச்ரீஞ்—ஸேவாயாம்* என்கிற தாதுவிலே இரண்டுவகையான வ்யுத்பத்தியால் நிஷ்பந்நமாகும். ஸ்ரீயதே இதி ஸ்ரீ; (இது கர்மணி வ்யுத்பத்தி,) ச்ரயதே இதி ஸ்ரீ; (இது கர்த்தரி வ்யுத்பத்தி) கர்மணி வ்யுத்பத்தியில் எல்லாராலும் ஸேவிக்கப்படாநின்றாள் என்று பொருள்படுகின்றது. ஸகல சேதநர்கட்கும் இவளைப்பற்றியே தங்களுடைய சேஷத்வரூபமான ஸ்வரூபம் ஸித்திக்குமென்றவாறு. கர்த்தரி வ்யுத்பத்தியில் ஈச்வரனை இவள் ஸேவியா நின்றாளென்று பொருள்படுகிறது. இவள் தனக்கும் ஈச்வரனைப்பற்றித் தன்னுடைய ஸ்வரூப லாபமாயிருக்குமென்றவாறு. ஸகல சேதந விஷயத்தில் சேஷித்வத்தையும் ஈச்வர விஷயத்தில் சேஷத்வத்தையும் உடையவள் என்று ஸ்ரீ சப்தார்த்தம் தேறிற்றாயிற்று. எம்பெருமானுக்கு உபாயத்வமும் உபேயத்வமுமாகிற இரண்டு தன்மைகளுண்டானாப்போலே இவளுக்குப் புருஷகாரத்வமும் உபேயத்வமுமாகிற இரண்டு தன்மைகளுண்டு; புருஷகாரத்வமென்கிற தன்மையை நினைத்து இப்போது இவளைச் சொல்லுகிறது. உபாய வஸ்துவில் விசேஷணமாயிருக்கிற தன்மையையிட்டு இவளுக்கும் உபாயத்வமுண்டென்கிற பக்ஷம் சேராது. இதை நாம் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ஸாரநிதி, ஸத்ஸம்ப்ரதாயஸுதாநிதி முதலிய நூல்களிலே பரக்க உபபாதித்தோம். வேதாந்தவாசிரியரும் ரஹஸ்யரத்நாவளி முதலிய ரஹஸ்யங்களிலும் சரணாகதிகத்ய பாஷ்யத்திலும் "பிராட்டிக்குப் புருஷகாரத்வம் மட்டுமேயுள்ளது, எம்பெருமான்தான் பலப்ரதன்'' என்பதைப் பன்னிப்பன்னிப் பேசியுள்ளார்.

பிராட்டியின் புருஷகாரத்வத்தின் ஆவச்யகத்வமுணர்த்துதல்

6. எம்பெருமானுடைய நாராயணத்வ ப்ரயுக்தமான ஸ்வாபாவிக ஸம்பந்தத்தைத் தெரிந்துகொண்டு அவனை ஆச்ரயிக்கிற இச் சேதநனுக்கு இவளைப் புருஷகாரமாக முன்னிட வேண்டிய அவசியம் என்ன? என்னில்; குளிர்ந்த ஜலத்திலுங்கூடக் கொடிதான நெருப்பு [படபாக்நி] கிளருமாபோலே, ஸர்வ பூத ஸுஹ்ருத்தானவன் திருவுள்ளத்திலே சேதனன் அளவுகடந்து பண்ணின அபராதமடியாகச் சீற்றம் பிறப்பதுமுண்டே; அங்ஙனே சீற்றம் பிறந்தால் அவ்வபராதத்தைப் பொறுப்பது இப் பிராட்டிக்காக. இவள் தன்னுடைய உபதேசாதிகளாலே அச் சீற்றத்தையாற்றி தயையையுண்டாக்குவள். ஆகையாலே ஸம்பந்த வுணர்ச்சியுள்ளவனுக்கும் அபராத பயத்தாலே புருஷகாரத்தை முன்னிடுகை அவசியமேயென்க. பிராட்டியின் புருஷகாரம் அவ்வளவு காரியம் செய்யுமோவென்னில், *அகில ஜகந்மாதரம்* என்கிறபடியே சேதநர்கட்கு இவள் மாதாவாய், அந்த ஸம்பந்தமடியாக இவர்களுடைய வருத்தம் கண்டு பொறுத்திருக்கமாட்டாதேயிருக்கிறவொரு தன்மையும், எம்பெருமானுக்குப் பத்நியாய் *பித்தர் பனிமலர்மேல் பாவைக்கு* என்கிறபடியே அவன் தன் வைலக்ஷண்யத்தைக் கண்டு பிச்சேறித் தன் சொற்படி நடக்கும்படி அபிமதவிஷயமாயிருக்கிறவொரு தன்மையும் உடையளாகையாலே ஒருவகையாலும் விபலமாக மாட்டாத புருஷகாரம். உலகில் புருஷ

காரம் செய்பவர்களுக்கு இரண்டு தன்மைகள் வேண்டும்; எவர் விஷயத்தில் புருஷகாரம் செய்யவேணுமோ அவர் விஷயத்தில் நெஞ்சார்ந்த அன்பு இருக்கவேண்டியது ஒன்று, யாரிடத்தில் புருஷகாரம் செய்யவேணுமோ அவரிடத்தில் தம் வாக்கு வெற்றிபெற்றே தீரும் படியான வால்லப்ய மிருக்கவேண்டியது மற்றொன்று. இவ்விரண்டும் பிராட்டியிடத்தே புஷ்கலமென்று நிரூபிக்கப்பட்டதாயிற்று.

ப்ரஸங்காத் பிராட்டியின் திருவாக்கின் வெற்றியை நிரூபித்தல்

7. இதெல்லாம் வாஸ்தவந்தான்; ஈச்வரனோ கேட்பாரற்ற ஸ்வதந்திரன்; அன்னவன் சேதநருடைய குற்றங்களை நிறுத்து அவற்றுக்குத் தக்கபடி தண்டனை செலுத்தியே தீர்வேன் என்று நிற்குமளவில் பிராட்டிதான் என்ன செய்ய முடியும்? என்னில்; இது இவளுடைய செய்தியறியாதார் செய்யும் ஆக்ஷேபமாகும். இவள் சிறையிருந்த காலத்தில் இவளைப் பத்துமாதம் இடைவிடாது படாத பாடுகளும் படுத்தின ராக்ஷஸிகளின் கொடுமையை மரத்தின்மேல் மறைந்திருந்து கண்ட அனுமான் "பெருமாள் வெற்றிபெற்ற பின்பு இவர்களைப் பார்த்துக்கொள்வோம்'' என்று ஆறியிருந்து, ராவணவதமான பின்பு ஓடிவந்து "இவ்வரக்கிகளின் அபராதங்களைக் கணக்கிட்டு சித்திரவதம் பண்ண நினைத்திருக்குமெனக்கு இடமளிக்கவேணும்' என்று (பிராட்டியை நோக்கிக்) கேட்டவளவிலே, சொல்மிறுங்கனை அவ்வனுமானையுமுட்பட இவள் உபதேசத்தாலே பொறுப்பித்தாளென்பது ஸ்ரீராமாயணப் பிரஸித்தம். [*பாபாநாம் வா சுபாநாம் வா* இத்யாதி.] அப்படிப்பட்டவிவள் *அல்லி மலர் மகள் போகமயக்குக்களாகியும் நிற்குமம்மான்* என்கிறபடியே தன் போக்யதையிலே மிகவும் ஈடுபட்டிருப்பவனாய், *நின்னன்பின் வழி நின்று சிலைபிடித்தெம்பிரானேக* என்கிறபடியே 'மாயாமிருகத்தின் பின்னே போ' என்றாலும் விளைவதறியாதே அதின் பின்னே தொடர்ந்து போமவனாய் இப்படி தனக்கு விதேயனாய் ரஸிகனா யிருக்குமவனைப் பொறுப்பிக்க வல்லளென்பது சொல்லவேணுமோ?

பூர்வகண்டத்தில் ஸ்ரீமத் பதார்த்த நிரூபணம்

8. 'ஸ்ரீமத்' என்கிற பதத்தில் ப்ரக்ருதியான ஸ்ரீ என்பதன் பொருள் விவரிக்கப்பட்டதாயிற்று. அதன்மேல் ஏறிக்கிடக்கும் மதுப்பென்கிற ப்ரத்யயத்தின் பொருள் கேண்மின். 'எப்போதும் கூடியிருத்தல்' என்னும் பொருளில் 'மதுப்பு' வந்திருப்பதாகக் கொள்க. "நித்யயோகே மதுப்'' என்பது வியாகரணம். இத்தால் புருஷகாரபூதையான பிராட்டியும் ஈச்வரனுமான இருவருடைய சேர்த்தியும் எப்போதுமுண்டென்பது தேறும். இந்த நித்யயோகம் எப்படிப்பட்டதென்னில், ஸ்வரூபாநுபந்தித்வ ப்ரயுக்தமான நித்யயோகமென்று கொள்ளக்கடவது. ஞானம் ஆனந்தம் முதலியவை எப்படி பகவானுக்கு ஸ்வரூப நிரூபகங்களோ அப்படி ஸ்ரீபதித்வமும் நிரூபகமாகையாலே இவளோடே கூடியே ஈச்வர வஸ்துவின் ஸத்தையுளதாகக் கொள்க. இவளுடைய குணப்ரயுக்தமாகவும் நித்யயோகமுண்டு; அபராதங்களைக் கணக்கிட்டு தண்டிக்க வல்லவனான ஈச்வரனுடைய ஸ்வாதந்த்ரியத்தையும் சேதனர் செய்யும் குற்றங்களின் அளவில்லாமையையுங் கண்டு "ஐயோ என்னாகுமோ!'' என்கிற பயத்தாலே ஈச்வரனை விட்டு ஒரு நொடிப்பொழுதும் அகலமாட்டாள். இப்படி இவளிருந்து நோக்குகையாலே, ஈச்வரனுடைய ஸ்வாதந்த்ரியத்தைக் கண்டோ தன்னுடைய அபராதங்களை நினைத்தோ சேதநன் அஞ்சவேண்டிய ப்ரஸக்தியில்லை. அன்றியும், பிராட்டி எப்போதும் எம்பெருமானோடு கூடியே யிருக்கின்றாளென்று தெரிந்துகொள்ளு

மளவில், எந்த ஸமயத்திலும் எம்பெருமானை ஆச்ரயிக்கலாம் என்பது தேறிற்றுகும். 'புருஷ காரம் செய்பவள் அருகே யிருக்குங் காலம் பார்த்து ஆச்ரயிக்கவேணும்' என்று ஸமய ப்ரதீக்ஷை வேண்டியதில்லை; ஆச்ரயிக்க வேணுமென்கிற ருசி பிறக்கவேண்டுவ தத்தனையே. பிராட்டியின் புருஷகாரம் அவசியம் வேண்டியதே யென்பதை விபவாவதார காலத்துச்செய்தி யாலும் தெரிந்துகொள்ளலாம்; ராமாவதாரத்தில், அளவுகடந்த அபராதத்தைச் செய்து ப்ரஹ்மாஸ்த்ரத்திற்கு இலக்காய்த் தலையறுப்புண்ண வேண்டின காகம் க்ருபைக்கு இலக் காய்த் தலைபெற்றுப்போனது பிராட்டியின் ஸந்நிதியினாலேயாம். அவ்வளவு அபராதியல்லாத ராவணன் ராமசரத்துக்கு இலக்காய் முடிந்துபோனது இவளுடைய ஸந்நிதி யில்லாமையினாலே யாம். ஆகவே பிராட்டியின் ஸந்நிதானம் பழுதுபடாதென்று உணர்க. ஆக இவ்வளவும் ஸ்ரீமத் பதார்த்தம் சொன்னோம்.

த்வயபூர்வகண்டத்தில் நாராயண பதார்த்த விவரணம்

9. இனி நாராயண பதார்த்தம் கேண்மின். 'நாராயணன்' என்பதற்குப் பல பொருள்கள் உண்டு; ஆங்காங்கு ஸந்தர்ப்பாநுகுணமாகப் பொருள் கொள்ளவேண்டிய தாகும். இங்கு வாத்ஸல்யம் ஸ்வாமித்வம் ஸௌசீல்யம் ஸௌலப்யம் ஜ்ஞாநம் சக்தி ஆகிற இத்திருக்குணங்களை யுடையவன் என்கிற பொருள் கொள்ளக்கடவது. ஏனெனில், ஆச்ர யிக்க ருசியுடைய சேதநன் அநாதிகாலமாகப் பண்ணின அபராதங்களைப் பார்த்துச் சீற்றங் கொண்டு 'இவனை அங்கீகரிக்கமாட்டேன்' என்றிருக்கும் எம்பெருமானுடைய ஸ்வாதந்திரிய மானது, உபதேசத்தாலும் அழகாலும் வசீகரித்துக் காரியங்கொள்ளவல்ல புருஷகாரபலத் தாலே தலைமடிந்தொழிந்த பிறகு, அந்த ஸ்வாதந்திரியத்தின்கீழ்த் தலையெடுக்கப் பெறுமலிருந்த கஷ்டம் தீர்ந்து தலையெடுக்குமவையான குணங்கள் இவையாதலால் இக்குணங்கள் இங்கு நாராயண பதத்திற்கு அர்த்தமாகக் கொள்ளப்படவேணும்.

நாராயண பதார்த்தமாகச் சொல்லப்பட்ட திருக்குணங்களின் உபயோக விவரணம்

10. இக்குணங்களுக்கு இவ்விடத்தில் விநியோகம் என்னவெனில்; ஆச்ரயிக்கவந்த இந்த சேதநன் தன் தோஷங்களைப் பார்த்து அஞ்சாமைக்கு உறுப்பு **வாத்ஸல்யம்**; வாத்ஸல்ய மாவது கன்றினிடத்திலே பசு இருக்குமிருப்பு; அதாவது அதனுடைய தோஷங்களை போக்ய மாகக் கொள்ளுகையும் பாலைக் கொடுத்து வளர்க்கையும், எதிரிட்டவர்களைக் கொம்பிலும் குளம்பிலுங் கொண்டு நோக்குகையுமாம். அப்படியே எம்பெருமானும் ஆச்ரிதருடைய தோஷத்தை [*என்னடியாரது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார்* என்கிறபடியே] போக்யமாகக்கொண்டு *பாலேபோல் சீர் *என்கிற குணங்களாலே தரிப்பித்து. *ந த்யஜேயம் கதஞ்சந* என்று ஒரு நிலைநின்று ரக்ஷித்தருள்வன். ஆகவே இந்த வாத்ஸல்ய குணமானது தன் குற்றங்களைக் கண்டு அஞ்சாமைக் குடலாகும். 'நமது காரியம் செய்வனோ மாட்டானோ' வென்று சங்கியாமல் 'அவசியம் காரியம் செய்வன்' என்று நம்பியிருப்பதற்குறுப்பு **ஸ்வாமித்வம்**. உடைமையை யுடையவனா யிருக்கைதான் ஸ்வாமித்வமென்பது, சேதநன் விமுகனான தசை யிலும் விடாமல் நின்று ஸத்தையை நோக்கிக்கொண்டு போருகைக்கு ஹேதுவான உறவு முறையாம். ஆகவே, இழவுபேறு தன்னதாம்படியான ஸ்வாமித்வமானது, எம்பெருமான் நம் காரியத்தைச் செய்தே தீருவனென்று துணிகைக்கு உடலாம். உபய விபூதிக்கும் கடவனா யிருக்கும் பெருமைக்கு ப்ரகாசகமான ஸ்வாமித்வத்தைக் கண்டு (சேதநன்) தன் தாழ்வையநு ஸந்தித்து அகலாமைக்கு உறுப்பு **ஸௌசீல்யம்**. எல்லாரோடுமொக்க மேல்விழுந்து புரையறக்

கலக்கையே ஸௌசீல்யமாதலால் இது ஸ்வாமித்வங்கண்டு பின் வாங்காமைக்கு உடலாம். அதீந்த்ரியன் [அதாவது கண்ணுக்கு விஷயமாகாதவன்] என்று பிற்காலியாமல் கண்ணாலே கண்டு ஆச்ரயிக்கைக்கு உறுப்பு **ஸௌலப்யம்.** தன் வடிவைக் கண்ணுக்கு இலக்காக்குவதே யன்றோ ஸௌலப்யமாவது. *ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி* என்கிறபடியே ப்ராப்தி விரோதியைப் போக்கி ப்ராப்யனான தன்னை உபகரிக்கைக்கு உறுப்பு **ஜ்ஞாந சக்திகள்.** இந்த சேதநன் கீழ்நின்றநிலையையும் மேல் போக்கடியையும் எம்பெருமானறிந்து கொள்ளுகைக்கு ஜ்ஞாநம் உறுப்பு; அறிந்தபடியே செய்து தலைக்கட்டுகைக்கு சக்தி உறுப்பு; ஆகவே விரோதியைப் போக்கித் தன்னைக் கொடுக்கைக்கு ஜ்ஞாநசக்திகள் உடலாம்.

விசேஷித்து ஸௌலப்ய குணத்தின் விவரணம்.

11. கீழ்ச் சொன்ன குணங்களில் ஸௌலப்யம் மிக முக்கியமானது; அந்த ஸௌலப்யத்திற்கு எல்லை நிலம் எதுவென்றால் *தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவந்தானே * என்கிறபடியே அன்பர்கள் உகந்ததொன்றைத் திருமேனியாகக் கொண்டு நித்ய ஸந்நிதி பண்ணியிருக்கும் அர்ச்சாவதாரமாம். அர்ச்சாவதாரமானது தேசவிப்ரகர்ஷத்தாலே கண்ணுக்கு இலக்காகாத பரவ்யூஹங்கள் போலல்லாமல், காலவிப்ரகர்ஷத்தாலே கண்ணுக்கிலக்காகாதபடி போன விபவாவதாரங்கள் போலுமல்லாமல் அணித்தாகி ஸதா ஸந்நிதி பண்ணிக்கொண்டிருக்கையாலே எப்போதும் கண்ணாலே காணலாம்படி யிருக்கும். ஆனது பற்றியே ஆழ்வார்கள் அர்ச்சாஸ்தலங்களையே தங்களுடைய பிரபத்திக்கு இலக்காக்கினார்கள். நம்மாழ்வார் திருவாய்மொழியில் (6-10 10) *அகலகில்லேனிறையுமென்று* என்கிற பாசுரத்தினால் திருவேங்கடமுடையான் திருவடிகளில் ப்ரபத்தி செய்யுமிடத்து த்வயத்தின் பூர்வவாக்யத்தை அநுஸந்தித்துக்கொண்டே செய்தாரென்பது அப்பாசுரத்தினால் ஸ்பஷ்டமாக விளங்குகின்றது. எங்ஙனேயென்னில்; *அகலகில்லேனிறையுமென்று அலர்மேல் மங்கையுறை மார்பா !* என்பதனால் ஸ்ரீமத்பதார்த்தாநுஸந்தானம். *நிகரில் புகழாயென்று தொடங்கி * திருவேங்கடத்தானே* என்னுமளவும் நாராயண பதார்த்தத்தின் அநுஸந்தானம், (எவ்வாறென்னில்;) நாராயண பதத்திற்கு வாத்ஸல்யம் ஸ்வாமித்வம் ஸௌசீல்யம் ஸௌலப்யம் ஞானம் சக்தி என்னும் ஆறு குணங்களுடைமையே அர்த்தமாதலால், **நகரில் புகழாய்** என்று வாத்ஸல்யம். **உலகம் மூன்றுடையாய்** என்று ஸ்வாமித்வம். **என்னையாள்வானே** என்று ஸௌசீல்யம். **திருவேங்கடத்தானே** யென்று ஸௌலப்யம். சக்திமான்களான அமரர்களும் ஜ்ஞானவான்களான முனிவர்களும் வந்து தொழுகிறார்களென்று தெரிவிக்குமதான **நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்பு** மென்கிற விசேஷணத்தினால் ஜ்ஞான சக்திகள். *புகலொன்றில்லா வடியேனுன்னடிக் கீழமர்ந்து புகுந்தேனே* என்கிற ஈற்றடியினால் *சரணௌ சரணம் ப்ரபத்யே* என்பதன் அநுஸந்தானம்—என்று சுருக்கமாக வநுஸந்திப்பது.

சரணசப்தார்த்தமும் த்விவசனத்தின் பொருட் சுவையும்.

12. இனி 'சரணௌ' என்கிற பதத்திற்கு 'திருவடிகளை' என்று பொருள். இது த்விவசநாந்த பதமாகையாலே இரண்டு திருவடிகளைச் சொல்லிற்றாகிறது. இரண்டு திருவடிகளையும் சொல்லுகிறவித்தால் *இணைத்தாமரை யடியெம்பிரான் * என்கிறபடியே இரண்டு தாமரைப் பூவை ஒழுங்குபடச் சேர்த்து வைத்தாற்போலே யிருக்கிற சேர்த்தியழகு சொல்லப்படுகிறது, அதுவன்றியும் உபாயபூர்த்தியும் சொல்லப்பட்டதாகிறது. அது எங்ஙனே யென்னில்; ஏகவசந ப்ரயோகம் பண்ணுமிடங்களில் ஜாத்யேகவசந மென்று கொண்டு பல பொருள்கள் பொருளாகவுங் கூடும்; பஹுவசந ப்ரயோகம் பண்ணுமிடங்களில் 'பூஜாயாம்

பஹுவசநம்' 'ஆத்மநி பஹுவசநம் என்கிற முறைகளாலே ஒரு வ்யக்தியே பொருளாகவுங் கூடும், த்விவசநமோ வென்னில், இரண்டுக்குக் குறைவாகவும் இரண்டுக்கு மேற்படவும் கொள்ளுவதற்கு இடந்தரமாட்டாததாகையாலே, உபாயமாமளவில் ஸஹாயாந்தரத்தை அபேக்ஷியாமையாகிற பூர்த்தியைச் சொல்லுகிறது. ஸ்ரீமந் நாராயணனைப் பற்றுகிறேனென்னுமல் ஸ்ரீமந் நாராயணனுடைய திருவடிகளைப் பற்றுகிறேனென்று சொல்லுகையாலே உபாயத்துக்கு உற்றதான குணச்சிறப்பு திருவடிகளுக்குள்ள தென்னுமிடம் தோன்றுகிறது. கீழே புருஷகாரமாகச் சொல்லப்பட்ட பிராட்டியும், ரக்ஷகனாகச் சொல்லப்பட்ட எம்பெருமானுங் கூட கைவிட்டாலும் திருவடிகள் கைவிடமாட்டா; *வண்புகழ் நாரணன் திண்கழல்* என்கிற படியே பற்றினாரை ஒருகாலும் நழுவவிடாத திண்மையையுடைத்தாயிருக்கும். *அநதிக்ரமணீயம் ஹி சரணக்ரஹணம்* என்று நின்றார்களன்றோ. திருவடிகளுக்கு இப்படிப்பட்ட குணச்சிறப்பு இருப்பதுந் தவிர, இவனுடைய ஸ்வரூபத்துக்குச் சேரவும் திருவடிகளிலே யிழிகை ப்ராப்தம். ஸ்தநந்தய ப்ரஜையானது தாயினுடைய அவயவமெல்லாங் கிடக்கத் தனக்கு வகுத்ததாயுள்ள முலையிலே வாய் வைக்குமாபோலே சேஷிபக்கல் ஆச்ரயிக்க விழியும் சேஷபூதன் தன் ஸ்வரூபத்துக்குச் சேர இழியும் துறை திருவடிகளாம். திருவடிகளைச் சொன்னவிது திருமேனிக்கு உபலக்ஷணமாகும். விக்ஹத்தில் ஏகதேசமான திருவடிகளைச் சொன்னபோதே புருஷகாரபூதையான பிராட்டிக்கு இருப்பிடமாய், நாராயண பதத்திற் சொன்ன குணங்களுக்கு ப்ரகாசகமாய் *பல பலநாமுஞ் சொல்லிப் பழித்த சிசுபாலனையுங்கூடத் திருத்தி *சேட்பால் பழம் பகைவன் சிசுபாலன் திருவடிதாட் பாலடைந்த* என்கிறபடியே சேர்த்துக் கொள்ளுமியல்வினதான திவ்யமங்கள விக்ரஹத்தை நினைக்கிறதென்க.

'சரணம்' என்ற பதத்தின் பொருள் விளக்கம்

13. த்வயத்தில் இரண்டாவது பதம் 'சரணம்' என்பது. இஷ்டத்தைப் பெறுகைக்கும் அநிஷ்டத்தைத் தவிர்க்கைக்கும் தப்பாத உபாயமாக என்று இதன் பொருளாம். அவித்யை யென்ன, அதடியாக வரும் ராகத்வேஷங்களென்ன, புண்ய பாப ரூப கருமங்களென்ன அவற்றின் பயனான தேவாதி சரீரங்களென்ன, பலவகைப்பட்ட துக்க பரம்பரைகளென்ன—ஆகிய இவை அநிஷ்டங்களாம். அர்ச்சிராதி மார்க்கத்தாலே செல்லுகையும் பரமபதத்தை ப்ராபிக்கையும் பரம புருஷனைக் காண்கையும் குணாநுபவ கைங்கரியங்களுமாகிய இவை இஷ்டங்களாம். ஆக இந்த இஷ்டங்களைப் பெறுகைக்கும் அந்த அநிஷ்டங்களைத் தவிர்க்கைக்கும் தப்பாத உபாயமாக என்றதாயிற்று. திருவடிகளையே உபாயமாகச் சொல்லுகிற வித்தால் உபேயமானது தானே உபாயமென்பது சொல்லிற்றாயிற்று. உபாயம் வேறும் உபேயம் வேறுமா யிருக்கிறபடி கிடையாதென்க. ஆனால் உபேயமானதுதன்னையே உபாயமாக்குகிறது ஏனென்னில்; அகிஞ்சநனாய் அநந்யகதியாயிருக்கிற விவன் தன் செயல்மாட்சியாலே [அதாவது வேறொன்றும் செய்யமாட்டாமையாலே] உபேயமானதுதன்னையே உபாயமாக்குகிறானித்தனை. உலகில், போக்யமான பாலையே மருந்தாக்கும்படியாக நேர்ந்துவிடுகிறதன்றோ. அதுபோல வென்று கொள்க. உபேயமான வஸ்துவையே உபாயமாகச் சொல்லுகையாலே உபேயம்வேறும் தான் வேறுமாயிருக்கிற உபாயாந்தரங்களிற் காட்டில் விலக்ஷணமான வுபாயம் இது என்றதாயிற்று.

'ப்ரபத்யே' என்றதன் பொருள் விளக்கம்

14. இனி ப்ரபத்யே என்றது பற்றுகிறேனென்றபடி. ரக்ஷித்தருள வேணுமென்று வாயினால் பிரார்த்திக்கையாகிற கேவல வாசிகமாகவும், கைகூப்புதல் நமஸ்கரித்தல் முதலி

யவையாகிற கேவலகாயிகமாகவும் பற்றினுலும் பலன் ஸித்திக்கக் குறையில்லை; ஆனுலும், *தத்வஜ்ஞாநாத் முக்தி:* என்று ஞானத்தாலே மோக்ஷமென்கையாலே இங்கு மாநஸமான பற்றுதலே சொல்லிற்ருகக் கடவது. எம்பெருமானுடைய ரக்ஷகத்வத்தை இசைகையாகிற ஒரு அத்யவஸாயமே இந்த ஞானமாம். மாநஸிகம் மாத்திரமே போதுமோ? *சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினுலும் தேவபிரானையே…அடைந்த*என்கிறபடியே மனமொழி மெய்கள் மூன்ருலும் ஸ்வீகரிக்க வேண்டாவோ வென்னில், இம்மூன்றும் வேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை. ஏனென்னில், பற்றப்படுகிற ஈச்வரனே பலன் ஸித்திக்கைக்கு உபாயமாகை யாலும், மனமொழி மெய்களாலுண்டான பற்றுதல்களான இவை மேலெழ உபாயம்போல் தோற்றிக் கழிந்து போமதொழிய ஸாக்ஷாத் உபாயமல்லாமையாலும், பலன் ஸித்திப்பதற்கு அத்யவஸாயரூபமான ஸ்வீகாரமொன்றுமே போதுமானது. *நின்னடியிணை யடைந்தேன்* அடிக்கீழமர்ந்து புகுந்தேன்* என்ருப்போலே இறந்தகாலமாகச் சொல்லுகையன்றிக்கே [ப்ரபத்யே-பற்றுகிறேன்] என்று நிகழ்காலமாகச் சொல்லுகிறது ஏதுக்காகவென்னில், ப்ரக்ருதியோடே யிருக்கிறவிவன் ரஜோகுண தமோகுணங்களாலே கலங்கி உபாயாபாயங் களில் ஏதேனுமொன்றிலே அந்வயித்து, பின்னை ஸத்வகுணம் தலையெடுத்து அநுதாபம் பிறந்து பயப்பட்ட காலத்திலே ப்ரபத்தியொழிய அதுக்குப் பரிஹாரமில்லாமையாலும், அது தான் ஒருகால் செய்தற்றபின்பு மீண்டும் செய்யலாகாமையாலும் முந்துற்ற ப்ரபத்தியை அநுஸந்திக்கைக்காகக் கொழுந்துபடக் கிடக்கிறபடி. ஆக, பூர்வவாக்யார்த்தம் சொல்லிற்ரு யிற்று.

த்வயத்தில் உத்தரவாக்கியத்தின் திரண்ட பொருள்

15. இனி உத்தரவாக்கியத்தின் பொருள் சொல்லுகிறேம். ஸர்வஸ்வாமியாயிருக்கிற ஸர்வேச்வரனது திருவடிகளில் பண்ணும் கைங்கரியத்தைப் பிரார்த்திப்பதே இதற்குத் திரண்ட பொருள். பூர்வ வாக்யத்தில் உபாயஸ்வீகாரம் பண்ணி இப்போது உபேயம் சொல்லுகிறவிதனுல் என்ன தேறுகிறதென்னில்; பூர்வ வாக்யத்தில் பிரதிபாதிக்கப்பட்ட ஸாதனம் ஸகல பலன்களுக்கும் பொதுவாகையாலே கீழ்ப்பண்ணின உபாயவரணம் வேருரு பலனுக்காகவன்று, பகவத் கைங்கர்ய ஸித்திக்காகவே என்றதாகத் தேறுகின்றது. மற்ற பலன்களை விட்டு இந்தப் பலனை அபேக்ஷிக்க வேண்டுவானென்னென்னில்; உபாயவரணம் பண்ணுகிறவளவில் அநந்யோபாயத்வரூபமான ஸ்வரூபத்துக்குத் தகுதியாக கர்மஜ்ஞான பக்திகளாகிற உபாயாந்தரங்களை விட்டு சரமமான ஸித்தோபாயத்தைப் பற்றினுப்போலே உபேய ப்ரார்த்தனை பண்ணுகிறவளவிலும் அநந்யபோக்யத்வரூபமான ஸ்வரூபத்துக்குத் தகுதியாக உபேயாந்தரமான ஐச்வர்ய கைவல்யங்களைவிட்டு சரமமான உபேயத்தை [பகவத் கைங்கர்யத்தை] வேண்டுவது ப்ராப்தமே யன்ருே. *உள்ளுவாருள்ளிற் றெல்லா முடனிருந் தறிதி* என்கிறபடியே நினைவறியுமவனுன எம்பெருமான் பக்கலிலே பிரார்த்தனை வேணுமோ? ஸர்வஜ்ஞனுன அவன் இவனது நினைவை அறியமாட்டானோ வென்னில், நெடுங்காலமாக இதர பலன்களில் நசையாகிற நோய்கொண்டு இந்த உபேயத்தில் நசையற்றுக் கிடந்தவன், இதிலே ருசிபிறந்து தன் பக்கலிலே வந்து இத்தை அபேக்ஷிக்கிறதித்தனை. ரோகத்தாலே சோற்றில் ஆசையற்றுக் கிடந்த குழந்தை, ரோகம் தீர்ந்து பசிவிளைந்து சோறு என்றபேக்ஷித்தால், அது கேட்டுப் பெற்ற தாய் உகக்குமா போலே இதனைக் கொள்க.

ஸ்ரீமதே என்றதன் பொருள் விவரணம்

16. இனி ஸ்ரீமதே என்கிற பதத்திற்கு அர்த்தம் கேண்மின். ஸ்ரீசப்தத்திற்குப் பூர்வ வாக்யத்தை விவரிக்கும்போது சொன்ன இரண்டு வ்யுத்பத்திகளும் அர்த்தமும் மதுப்புக்கு

அர்த்தமான நித்யயோகமும் அப்படியே அநுஸந்திக்கத்தக்கது. ஆகவே ஸ்ரீமதே என்பதற்கு பெரியபிராட்டியாரோடே கூடியிருக்குமவனுக்கு என்று பொருளாம். பிராட்டியின் நித்ய யோகமானது இரண்டிடத்திலும் ஒரேவிதமாக இருந்தாலும் அந்தந்த நிலைமைக்குத் தக்கபடி இவளிருக்குமிருப்பை பரிஷ்கர்ஷித்துக்கொள்ளவேணும். எம்பெருமான் சேதநர்களுக்கு அநிஷ்ட நிவ்ருத்தி இஷ்ட ப்ராப்திகளைக் குறித்து உபாயமாமளவில் அவள் புருஷகாரமா யிருப்பள் அவன் சேதநர்களுக்கு கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியாய் ப்ராப்யனுமளவில் தானும் அவனைப்போலே கைங்கர்ய ப்ரதிஸம்பந்திநியாய்க்கொண்டு ப்ராப்யையுமாய், இவர்கள் செய்யும் கைங்கர்யத்தை அவள் திருவுள்ளத்திலே ஒன்று பத்தாகப் படுத்தி உகப்பிக்குமவளாயுமிருப்பள். ஆகவே, பூர்வ வாக்யத்தில் சொன்ன நித்யயோகம் புருஷகாரத்வோபயுக்த மென்றும், இப்போது உத்தரவாக்யத்தில் சொல்லுகிற நித்யயோகம் கைங்கர்ய ப்ரதிஸம்பந்தி யாகைக்காகவும் கைங்கர்யத்தை அவன் திருவுள்ளத்திலே ஒன்று பத்தாகப் படுத்துகைக்காகவும் அமைந்த தென்றும் சொல்லிற்றாயிற்று. முதல் ரஹஸ்யமான திருமந்திரத்திலே 'நாராயணாய' என்று சொல்லிற்று. நாராயணனுக்கே அடிமை செய்யப் பெறுவேனாகவேணும் என்கிற இவ்வளவொழிய, அடிமை கொள்ளுமவன் பெரிய பிராட்டியாரோடு கூடியிருப்பவனாக வேணுமென்றும், அடிமை செய்யுமவன் மமகார மற்றவனாக வேணுமென்றும் அங்கு ஸ்பஷ்டமாகச் சொல்லிற்றில்லையே; அவையிரண்டும் இங்கே ஸுஸ்பஷ்டமாகச் சொல்லுகையாலே திருமந்திரத்தில் உத்தர பதத்திற்கு இவ் வுத்தரவாக்கியம் விவரணமா யிருக்குமென்று கொள்ளக்கடவது.

த்வயத்தில் 'நாராயணாய' என்றதன் பொருள் விவரணம்

17. இனி 'நாராயணாய' என்கிற பதத்தின் பொருள் கேண்மின். நாராயணத்வமாவது உபயவிபூதி நாதத்வமாகையாலே இப்பொருள் தான் இங்குப்பொருந்தும். கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியாவான் சேஷியேயன்றோ. [சேஷி—ப்ராப்தனான ஸ்வாமி.] கைங்கர்ய ப்ரதி ஸம்பந்தியைச் சொல்லுகிற இப்பதத்திலே, கைங்கர்யத்துக்கு முன்னடி நேரும் அநுபவத்துக்கு இலக்கான திவ்யமங்கள விக்ரஹத்தையும் கல்யாண குணங்களையும் சொல்லுமானாலும் இவ்விடத்தில் சேஷித்வமென்கிற குணத்திலே முக்கியமான நோக்கு என்று கொள்ளவேணும். ஏனென்னில், இங்குச்சொல்லுகிற கைங்கர்யத்திற்கு மிகவும் அந்தரங்கமாயிருப்பது சேஷித்வமாகையாலே. அப்ராப்த விஷயத்தில் கைங்கர்யம் சாஸ்த்ரங்களிலே நிஷேதிக்கப்பட்டிருக்கும்; அதுபோலல்லாமல் விஹிதமான ப்ராப்த விஷயத்தில் பண்ணும் கைங்கர்யமன்றோ இவனுக்கு ரஸிப்பது; ஆகவே சேஷித்வத்திலே நோக்கென்றது நன்று. நாராயண பதத்தின் மேலுள்ள சதுர்த்தியானது கைங்கர்ய ப்ரார்த்தனையைக் காட்டுகிறது. சேஷத்வஜ்ஞானகார்யமான உபாயபரிக்ரஹத்துக்கு அடுத்தபடியாக ப்ராப்தமான இந்த சதுர்த்தியானது, பரிக்ரஹித்த உபாயத்தினுடைய பலனான கைங்கர்யத்தை ப்ரகாசிப்பிக்கின்ற தென்கை மிகவும் உசிதம். சேஷத்வமே ஆத்மாவுக்கு ஸ்வரூபமாகையாலும், அந்த சேஷத்வமானது கைங்கர்யமில்லாதபோது ஸத்தை பெற்றதாகாமையாலும் கைங்கர்யம் ஆத்மாவுக்கு நித்யமாயிருக்கும். நித்யமாயிருக்குமாகில் பிரார்த்திக்க வேணுமோ வென்னில், ப்ரார்த்தநா விசேஷமில்லாதபோது கைங்கர்யம் ஸித்தியாமையாலே அதை நித்தியமாகப் பிரார்த்தித்தே பெறவேணும்.

த்வயத்தின் முடிவிலுள்ள நமஸ்ஸின் பொருள்.

18. இனி நம: பதத்தின் பொருள். நமச் சப்தமானது பொதுவாக அஹங்கார மமகாரங்களைக் கழிக்குமதாகையாலே திருமந்திரத்தில் நடுவிலுள்ள நமச் சப்தம்போலே

ஸ்வரூபவிரோதி உபாய விரோதி புருஷார்த்த விரோதி ஆக மூன்றையும் கழிக்க வல்லதா யிருந்ததேயாகிலும் இங்கு அப்படியல்லாமல் கைங்கர்யப் பிரார்த்தனைக்கு அடுத்தபடியாக வுள்ளதாகையாலே இந்த கைங்கர்யத்தில் விரோதியைக் கழிக்கிறது. கைங்கர்யத்தைத் தன்னுடைய உகப்புக்கு உறுப்பாக நினைத்துப் பண்ணுகையே இங்கு விரோதியாகும். அங்ஙனம் நினைத்துப் பண்ணலாகாது. "பகவந்முகவிகாஸ ஹேதுவாகையாலே இது நமக்கு ஆதரணீயம்" என்கிற பிரதிபத்தியே நடக்கக்கடவது. இதில், தான் போக்தா என்கிற பிரதிபத்தியும், போகம் தன்னுடையது என்கிற பிரதிபத்தியும் நடக்குமாகில் அபுருஷார்த்தமாகும். ஆக, இரண்டு கண்டமான த்வயத்தின் பொருள் தேறினதாவது, புருஷகார பூதையான பிராட்டியும், அவளுடைய நித்யஸாஹித்யமும், அவளாலே தலையெடுக்கும்படி செய்யப்பட்ட வாத்ஸல்யாதி குண பூர்த்தியும் அந்த குணங்களுக்கு ப்ரகாசகமான திவ்யமங்கள விக்ரஹமும், குணங்களோடும் விக்ரஹத்தோடுங் கூடின வஸ்துவின் உபாயத்துவமும், அவ்வுபாய ஸ்வீகாரமும் பூர்வ கண்டத்தால் சொல்லிற்று. அவ்வுபாய ஸ்வீகாரத்திற்குப் பலனாக கைங்கர்யத்திற்கு விஷயம் திவ்யதம்பதிகளாகிற மிதுனமென்பதும், அவ்வஸ்துவினுடைய ஸர்வசேஷித்வமும், அவ்விஷயத்தில் கைங்கர்யமும், அக்கைங்கர்யத்தின் விரோதி நிவ்ருத்தியும் உத்தரகண்டத்தால் சொல்லிற்று. இதுவே த்வயத்தின் ஸாரமான பொருள். ... ... *

முமுக்ஷுப்படி த்வயப்ரகரணத்தில் பதினெட்டு முற்றிற்று.

முமுக்ஷுப்படி சரமச்லோகப்ரகரணத்தில் பதினெட்டு.

த்வய சரமச்லோகங்களின் பௌர்வாபர்ய விசாரம்.

1. முமுக்ஷுக்களுக்கு அறியவேண்டியவையான மூன்று ரஹஸ்யங்களுள் திருமந்த்ரம் த்வயம் ஆகிற இரண்டு ரஹஸ்யங்களின் ஸாரார்த்தங்களை அநுபவித்தாயிற்று கீழ். இப்போது சரமச்லோகார்த்தத்தை யனுபவிப்போம். த்வயம் சரமச்லோகம் என்கிற இரண்டு ரஹஸ்யங்களின் பௌர்வாபர்யத்தில் மதபேத முண்டு. திருமந்த்ரத்திற்கடுத்தபடி சரமச்லோகத்தை விவரிப்பது ஒரு ப்ரகாரம். த்வயத்திற்குப் பிறகு அதனை விவரிப்பது மற்றொரு ப்ரகாரம் ஆசாரியர்களுக்கு இவ்விரண்டுபடியும் ஸம்மதமே. ஆசார்ய ஹ்ருதயத்தில் மூன்றாவது பிரகரணத்தில் "இவற்றுக்கு மந்த்ரவித்யநுஸந்தாந ரஹஸ்யங்களோடே சேர்த்தி" என்றொரு சூர்ணையுள்ளது. இதில் ரஹஸ்யத்ரயமும் விலக்ஷண சப்தத்தாலே காட்டப்பட்டுள்ளது. மந்த்ரம், விதி, அநுஸந்தானம் என்ற மூன்றோடும் ரஹஸ்ய பதத்தைச் சேர்த்தால், மந்த்ர ரஹஸ்யம், விதிரஹஸ்யம், அநுஸந்தான ரஹஸ்யம் என்றாகத் தேறும். திருவஷ்டாக்ஷரத்திற்கு மந்த்ர ரஹஸ்யமென்று பெயர்; சரமச்லோகத்திற்கு விதிரஹஸ்ய மென்று பெயர்; த்வயத்திற்கு அநுஸந்தாந ரஹஸ்யமென்று பெயர். *ந மந்த்ரோ ஷ்டாக்ஷராத் பர:* என்று திருவஷ்டாக்ஷரத்திற்கு மேற்பட்ட மந்த்ரம். வேறில்லை யென்கையாலே அதற்கு மந்த்ரரஹஸ்யமென்றேபெயர். ஸித்தோபாயவரணத்தை ஸாங்கமாக விதிக்கையாலே சரமச்லோகத்திற்கு விதிரஹஸ்யமென்று பெயர். ஸாரஜ்ஞராலே ஸதா அநுஸந்தானம் பண்ணப்படுமதான த்வயத்திற்கு அநுஸந்தான ரஹஸ்ய மென்று பெயர். ஸித்தோபாய வரணத்தை அநுஷ்டான முகத்தாலே காட்டிற்று த்வய ரஹஸ்யம். அதுதன்னை விதிமுகத்தாலே காட்டுகிறது சரமச்லோக ரஹஸ்யம்.

சரமச்லோகங்கள் மூன்றென்று மூதலித்தல்.

2. ஸம்ப்ரதாயத்தில் வராஹ சரமச்லோகமென்றும் ஸ்ரீ ராம சரமச்லோகமென்றும் ஸ்ரீ கிருஷ்ண சரமச்லோக மென்றும் மூன்று சரமச்லோகங்கள் ப்ரஸித்தமாக உண்டு.

ஸ்திதே மநஸி ஸுஸ்வஸ்தே...அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம். என்பது வராஹ சரமச்லோகம். *ஸக்ருதேவ ப்ரபந்நாய...ஏதத் வ்ரதம் மம* என்பது ஸ்ரீ ராம சரமச்லோகம். *ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ. அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச:* என்கிற விது ஸ்ரீ க்ருஷ்ணசரமச்லோகம். இவை முறையே பூமிப்பிராட்டியை நோக்கியும், கடற்கரையிலே விபீஷணாழ்வானை நோக்கியும், திருத்தேர்த்தட்டிலே அர்ஜுனனை நோக்கியும் அருளிச் செய்யப்பட்டவை.

சரமச்லோக சப்தார்த்த நிரூபணம்

3. சரமச்லோகமென்பதற்குக் கடைசியான சுலோகமென்று பொருள் தோன்றும். கீதையில் கடைசியான சுலோகம் * யத்ர யோகேச்வர: க்ருஷ்ண:...த்ருவா நீதிர் மதிர் மம * என்பதே யொழிய * ஸர்வ தர்மாந் இத்யாதி யன்று. எழுபத்தெட்டு சுலோகங்கள் கொண்ட பதினெட்டாமத்யாயத்தில் அறுபத்தாறும் சுலோகமான விதனை எங்ஙனே சரமச்லோகமென்றார்கள்? என்று சங்கை தோன்றும். கேண்மின், ஸமாஸங்களில் மத்யமலோபி ஸமாஸமென்று ஒன்றுண்டு; *அதனை சாகபார்த்திவஸமாஸமென்றும் சொல்லுவர்கள். ஒரு அரசன் கீரையிலே மிகவும் ப்ரீதி கொண்டிருந்தான். அவனை சாகப்ரிய பார்த்திவனென்ன வேண்டி சாகபார்த்திவனென்றே சொல்லிவிடுவதுண்டு. "சாகப்ரிய: பார்த்திவ: - சாகபார்த்திவ:" என்பர்கள். இங்கு மத்யமமான ப்ரிய பதம் லோபித் திருக்கையாலே மத்யமலோபி ஸமாஸமென்று சொல்லுவர்கள். அதுபோல இங்கும் "சரமோபாய ப்ரதிபாதக: ச்லோக: - சரமச்லோக:" என்றாகக் கடவது. கர்மஜ்ஞாநாதிகளான உபாயங்களில் சரமமான உபாயம் - சரணாகதி; அதனைத் தெரிவிக்குமதான இந்த ச்லோகம் சரமச்லோகமென்று பேர்பெற்றதாயிற்று. இந்த சுலோகம் மாசுச: என்று முடிவு பெறுகின்றது. துக்கப்படாதே என்பது அதன் பொருள். அர்ஜுனன் துக்கப்பட்டதாகத் தெரிந்தாலொழிய இங்ஙனே சொல்ல ப்ரஸக்தியில்லை. அவன் துக்கப்படும்படியாகக் கண்ணன் ஏதாவது சொல்லியிருக்கிறானோவென்று பார்க்குமளவில் அப்படி யொன்றும் தெரியவில்லை. "கண்ணா! நீ சொன்னது எனக்கு துக்ககரமாக இருக்கிறது" என்று அர்ஜுனன் ஏதேனும் சொல்லியிருக்கிறானோவென்று பார்த்தால் அதுவுமில்லை. இப்படியிருக்க மாசுச: என்று எதுகொண்டு சொல்லிற்று? என்று விமர்சிக்கவேணும்.

சரமச்லோகத்தில் (மாசுச:) என்றதில் தோன்றும் சோகநிரூபணம்

4. முந்தின சுலோகங்களிலிருந்து ஒருவாறு துக்கத்தை யூஹிக்கலாம்; (61, 62 ச்லோகங்கள்) * ஈச்வரஸ் ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேசே அர்ஜுந! திஷ்டதி * என்றும் * தமேவ சரணம் கச்ச ஸர்வபாவேந பாரத * என்றுமுள்ளன; இவற்றால் க்ருஷ்ணனாகியதான் ஈச்வரனன்றுபோலவும், தன்னிற்காட்டில் வேறுபட்ட ஒருவன் ஈச்வரனாகவுளன் போலவும் காட்டுகையாலே, ஐயோ! தன்னையே தஞ்சமாகக் காட்டிக் கொடாமல் இப்படி நம்மை வஞ்சிக்கிறானே! என்று சோக முண்டாகியிருக்கலாம், அன்றியும், (சுலோ. 63ல்) *யதேச்சஸி ததா குரு* [உனக்கு இஷ்டமானபடி செய்] என்று சொல்லித் தலைக்கட்டினனே! ஆதியிலே *யச் ச்ரேயஸ் ஸ்யாத் நிச்சிதம் ப்ரூஹி தந்மே* என்று நாம் பிரார்த்தித்திருக்க, தானே ஒன்றை அறுதியிட்டுச் சொல்லாமல் 'யதேச்சஸி ததா குரு' என்று சொல்லுகிறவிது என்ன வார்த்தை! என்றும் சோகமுண்டாகி யிருக்கலாம். முக்கியமான சோகத்தை நம் ஆசாரியர்கள் தெரிவித்தருளுகிறார்கள்;— முமுக்ஷுப்படியில்,

"இழே சில உபாய விசேஷங்களை யுபதேசிக்க, அவை துச்சகங்களென்றும் ஸ்வரூபவிரோதிகளென்றும் நினைத்து சோகாவிஷ்டனான அர்ஜுனனைக்குறித்து''

என்றுள்ள ஸ்ரீஸூக்தி மருமமுணர்ந்துரைத்ததாகும். இழே பல அத்யாயங்களிலே கருமம் ஞானம் முதலிய சில உபாய விசேஷங்களை மோக்ஷஸாதனமாக விஸ்தரேண உபதேசித் தருளக் கேட்ட அர்ஜுனன் அவை அனுஷ்டிக்க அரிதானவை யென்று கண்டான்; எதனா லென்னில், அவை காயக்லேச ரூபமாகையாலும், இந்திரியங்களை வென்றே அவை அனுஷ் டிக்கவேண்டுகையாலே இந்திரியஜயம் அரிதாகையாலும், ஸாதனமாக நெடுங்காலம் ஸாதிக்கவேண்டி யிருக்கையாலும், முக்கியமாக பரதந்திரமான ஸ்வரூபத்துக்கு ஸ்வயத்ந ரூபங்களான இவை விரோதிகளாகையாலும். ஆக இவற்றாலே எம்பெருமானைப் பெறுவ தென்ப தொன்றில்லை; இனி இழந்தே போமித்தனையன்றோ? என்று சோகித்து நின்றான்; அந்த சோகந் தீரவே இதில் சரமோபாயம் விதிக்கப் படுகையாலே இதில் மாசுச: எனப் பட்டது என்பதாக ஆசாரியர்களின் திருவுள்ளம்.

சரமச்லோகத்தின் திரண்ட பொருள்

5. இந்த ச்லோகமானது பூர்வார்த்தமென்றும் உத்தரார்த்தமென்றும் இரண்டுபடி யாக வகுப்புண்டிருக்கும். இவ்வுபாயத்துக்கு அதிகாரியானவன் செய்ய வேண்டுமது பூர்வார்த் தத்தாலே சொல்லப்படுகிறது; உபாயபூதனான ஸர்வேச்வரன் இவனுக்குச் செய்யுமது உத்த ரார்த்தத்தாலே சொல்லப்படுகிறது. அதிகாரியானவன் செய்யவேண்டுமது இவ்வுபாயத்தை ஸ்வீகரிப்பதேயாகும்; [அதுதான் பூர்வார்த்தத்தால் பிரதிபாதிக்கப்படுகிற தென்க.] ஆனால் அந்த உபாய ஸ்வீகாரத்தை மட்டும் சொல்லாதே *ஸர்வதர்மாந் பரித்யஜ்ய* என்று உபாயாந் தரங்களை விடுகையும் சொல்லப்படுகிறதே, அது எதற்காகவென்னில்; அங்கியான உபாய ஸ்வீகாரத்திற்கு அங்கமும் சொல்லப்பட வேண்டுகையாலும் உபாயாந்தர பரித்யாகமே அங்கமாகையாலும் அந்த அங்கத்தோடேகூட விதிக்கிறபடி. ஆசமனம் முதலியவற்றுக்கு அங்கமாகச் சொன்ன கைகாலலம்புகை முதலானவற்றை யொழிய அவை [ஆசமநாதிகள்] அனுட்டிக்க வொண்ணாதாப்போலே இங்கும் அங்கமாகச் சொல்லுகிற உபாயாந்தர பரித்யா கத்தை யொழிய சரணவரணம் ஆகாதென்பது தேறிற்று. உபாயாந்தர பரித்யாகமே சரண வரணமாகக் கொள்ளத்தகும்.

ஸர்வதர்மாந் என்ற முதற் பதத்தின் விவரணம்

6. 'ஸர்வதர்மாந்' என்பதற்கு 'எல்லா தர்மங்களையும்' என்று பொருள். ஒரு பல னுக்கு ஸாதனமா யிருக்குமது எதுவோ அதுவே தருமமெனப்படுவது. மோக்ஷோபாயங்களை உபதேசித்து வருகிற ப்ரகரணமாகையாலே இவ்விடத்திலுள்ள தர்மசப்தமானது-ஐஹிக மாயும் ஸ்வர்க்காதி ஆமுஷ்மிகமாயு மிருந்துள்ள த்ருஷ்டபலன்களுக்கு ஸாதனங்களானவற் றைச் சொல்லுகையன்றியே பகவத் ப்ராப்திரூபமான மோக்ஷபலத்துக்கு ஸாதனமா யுள்ள வற்றைச் சொல்லுகிறது. அந்த மோக்ஷபல ஸாதனங்கள் ச்ருதிகளாலும் ஸ்ம்ருதிகளாலும் விதிக்கப்பட்டவையாய்க் கொண்டு அநேகங்களா யிருக்கையாலே (தர்மாந்) என்று பஹுவசந முள்ளது. அவை எவை யென்னில்; *கர்மணைவ ஹி ஸம்ஸித்திம்* இத்யாதிகளால் ஸ்வதந்த்ர ஸாதநமாகச் சொல்லப்பட்ட கர்மயோகமும், *ஸர்வம் கர்மாகிலம் பார்த்த! ஜ்ஞாநே பரிஸமாப்யதே* என்று சொல்லப்பட்ட கர்ம ஸாத்யமான ஜ்ஞாநயோகமும், *மந்மநா பவ மத்பக்த:* இத்யாதி களாலே சொல்லப்பட்ட கர்மஜ்ஞாந ஸஹக்ருதமான பக்தியோகமுமாகிற இவையும், *ஜந்ம கர்ம ச மே திவ்யம்* இத்யாதிகளால் பகவத் ப்ராப்திக்கு ஸாதனமாகச் சொல்லப்பட்ட அவ

தார ரஹஸ்ய ஜ்ஞானம், *ஏதத் புத்த்வா புத்திமாந் ஸ்யாத் க்ருதக்ருத்யச் ச பாரத* என்றவிடத்துச் சொல்லப்படுகிற புருஷோத்தம வித்யை, *தேசோயம் ஸர்வகாமதுக்* என்று சொல்லும் புண்யக்ஷேத்ரவாஸம், *ஸர்வபாப விசுத்தாத்மா யாதி ப்ரஹ்ம ஸநாதனம்* என்று பகவத் ப்ராப்தி ஸாதநமாகச் சொல்லப்படுகிற திருநாமஸங்கீர்த்தனம் திருவிளக்கெரிக்கை திருமாலையெடுக்கை முதலாக ஸாதநபுத்தியோடு செய்யப்படுமவையும் இங்கு (தர்மாந்) என்பதனாலே விவக்ஷிதங்கள். பஹுவசநமே போதுமாயிருக்க, தர்ம சப்தத்திற்கு விசேஷணமாக ஸர்வசப்தமுமொன்று இருக்கிறதே, இதனால் சொல்லுகிறது என்னென்னில்; பஹுவசநத்தால் சொல்லப்பட்ட அந்தந்த உபாய விசேஷங்களை அனுட்டிக்குமளவில் அவற்றுக்கு யோக்யதாபாதகங்களான ஸந்தியாவந்தந பஞ்ச மஹாயஜ்ஞாதிகளான நித்ய கருமங்கள் ஸர்வ சப்தத்தால் விவக்ஷிதங்களென்க. ஆக ஸர்வதர்மாந் என்பதற்குத் தேறின பொருள் யாதெனில்: ச்ருதிஸம்ருதிகளாகிற ப்ரமாணங்களாலே விதிக்கப்பட்டுள்ளவையாய் நித்ய நைமித்திகம் முதலானவற்றை வடிவாக வுடையதான கர்மயோகம் முதலான உபாயங்களை என்றதாயிற்று.

பரித்யஜ்ய என்கிற இரண்டாவது பதத்தின் பொருள்

7. இனி பரித்யஜ்ய பதத்திற்குப் பொருள் கேண்மின். த்யாகமாவது விடுகை. இவ்விடத்திற் சொல்லுகிற த்யாகமாவது வெறும் விடுகையன்று. கீழ்ச் சொல்லப்பட்ட உபாயங்களின் படியை நன்கு நோக்கி, வெள்ளியல்லாததொரு சிப்பியிலே வெள்ளி யென்கிற புத்தியைப் பண்ணுவாரைப்போலேயும், ஒரு திக்கிலே போக விரும்பி வேறொரு திக்கை அதுவாக நினைத்துப் போவாரைப் போலேயும் பகவத் ப்ராப்திக்கு உபாயத்தை விரும்புகின்ற நாம் உபாயமல்லாதவற்றிலே உபாயபுத்தி பண்ணினோமே! என்கிற அநுதாப புத்தி விசேஷத்தோடே விடுகை. பரி என்கிற வுபஸர்க்கம் மிகுதிக்கு வாசகமாய்க்கொண்டு இங்குத் தெரிவிப்பதென்னவென்றால், ப்ரஹ்மஹத்யை ஸுராபானம் முதலிய பாதகங்களையும் மற்றும் நிஷித்தமானவற்றையும் விடுமளவில், அவற்றில் மறுபடியும் அந்வயிப்பதற்குறுப்பான ருசிவாஸனைகள்கூட இல்லாதபடி வெள்கி விடுமாபோலே, உபாயாந்தரங்களை விடுமளவில் மீளவும் அவற்றில் அந்வயம்வாராதபடி விடவேணுமென்பது தெரிவிக்கப்படுகிறது. பரித்யஜ்ய என்கிற ல்யப்பாலே ஸித்தோபாயத்தைப் பரிக்ரஹிக்குமளவில் த்யாஜ்யமான உபாயாந்தரங்களை விட்டே பரிக்ரஹிக்க வேணுமென்கிற நியமம் காட்டப்பட்டதாயிற்று. இப்படிவிட்டே பற்றவேணுமென்கிற நியமம் என்னென்னில்; உபாயாந்தரங்களான இவற்றிலே சிறிது அந்வயம் கிடந்தாலும் இவை பேற்றுக்கு ஸாதநமாகாத மாத்திரமன்றிக்கே பேற்றுக்குப் பிரதிபந்தகமாயும் நிற்கும்.

ஸாத்ய தர்ம பரித்யாகத்தின் ஆவச்யகத்வ நிரூபணம்

8. இதற்கொரு த்ருஷ்டாந்தமுண்டு; இராவணன் ராமசரங்களாலே மிகவும் நொந்து நிலை கலங்கி எதிரம்பு கோக்கமுடியாமே நின்றான்; அப்போதும் ராமபாணங்கள் மேன்மேலும் விழுந்துகொண்டிருந்தன. தருமயுத்தஞ் செய்யுமிராமன், நாம் அம்புவிடாம லிருக்கவும் தான் அம்புகளை விடுவதற்கு என்ன காரணமென்று இராவணன் சிந்தித்தான்; தன் கையில் வில் இருப்பதுதான் காரணமென்று தெரிந்துகொண்டு பிறகு அந்த வில்லையும் பொகட்டான். அப்போது பெருமாள் பாணப்ரயோகத்தை நிறுத்தி அவனுக்கு விடை கொடுத்தனுப்பினார் — என்று ஸ்ரீராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது இராவணன் பொகட்ட அந்த வில் அவனது கையிலிருந்தபோது எதிரியை வெல்வதற்கு ஸாதநமாகாமலிருந்த வளவேயன்றிக்கே தன்னைப் பெருமாள் வாட்டுவதற்கும் ஹேதுவாயிருந்தது. *கச்சாநுஜாநாமி* [இராவணு

புறப்பட்டுப் போ; விடை தருகின்றேன்] என்கிற திருவாக்கு அப்போது அவதரியாமல் வில்லைப் பொகட்ட பின்பே அவதரித்தமையால் அந்த வில்லே இராவணனுக்குக் கால்கட்டா யிருந்ததென்று தெளிவாயிற்று. அதுபோலவேயாம் உபாயாந்தரங்களும். உபாயாந்தரப் பற்று உள்ளவரையில் பகவதநுக்ரஹம் தான் புகுவதற்கு அவகாசம் பெறுதென்றவாறு. உபாயாந்தரங்களில் அந்வயம் இழவுக்கு உடலாம் என்பதை மற்றொரு த்ருஷ்டாந்தத்தாலும் அறியலாம். தசரத சக்ரவர்த்தியானவன் ஆபாஸமான ஸத்யதர்மத்தைப்பற்றி நின்றமையா லன்றோ பெருமாளோடே கூடி வாழவிருந்த பேற்றை இழந்தான். *ராமோ விக்ரஹவாந் தர்ம:* என்கிற ஸித்ததருமமான பெருமாளைப்பற்றி ஆபாஸதர்மமான ஸத்யவசனத்தை தசரதன் விட்டிருக்க வேண்டுமன்றோ. 'முன்பே வரம் கொடுத்துவைத்து இப்போதாக மறுக்கவொண் ணாது' என்று ஆபாஸமான (ஸத்ய)தர்மத்தைப்பற்றி நின்றமையாலன்றோ பெருமாளை யிழந்தான். ததிபாண்டன் கிருஷ்ணனை மறைத்துவைத்து இங்கில்லையென்று யசோதைக்குப் பொய்சொல்லி மோக்ஷம் பெற்றான்; தசரதன் ஸத்யவாதியென்று பேர்பெற்று இழந்தான்.

ஆக ஆபாஸமான உபாயாந்தரங்களிலே அந்வயித்து நிற்கையானது *க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்* என்று ஸநாதனதர்மமான பகவத் விஷயத்தோடே கூடி வாழுகையாகிற பேற்றை இழப்பதற்கு உறுப்பாய்விடும். ஆகவே அவை பரித்யாஜ்யங்களென்னத் தட்டில்லை.

மாம் என்ற மூன்றாவது பதத்தின் பொருளை விவரித்தல்

9. எல்லாரையும் ரக்ஷிப்பதிலே தீக்ஷிதனாய், உனக்கு இஷ்டமானபடி ஏவிக் காரியம் கொள்ளலாம்படி கையாளாய், ரக்ஷ்யபூதனான உன்னுடைய இசைவு பார்த்து உன் குற்றங் களுக்கு நீ அஞ்சவேண்டாதபடி அவற்றையே பச்சையாகக்கொண்டு உனக்குப் புகலாய், *தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல்* என்கிறபடியே புருஷகாரம் செய்யக்கடவ பிராட் டியே குற்றத்தைக் காட்டி அகற்றப் பார்க்குமிடத்திலும் விடமாட்டாதே *என்னடியார் அது செய்யார்* என்று மறுதலைத்து ஒருதலைநின்று ரக்ஷிக்குமவனான என்னை யென்றபடி. அவ தரித்துக் கண்ணுக்கிலக்காய் அணுகி நிற்கிற விபவரூபனான தன்னை மாமென்று குறிப்பிட்டு வரணீயனைச் சொன்னவித்தாலே - தேச விப்ரகர்ஷத்தாலே காணவும் கிட்டவு மொண்ணாத படி யிருக்கிற பரவ்யூஹங்களையும், அஸாதாரண விக்ரஹயுக்தமல்லாமல் உபாயாந்தர நிஷ்டர்க்கு உத்தேச்யமாயிருக்கிற அக்நீந்த்ராதி தேவதாந்தர்யாமித்வத்தையும் தவிர்க்கிறது அவற்றிற்காட்டிலு முண்டான வாசியைக் காட்டுகிறது மாமென்பது. இந்த மாம் என்கிற பதத்திலே ஆச்ரயண ஸௌகர்யாபாதகங்களான குண விசேஷங்களெல்லாம் விளங்கும். அவையாவன: வாத்ஸல்யமும் ஸ்வாமித்வமும் ஸௌசீல்யமும் ஸௌலப்யமும். அதர்ம புத்தியாலே ஸ்வதர்மத்தில் நின்றும் நிவ்ருத்தனான அர்ஜுநனுக்கு குற்றம் பாராதே அர்த்தங் களையெல்லாம் அருளிச்செய்கையாலே வாத்ஸல்யம் பிரகாசிக்கிறது. தன்னுடைய பரத்வத் தைப் பலகாலுமருளிச் செய்த மாத்திரமன்றிக்கே அர்ஜுநன் நேரே காணும்படி பண்ணுகை யாலே ஸ்வாமித்வம் பிரகாசிக்கிறது. *ஹேக்ருஷ்ண ஹேயாதவ!* என்று அர்ஜுநன் தானே சொல்லும்படி இவனோடே கலந்து பரிமாறுகையாலே ஸௌசீல்யம் பிரகாசிக்கிறது. இவை யெல்லாவற்றிலும் வைத்துக்கொண்டு மிகவும் அபேக்ஷிதம் ஸௌலப்யமாகையாலே அவதார ப்ரயுக்தமான ஸௌலப்யத்தளவேயல்லாமல் ஸாரதியாயும் நிற்கிற ஸௌலப்யாதிசயம் மாம் என்று உறுத்திக் காட்டப்படுகிறது. குதிரைகளை நடத்துகைக்காகத் திருக்கையிலே பிடித்த உழவுகோலும் சிறுவாய்க்கயிறும் திருமுடியில் ஒன்றும் அணியாமல் நிற்கையாலே சேனைத்துகளாலே புழுதிபடைத்த திருக்குழலும், சாத்தின சிறு சதங்கையுடனே தேருக்குக் கீழே தொங்கவிட்ட திருவடிகளுமாய் நிற்கிற ஸாரதி வேஷத்தை மாமென்று காட்டுகிறான்.

ஏகம் என்கிற நான்காவது பதத்தின் பொருள் விவரித்தல்

10. இவ்வுபாய விசேஷத்தைச் சொல்லுமிடங்களிலே பல விடங்களிலும் *மாமேவ யே ப்ரபத்யந்தே* என்பது முதலான விடங்களில் அவதாரண ப்ரயோக முண்டாகையாலே உகாரம் போலே இந்த ஏக சப்தமும் ஸ்தான ப்ரமாணத்தாலே அவதாரணமாகிற பொருளைக் காட்டுகிறது. இந்த அவதாரணத்தினால் வ்ரஜ என்று மேலே சொல்லுகிற சரணவரணத்தில் உபாயத்வத்தைக் கழிக்கிறது. 'இந்த ஸ்வீகாரமுண்டானால் பேறு; இல்லையாகில் இழவு, என்று அந்வயவ்யதிரேகங்களாலே இதில் ஸாதநத்வபுத்தி நடையாட ப்ரஸக்தியுண்டாகையாலே இதின் ஸாதநத்வம் அவச்யம் கழிக்கப்படவேணுமன்றே. அந்வயவ்யதிரேகங்களாலே உபாயமென்று திண்ணமாகத் தோற்றுகிற ஸ்வீகாரத்தில் உபாயத்வத்தைக் கழிக்கிறபடி தான் எங்ஙனேயெனில்; ஸ்வீகாரமானபிறகு இவனுக்கு அநிஷ்டநிவ்ருத்தியும் இஷ்டப்ராப்தியும் பண்ணுகை அவனாலேயானாப்போலே, அதற்கு முன்னம் நேருகின்ற ஸ்வீகாரந்தானும் அவனாலே யுண்டாமது என்பதே பரமார்த்தம். ஆகவே ஸ்வீகாரம் உபாயகார்யமே யொழிய உபாயமன்றென்க. ஸ்வீகாரம் அவனாலே வருகையாவதென்னென்னில்; கரணகளேபரங்களொன்று மின்றிக்கே அசித்துப்போலே கிடக்கிற தசையிலே கரணகளேபரங்களைக்கொடுத்து ஸ்ருஷ்டி பண்ணி *எதிர்சூழல்புக்கு* என்கிறபடியே இவனை அங்கீகரிக்கைக்காக அவன் அநேகாவதாரங்களைப்பண்ணி, அவதரித்த விடங்களிலே ஆச்ரயிப்பதில் ருசிவிச்வாஸங்களை விளைவிப்பதான தன்குணசேஷ்டிதம் முதலியவற்றைப் பிரகாசிப்பித்து இவ்வழியாலே அவன் பண்ணின க்ருஷியாலே பலித்ததன்றே இந்த ஸ்வீகாரம். ஆகையாலே இது அவனாலே வந்ததென்னத் தட்டுண்டோ? *அதுவு மவன தின்னருளே* என்கிற ஆழ்வார் பாசுரம் காணத் தக்கது. இந்த ஸ்வீகாரத்துக்கும் தானே க்ருஷி பண்ணுவானொருவனாகையாலே அவன் இதுக்காக வன்று நமக்குக் காரியம் செய்கிறது, இது இல்லாமற் போனாலும் இவ்வாத்மாவை உய்விப்பதிலே நோக்குடையனான தானே நம்முடைய இஷ்டப்ராப்தி அநிஷ்ட பரிஹார ரூபமான காரியத்தைச் செய்வனென்று நினைக்கவேண்டும் இப்படி நினைக்காவிடில் [அதாவது- நம் ஸ்வீகாரமில்லையானாலும் காரியம் செய்வனென்று நினையாதே அவன் காரியம் செய்கைக்கு இதுவும் வேணுமென்று நினைக்குமளவில்] ஸித்தோபாயமானது ஒரு ஸஹாயத்தையும் எதிர்பாராததென்கிற பெருமை குலைந்ததாகும்.

சரணம் வ்ரஜ என்றவற்றின் பொருள் விவரித்தல்

11. ஸர்வதர்மங்களையும் விட்டுத் தன்னையே பற்றச் சொல்லுகிற ப்ரகரணமாகையால் கீழோடே சேரவேண்டுகைக்காக சரணம் என்பதற்கு 'உபாயமாக' என்பது பொருளாகக் கடவது. 'உபாயமாக நெஞ்சிற்கொள்ளக்கடவாய்' என்பதே (சரணம் வ்ரஜ) என்பதன் பொருளாயிற்று. *சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும்* என்கிறபடியே மனமொழிமெய்கள் மூன்றினாலுமுண்டான ஸ்வீகாரம் அதிகாரபூர்த்திக்கு உடலாகையாலே வாசிகமும் காயிகமும் இந்த ஸ்வீகாரத்திற்கு வேண்டியிருக்கச் செய்தேயும், *ஜ்ஞாநாத் மோக்ஷ மென்கையாலே அவையிரண்டையு மொழிய மாநஸமான அனுஷ்டான மாத்திரத்தைச் சொல்லுகிறது. ஆக, பூர்வார்த்தத்தால் சொல்லிற்றாயிற்றென்னென்னில்; ஸர்வதர்மாந் என்று த்யாஜ்யத்தைச் சொல்லி பரித்யஜ்ய என்று த்யாக ப்ரகாரத்தைச் சொல்லி மாம் என்று பற்றப்படுமுபாயத்தைச் சொல்லி ஏகம் என்று அந்த உபாயம் இதர நிரபேக்ஷமென்பதைச் சொல்லி; சரணம் வ்ரஜ என்று உபாயஸ்வீகாரம் சொல்லிற்றாயிற்று.

உத்தரார்த்தத்தை விவரிக்கத் தொடங்குதல்

12. பூர்வார்த்தத்தில் அதிகாரி க்ருத்யமன்றே சொல்லிற்று. உபாய பூதனான தன்னுடைய க்ருத்யம் சொல்லுகிறது உத்தரார்த்தத்தில். அஹம்—எல்லாமறிந்தவனாய் எதுவும்

செய்ய வல்லவனும் சேஷியாகையாலே ப்ராப்தனுமிருக்கிற நான். **த்வா**—உன் காரியங்களை அறிகைக்குத் தக்க ஞானமில்லாதவனும், அறிந்தாலும் செய்து தலைக்கட்டிக்கொள்ளுகைக்கு சக்தியில்லாதவனும், சக்தியுண்டானாலும் ஸ்வரக்ஷணே ப்ராப்தியற்றவனும், இப்படியிருக்கை யாலே ஸர்வதர்மங்களையும் விட்டு என்னையே உபாயமாகப் பற்றியிருப்பவனானவுன்னை,

13. **ஸர்வபாபேப்ய**:—இஷ்ட விரோதியாயும் அநிஷ்ட ஹேதுவாயு மிருக்குமது பாபம்; மோக்ஷப்ரகரண மாகையாலே எம்பெருமானையடைவதற்கு விரோதிகள் எவையோ அவையே இஷ்ட விரோதிகள். ஆகவே நீ என்னையடைவதற்கு விரோதிகளென்று எங்கெந்த பாபங் களில் நின்றும் பயப்படுகிறாயோ அந்தந்த பாபங்களெல்லாவற்றில் நின்றுமென்றவாறு.

14. **மோக்ஷயிஷ்யாமி**—இவற்றில் நின்றும் விடுபட்டவனும்படி பண்ணக் கடவே னென்கை. நானும் இதுக்கொரு முயற்சி செய்ய வேண்டா; நீயும் இதற்கு ப்ரார்த்திக்க வேண்டா: நீ என்னை அடிபணிந்த பெருமையாலே உன்னைக் கண்டு தானே பயப்பட்டு, போன வழி தெரியாதபடி தன்னடையே விட்டுப்போம் அவை என்பது ணிச்சாலே தெரிவிக்கப்படும். "**அஹம் தே ஸர்வபாபாநி நிஹநிஷ்யாமி**" என்று சொல்லாமல் "**த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷ யிஷ்யாமி**" என்று ணிஜந்த ப்ரயோகம் பண்ணினவிதனல் தேறின அர்த்தமிது. பாபமென்று ஒரு வஸ்து கிடக்கிறதன்றே; குப்பையில் ஆமணக்குப்போலேயெழுந்து பாம்புபோலே பிடுங்குவதன்றே பாபமென்பது. சேதநன் பண்ணின கருமங்கள் ஒரு நொடிப் பொழுதில் நசித்துப் போம்; கர்த்தாவான இவன் அஜ்ஞனாகையாலே மறந்து போவன்; ஸர்வஜ்ஞனாய் ஒன்றொழியாமல் நினைத்திருந்து ஸமயங்களிலே தப்பாமல் பலாநுபவம் பண்ணுவிக்கிறவன் ஸர்வேச்வரன். ஆகவே அப்படி அனுபவிப்பிக்கிற என்னுடைய நிக்ரஹ ரூபமாகையாலே அந்த நிக்ரஹபலமாய் வந்தவை நிக்ரஹத்துக்கு ப்ரதிகோடியான அநுக்ரஹத்தை நான் பண்ணி னால் பின்னையும் கிடக்குமோவென்கை. நெடுங்காலமாக அப்பாபங்களைக் கண்டு நீ நடுங்கின நடுக்கம்போய் உன்னைக் கண்டு அவை தாம் குடல் கரிந்து நடுங்கும்படி பண்ணக்கடவேன் என்றவாறு. இத்தனை காலமும் நம் காரியத்துக்கு நாம் கடவோமென்று நீ திரிகையாலே தன் காரியம் தானே செய்துகொள்கிறானென்றிருந்தேனத்தனை. எனக்கு நீ சரீரதயாசேஷமென் றறிந்து என்னைச் சரணமடைந்த பின்பு 'உன்னுடைய பாபம் போகைக்கு நீயே முயற்சி பண்ணிக்கொள்' என்று உன்கையிலும் உன்னைக் காட்டித் தரமாட்டேன். என்னுடலான வுன்னுடைய அவித்யையாகிற அழுக்கை சரீரியான நானே போக்கிக்கொள்ளேனோ?

மாசுச: என்றதன் விவரணம்

15. இனி மாசுச: என்றது சோகப்படாதேகொள் என்றபடி நீ உன் கார்யத்தில் கைவைத்து நின்றாயாகில் 'நம் கார்யத்துக்கு என்செய்வோம்' என்று நீ கரைந்து சோகிக்கலாம்; நான் உன் காரியத்திலே கைவைத்திலேனாகில் "நம் காரியத்தில் இவன் உதாஸீநனாயிருக்கி றானே! நாம் எப்படி உஜ்ஜீவிக்கப் போகிறோம்" என்று நீ சோகிக்கலாம்; இப்படியல்லாமல் உன்னுடைய ஸ்வரூபத்தை யுணர்ந்து நீ உன் ரக்ஷண கார்யத்திலே கைவைக்காமலும் ஸ்வாமி யான நான் உன்னுடைய ரக்ஷண கார்யத்திலே ஊன்றிப் போருகையாலும் உனக்கு சோகிக் கைக்கு நிமித்தமில்லைகாணென்று முன்பு சோகித்து நின்ற அவனுடைய சோக நிவ்ருத்தியைப் பண்ணிக்கொடுக்கிறபடி. இவ்வளவும் சரமச்லோகார்த்தம் விவரித்தோமானோம்.

16. உபஸம்ஹாரம். ஆக சரமச்லோகத்தின் பொருள் விவரிக்கப்பட்டதாயிற்று. இதில் உத்தரார்த்தத்திற் காட்டிலும் பூர்வார்த்தத்தில் தான் குறிக்கொள்ள வேண்டிய

விஷயங்கள் நிரம்பிக்கிடக்கின்றன. முக்கியமாக இரண்டே விஷயங்களை இங்கு ஸாரமாகத் தெரிவிக்கிறோம். '':ஸர்வதர்மாந் பரித்யஜ்ய'' என்ற மூலத்தையும் அதன் வியாக்கியானத்தையும் மேலெழப் பார்த்துவிட்டுப் பலர் எல்லாவற்றையும் விட்டுவிட வேணுமென்பதே கீதாசார்யனுடைய திருவுள்ளம் என்று நினைக்கிறார்கள். இது மிகத் தவறான நினைவு. கீதார்த்த ஸங்க்ரஹத்தில் ஆளவந்தார் ''நிஜகர்மாதி பக்த்யந்தம் குர்யாத் ப்ரீத்யைவ காரித:, உபாயதாம் பரித்யஜ்ய ந்யஸ்யேத் தேவேது தாம் அபீ:'' என்று மிகத் தெளிவாக அருளிச் செய்துள்ளார். குர்யாத் என்றாரே யொழிய த்யஜேத் என்னவில்லை. மூலத்தில் த்யஜிக்கச் சொன்னது எது? என்பதையும் ஸ்பஷ்டமாகக் காட்டியுள்ளார் உபாயதாம் பரித்யஜ்ய என்று. அவை மோக்ஷோபாயம் என்கிற புத்தியை விடச்சொன்னதே யொழிய அவற்றைவிடச் சொன்னதன்று. கர்மஜ்ஞான பக்தி யோகங்களுக்கு உபாயதயா அநுஷ்டானம், ப்ரீத்யா அநுஷ்டானம் என்று இருவகையுண்டு; ப்ரீத்யா அநுஷ்டானம் தவிர்க்கப்படவில்லை; உபாயதயா அநுஷ்டானம் மட்டுமே தவிர்க்கப்பட்டது. ஏவஞ்ச, புத்தி த்யாகமேயொழிய ஸ்வரூபத்யாகமன்று என்றதாயிற்று, ஸ்வரூபத்யாகமே யென்று கொண்டாலும் குறையில்லை. அப்போதும் புத்தித்யாகந்தான் தேறிநிற்கும். எங்ஙனே யென்னில்; ''ஸங்கல்பபேதேந கர்மபேத:'' என்பது சாஸ்த்ர ந்யாயம். உபாயமென்கிற ஸங்கல்பத்தோடே செய்யும் கருமம் வேறுபட்டதா யிருக்கையாலே முந்தின கருமத்திற்கு ஸ்வரூபத்யாகமேயாகும்.

17. பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தர சதகத்தில் 'நித்யம் காம்யம் பரமபி கதிசித் த்வய்யத்யாத்ம ஸ்வமதிபிரமமா:, ந்யஸ்யா ஸங்கா விதததி விஹிதம் ஸ்ரீரங்கேந்தோ விதததி நச தே''. என்றருளிச் செய்த சுலோகம் இங்கு அநுஸந்திக்கத் தகும். ''விஹிதம் விதததி, ந விதததி ச'' என்று இரண்டையும் சொல்லி வைத்ததை நிர்வஹிக்குமிடத்து இங்கே நாம் செய்த நிரூபணமே தேறி நிற்கும்.

18. கீழே உதாஹரித்த கீதார்த்த ஸங்க்ரஹ ச்லோகத்தில் ''உபாயதாம் பரித்யஜ்ய'' என்று ஸுஸ்பஷ்டமாக ஆளவந்தார் அருளிச் செய்திருக்கவும், சிலர் உண்மையாக உபாயமாயிருக்குமவற்றிலே உபாயத்வ புத்தியை விடுகையென்று ஒன்றுண்டோ? என்று சோத்யம் செய்து கொண்டேயிருப்பார்கள். அவர்களை கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷையிலே வேதாந்த வாசிரியர்தாமே நன்கு நிரஸித்துள்ளார். அவ்விடத்துப் பங்க்திகளாவன ;—

> ''முக்தவ்யாபாரந்யாயேந ஸ்வயம் ஸ்வாதுத்வாத் க்ஷணிகஸ்ய காலாந்தர பாவி பலஸாதநத்வா நுபபத்தி தர்சநாச்ச நாஸ்ய ஸ்வவ்யாபாரே மோக்ஷோ பாயதாபுத்திரபி ஸ்யாதிதி பாவ: அந்ததஸ் தைஸ்தை ராராதிதோ பகவாநேவ ஹி ஸர்வத்ரோபாய: ...அதஸ் தஸ்மிந்நேவ*மாமேகம் சரணம் வ்ரஜேதி வக்தரி உபாயதாபுத்தி : கார்யா.''

என்பன. இங்ஙனே விவரித்தருளின அர்தத்தையே ''நிதாநம் தத்ராபி ஸ்வயமகில நிர்மாண நிபுண:'' என்று ரஹஸ்யத்ரயஸாரத்திலும், ''இயம் கேவலலக்ஷ்மீசோபாயத்வ ப்ரத்ய யாத்மிகா, ஸ்வஹேதுத்வதியம் ருந்தே கிம் புநஸ் ஸஹகாரிணும்'' என்று ந்யாய ஸித்தாஞ்ஜனத்திலும், ''த்வய்யேவ த்வதுபாயதீரபிஹித ஸ்வோபாய பாவாஸ்து மே'' என்று ந்யாஸதிலகத்திலும் மற்றும் பல விடங்களிலும் ச்லோக பத்தமாக்கி வைத்தருளினார் ... ... *

முமுக்ஷுப்படி சரமச்லோகப்ரகரணத்தில் பதினெட்டு மற்றிற்று.

—o—

அஷ்டாதசாஷ்டாதச மஹார்த்தநிதியில் தத்வத்ரயத்தில் பதினெட்டு

தத்வத்ரயக்ரந்தத்தின் பெருமை

1. நம்முடைய ஸம்ப்ரதாயத்தில் மஹோபகாரகர்களாகத் திருவவதரித்தருளின ஆசார்யர்களில் பிள்ளைலோகாசார்யர் ப்ரதாந பரிகணிதராவர். இவ்வாசிரியர் ஸர்வஜ்ஞராக எழுந்தருளியிருந்தது பெரிதன்று; பரமகாருணிகராயெழுந்தருளியிருந்ததே இவர்க்குத் தன்னேற்றம். ஸம்ஸாரிகளை முமுக்ஷுக்களாக்கவும், முமுக்ஷுக்களை முக்தப்ராயர்களாக்கவும், முக்தப்ராயர்களை முக்தர்களாக்கவும் வல்ல திவ்ய ஸூக்திகளை யருளிச்செய்தவர் இவ்வாசிரியரொருவரே யாவர். இவருடைய தனியனில்தான் *ஸம்ஸாரபோகி ஸந்தஷ்ட ஜீவஜீவாதவே நம:* என்கிற விலக்ஷணமான வாக்விந்யாஸம் அமையக் காண்கிறோம். ஸம்ஸாரமாகிற கொடிய ஸர்ப்பத்தினால் கடியுண்ட சேதநர்கள் உஜ்ஜீவிக்கப் பெறவேணுமாகில் பிள்ளைலோகாசார்யருடைய ஸ்ரீ ஸூக்திகளைக் கொண்டே உஜ்ஜீவிக்க வேணுமென்று பூருவர்கள் அறுதியிட்டிருந்தார்கள். அரிய பெரிய ரஹஸ்யார்த்தங்களை ஏடுபடுத்தி வைத்து உலகத்தை வாழ்விக்க முந்துற முன்னம் ப்ரவர்த்தித்தவர் இவ்வாசிரியரே. இவருடைய ரஹஸ்ய க்ரந்தங்களைத் தழுவி ஆச்சான் பிள்ளை முதலானோர் சிலர் சில ரஹஸ்ய க்ரந்தங்களை இட்டருளினர். ஸூத்ரம் போன்ற இவ்வாசார்ய திவ்ய ஸூக்திகளின் ஆழ்பொருளைத் தேனும் பாலுமமுதுமாக வெடுத்துரைத்துப் பரமோபகாரம் செய்தருளினவர் மணவாளமாமுனிகள். விசதவாக் சிகாமணிகளென்னும் விருது அவரொருவர்க்கே ஏற்கும். அவருடைய அமுதமென்மொழிகளான வியாக்கியானங்கள் அவதரித்திராவிடில் பிள்ளைலோகாசார்யருடைய பரம கருணையும் பயனற்றதாகும். உபயவேதாந்த ஸாரார்த்தங்களை நாம் மணவாளமாமுனிகளின் வியாக்கியானங்களிலிருந்துதான் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியும். நமக்கு, திருமந்த்ரம் த்வயம் சரமச்லோகமாகிற ரஹஸ்யத்ரயத்தின் அர்த்தஜ்ஞானம் எப்படி ஆவச்யகமோ; அப்படியே சித்து அசித்து ஈச்வரனாகிற தத்வத்ரயத்தின் ஸ்வரூப ஸ்வபாவஜ்ஞானமும் மிகவுமாவச்யகமாகும். ஏற்கெனவே பிள்ளைலோகாசார்யரருளிச்செய்த தத்வசேகரம் முதலான சில திவ்ய க்ரந்தங்களிருந்தாலும் தத்வத்ரய மென்கிற க்ரந்தமே சிதசிதீச்வர ஸ்வரூப ஸ்வபாவ விசேஷங்களை ஸங்க்ரஹமாகவும் ஸுவ்யக்தமாகவும் வெளியிட்டது. ... ... *

மூன்று தத்துவங்கள் இன்னின்னவையென்பது

2. சித்தும் அசித்தும் ஈச்வரனுமாகிற மூன்று தத்வங்களே தத்வத்ரயமெனப் படுவன. சைதந்யத்திற்கு [அறிவுக்கு] ஆதாரமான வஸ்து சித்து எனப்படும். அறிவையுடைத்தாகாத வஸ்து அசித்தெனப்படும், [சேதநன் என்பதும் சித்து என்பதும் பர்யாயம்; அசேதநம் என்பதும் அசித்து என்பதும் பர்யாயம்.] சேதநாசேதநப் பொருள்களுக்கு நியாமகனானவன் ஈச்வரனெனப்படுவன். சித்து என்பது ஜீவாத்மாவை.

ஜீவாத்ம ஸ்வரூபத்தை நிரூபித்தல்

3. ஜீவாத்மாவின் ஸ்வரூபமானது தேஹத்திற் காட்டிலும் இந்த்ரியத்திற் காட்டிலும் மநஸ்ஸிற்காட்டிலும் ப்ராணனிற்காட்டிலும் ஜ்ஞாநத்திற்காட்டிலும் வேறுபட்டதாய் அஜடமாய் ஆனந்தரூபமாய் நித்யமாய் அணுவாய் அவ்யக்தமாய் அசிந்த்யமாய் நிர்விகாரமாய் ஜ்ஞாநத்துக் கிருப்பிடமாய் ஈச்வரனுக்கு சரீரமாயிருக்கும். தேஹமே ஆத்மாவென்றும், இந்த்ரியங்களே ஆத்மாவென்றும் மநஸ்ஸே ஆத்மாவென்றும், ப்ராணனே ஆத்மாவென்றும் ஜ்ஞானமே ஆத்மாவென்றும், இப்படிப் பலர் பலவகையாகச் சொல்லுவதுண்டு; இவையொன்றும் ஆத்மாவல்ல; இவையெல்லாவற்றிலும் வேறுபட்டு 'அஹம்' (நான்) என்கிற வ்யவ

ஹாரத்திற்கு இலக்கான பொருளே ஜீவாத்மாவெனப்படும், தேஹம் இந்த்ரியம் முதலானவை ஆத்மாவல்ல என்பதை எங்ஙனே தெரிந்துகொள்ளும்படி யென்னில்; என்னுடைய தேஹம் என்னுடைய இந்த்ரியம், என்னுடைய மனம் என்னுடைய ப்ராணன், என்னுடைய ஜ்ஞானம் என்றிப்படி 'என்னுடையது' என்கிற புத்திக்கும் அப்படிப்பட்ட வ்யவஹாரத்திற்கும் விஷயமாய்க்கொண்டு தேஹாதிகள் தோற்றுகின்றன; 'என்னுடைய' என்கிற சொல்லானது நான் என்பதன் ஆறும் வேற்றுமை. நான் என்பதற்கு எது அர்த்தமோ அதுவே தேஹம் இந்திரியம்...என்பவற்றுக்கும் அர்த்தமாக இருக்கமுடியாது, 'நான் தேஹம், நான் இந்திரியம்' என்றிப்படி வ்யவஹாரமிருந்தால்தான் அஹமர்த்தமும் தேஹாதிகளும் ஒன்றேயா யிருக்க முடியும். 'என்னுடைய மகன், என்னுடைய பிதா' என்றால் மகனும் பிதாவும் அஹமர்த் தத்திற் காட்டில் வேறுபட்டவர்களே யன்றி அஹமர்த்தமல்ல வென்று எப்படித் தெரிந்து கொள்ளுகிறோமோ அப்படியே 'என்னுடைய தேஹம் என்னுடைய இந்திரியம்' இத்யாதி வ்யவஹாரங்களினால் 'தேஹாதிகள் அஹமர்த்தமல்ல—அஹமர்த்தத்திற் காட்டில் வேறு பட்டவை' என்று தெரிந்துகொள்ளக் குறையில்லை.

கீழே நிரூபித்த ஜீவாத்ம ஸ்வரூபத்தை விவரித்தல்

4. இப்படி தேஹாதிவிலக்ஷணமான ஆத்மவஸ்துவானது அஜடமென்றும் ஆனந்த ரூபமென்றும் நித்யமென்றும் அணுவென்றும் அவ்யக்தமென்றும் அசிந்த்யமென்றும் நிர்விகார மென்றும் ஜ்ஞாநாச்ரயமென்றும் ஈச்வரனுக்கு சரீரபூதமென்றும் கீழேசொன்னோம்; இவற்றை யெல்லாம் விசதமாகத் தெரிந்துகொள்வதே ஆத்மஸ்வரூபஜ்ஞானமாகும். ஆத்மா அஜடமா யிருக்கையாவது ஸ்வயம் ப்ரகாசமாயிருக்கை. (அதாவது) தன்னுடைய தோற்றத்திற்கு இன்னொரு வஸ்துவை எதிர்பார்க்க வேண்டாதபடி யிருக்கை. ஒரு தீபமானது இன்னொரு தீபத்தை அபேக்ஷியாமலே தன் வ்யவஹாரத்திற்குத் தான் ஹேதுவாகிருப்பேபாலே ஆத்ம வஸ்துவானது ஜ்ஞானத்தைக்கூட அபேக்ஷியாமல், தானே தோற்றிக்கொண்டிருப்பதுதான் அஜடத்வமாவது. ஆத்மவஸ்து ஆனந்தரூபமா யிருக்கையாவது என்னென்னில்; ஆத்ம ஸ்வரூபம் தனக்குத் தானே ஸுகரூபமாயிருக்கை. இதை நாம் நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டியதற்கு சாஸ்த்ர ப்ரமாணமொன்றும் தேடவேண்டா; உறங்கியெழுந்தவன் 'நான் ஸுகமாக வுறங்கினேன்' என்று சொல்லுவது ஸர்வ ஸம்ப்ரதிபந்நம். உறக்க நிலைமையில் வெளி விஷயங்களின் அநுபவம் சிறிதுமில்லை யென்றும், கேவலம் ஆத்ம ஸ்வரூபம்மட்டுமே ஸ்புரித்துக்கொண்டிருக்கிற தென்றும் தெரிந்துகொண்டிருக்கிறோம். அத்தகைய உறக்கம் விட்டு எழுந்தவன் 'ஸுகமாக வுறங்கினேன்' என்றால் அந்த ஸுகம் ஸ்வரூப ஸுகமே யாகவேணுமே யல்லது வேறொரு ஸுகத்திற்கு ப்ரஸக்தியில்லையே. ஆத்மஸ்வரூபம் நித்யமா யிருக்கையாவது—ஒருகால் இருந்து மற்றொருகால் இல்லாமற் போகையன்றிக்கே எப்போது முண்டாயிருக்கை. எப்போது முண்டாயிருக்குமாகில், சாஸ்த்ரங்களில் ஆத்மாவுக்குச் சொல்லப்படுகிற ஜன்மமரணங்கள் கூடும்படி எங்ஙனே யென்னில்; ஜனிக்கிறான், மரிக்கிறா னென்றால் ஆத்மாவுண்டாகிறான், ஆத்மா இல்லையாகிறான் என்பதாக அர்த்தமன்று. ஆத்மா தேஹத்தோடு ஸம்பந்திப்பது ஜன்மமெனப்படுகிறது; தேஹத்தைவிட்டுப் பிரிந்துபோகை மரணமெனப்படுகிறது. ஆகவே ஆத்மா எப்போதுமுளனென்னத் தட்டில்லை. ஆத்ம ஸ்வரூபம் அணுவாயிருக்கையாவது—ஆத்மாவுக்கு ஹ்ருதயத்திலிருப்பையும், அங்கிருந்து உத்க்ரமணமாவதையும், மேலுலகத்திலிருந்து கீழுலகத்திற்குத் திரும்பி வருகையையும் சுடர்மிகு சுருதி தான் சொல்லுகையாலே அணுவென்னுமிடமறியலாம். விபுவாகில் இவை யொன்றும் கூடாதென்பதைப் பெரியார்களிடம் கேட்டுணர்வது.

ஆத்மாவின் அணுத்வம் அவ்யக்தத்வம் முதலியவற்றை மூதலித்தல்

5. ஆத்மவஸ்து அணுபரிமாண முடையதாய் 'ஹ்ருதயப்ரதேசத்தில் மட்டும் நின்றுவிடுமாகில் 'எனக்குக் காலில் நோவு; எனக்குத் தலையில் நோவு; எனக்குக் காலில் ஸுகம், எனக்குத் தலையில் ஸுகம்' என்றிப்படி காலே பிடித்துத் தலையளவும் சரீரமெங்கு மொக்க ஸுக துக்கங்களை புஜிக்கிறபடி கூடுமோவென்னில். ரத்னம் ஸூர்யன் விளக்கு முதலான சுடர்ப் பொருள்கள் ஓரோவிடங்களிலே இருக்கச் செய்தேயும் அவற்றின் ஒளியானது சுற்றெங்கும் வியாபிக்கிருப்போலே, ஆத்மா ஹ்ருதயப்ரதேசத்திலிருக்கச் செய்தேயும் ஆத்மாவின் தர்மமான ஜ்ஞானம் எங்கும் பரம்புகையாலே சரீரமெங்குமொக்க ஸுக துக்கங்களை புஜிக்கைக்கு ஒரு குறையுமில்லை. ஆத்ம ஸ்வரூபம் அவ்யக்தமா யிருக்கையாவது— உலகில் காணும் பொருள்களை க்ரஹிக்கின்ற கண் முதலியவற்றால் தோற்றாதிருக்கைதான் அவ்யக்தத்வமாவது. [ஆத்ம ஸ்வரூபம் அசிந்த்யம்;]- அசிந்த்யமென்பதற்கு நினைக்கவொண்ணாத தென்று பொருள். ஒருபடியாலும் நினைக்கவொண்ணாததென்று பொருள் கொள்ளலாகாது. அங்ஙனம் கொண்டால் ஆத்ம ஸ்வரூப விஷயமான ச்ரவணம் மநநம் எல்லாம் வ்யர்த்தமாக வேண்டிவரும். ஆகையால் அங்ஙனம் பொருள் கொள்ளத்தகாது. அசித்தோடு ஸஜாதீய மாக நினைக்கவொண்ணாதிருக்கையே அசிந்த்யத்வமென்று கொள்ளவேணும். ஆத்மஸ்வரூபம் நிர்விகாரமா யிருக்கையாவது —அசித்துப்போலே விகாரப்படுகையன்றிக்கே ஒருபடிப்பட்டிருக்கை ஆக இப்படி யிருக்கையாலே சஸ்த்ரத்தால் சேதித்தல், அக்நியால் தஹித்தல்; ஜலத்தால் நனைத்தல், காற்று வெயில் முதலியவற்றால் உலர்த்தல் செய்கைக்கு இலக்காகாம லிருக்குமிவ்வாத்மவஸ்து. சஸ்த்ரமானது ஒன்றைச் சேதிக்க வேணுமானாலும், அக்நியானது ஒன்றை தஹிக்கவேணுமானாலும் அந்தந்த வஸ்துக்களிலே வியாபித்துச் செய்யவேண்டு மன்றோ; ஆத்மா ஸர்வ அசித்தத்வ வ்யாபகனாகையாலே அவற்றிற்காட்டில் மிகவும் ஸூக்ஷ்ம பூதனாகையாலும், வ்யாப்யமாயும் ஸ்தூலமாயுமிருக்கிற இவை [சஸ்த்ரம் அக்நி முதலானவை] வ்யாபகமாயும் ஸூக்ஷ்மமாயுமிருக்கிற ஆத்மவஸ்துவை வியாபித்து விகாரப்படுத்தமாட்டாமை யாலே சஸ்த்ரம் முதலியவற்றினாலாகும் வெட்டுதல் கொளுத்தல் முதலானவற்றிற்கு (ஆத்ம வஸ்து) அநர்ஹமாயிருக்குமென்பதை எளிதினுணரலாம்.

ஜீவாத்மாவின் ஜ்ஞாத்ருத்வநிரூபணம்

6. 'ஜ்ஞானமே ஆத்மா' என்றும், ஜ்ஞானத்திற்கு ஆச்ரயம் ஆத்மா என்றும் உபநிஷத்து முதலிய பிரமாணங்களினால் அறிகின்றோம். ஞானத்திற்கு ஆச்ரயம் ஆத்மா என்பது பற்றி இப்போது நிரூபணமாகின்றது. ஆத்மா ஞானத்திற்கு இருப்பிடமாயிருக்கும்; தீபமும் அதன் ஒளியுமாகிய இரண்டும் தேஜோத்ரவ்யமா யிருக்கச்செய்தேயும் தீபமானது ஒளிக்கு ஆச்ரயமாயிருப்பதுபோல, ஆத்மா தானும் ஜ்ஞாந ஸ்வரூபனாயிருக்கச் செய்தே தன்னுடைய தருமமான ஞானத்திற்குத் தன்னையொழியத் தனிப்பட்டிருத்தலாவது, தனிப்பட்டுத் தோன்றுதலாவது இல்லாதபடி தான் ஆதாரமாயிருத்தலே ஜ்ஞாநாச்ரயத்வமாகும். பௌத்தர் முதலான சில புறமதத்தவர்கள் இப்படி ஆத்மா ஜ்ஞாநாச்ரயபூத னென்பதை இசையாதே ஜ்ஞாந மாத்ரமென்று சொல்லுவதுண்டு; அது பிசகு. ஆத்மாவுக்கு ஜ்ஞாநாச்ரயத்வ மன்றிக்கே கேவலம் ஞானமாயிருக்குமதுவே யுள்ளதாகில் 'நான் இதை யறியா நின்றேன்' என்று உலகத்தில் ஸர்வ ஸம்ப்ரதிபந்நமாகக் காண்கிற வ்யவஹாரம் அஸங்கதமாக வேண்டி வரும். 'நான் அறிவு' என்று தன்னை ஜ்ஞான மாத்ரமாகவன்றோ சொல்லிக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட வியவஹாரம் ஒரு வ்யக்தியினிடத்தும் காண்பதில்லை. 'இவ்வர்த்தத்தை நானறியா நின்றேன்' 'இவ்விஷயத்தை நானறிந்துகொண்டேன்' என்றிப்படியே

வ்யவஹாரங்கள் எங்கும் காண்கையாலே, இவ்விஷயத்தை க்ரஹிப்பதானதொரு ஜ்ஞானத்திற்குத் தான் ஆச்ரயமென்னுமிடம் நன்கு தெரிகின்றதன்றோ.

ஜீவாத்மாவின் கர்த்ருத்வ போக்த்ருத்வங்கள்

7. ஆத்மாவை ஜ்ஞாதாவென்று தெரிந்துகொண்ட போதே கர்த்தாவென்றும் போக்தாவென்றும் தெரிந்துகொள்ளவேணும். இன்னது ஹேயம், இன்னது உபாதேயம் என்கிற ப்ரதிபத்திக்கு ஜ்ஞாத்ருத்வமானது ஹேதுவாயிருக்குமாகையாலே ஹேயங்களை விடுகையிலும் உபாதேயங்களைப் பற்றுகையிலும் சிகீர்ஷையுண்டாகி [முயற்சியுண்டாகி என்றபடி] அம்முயற்சி அடியாகக் கர்த்ருத்வமுண்டாகிறது. எவன் ஒரு காரியத்தைச் செய்கிறானோ அவன் அதனாலுண்டாகும் பலனை யனுபவிப்பவனுமாகிறான். ஆகவே கர்த்தாவானபோதே போக்தாவாகிறான். ஆன பின்பு ஆத்மாவுக்கு ஜ்ஞாத்ருத்வம் சொன்னது கர்த்ருத்வ போக்த்ருத்வங்களும் சொன்னபடியாகக் குறையில்லை. இப்படி ஆத்மாவுக்கு ஸ்வாபாவிகமா யிருந்துள்ள கர்த்ருத்வத்தை ஸாங்க்யர்கள் ப்ரக்ருதிக்கேயுள்ளதாகக் கொள்ளுகின்றார்கள்; அது பிசகு. ப்ரக்ருதிக்கே கர்த்ருத்வமாய் ஆத்மாவுக்கு அஃதில்லையாகில் ஆத்மாவுக்கு சாஸ்த்ர வச்யத்வமும் போக்த்ருத்வமும் குலைந்ததாகும், சாஸ்த்ர வச்யத்வமாவது—விதி நிஷேத ரூபமான சாஸ்த்ரத்துக்குத் தான் அதிகாரியாய்க்கொண்டு அதின் வசத்திலே நடக்கவேண்டுகையாம். சாஸ்த்ரங்களானவை ஒருபுறத்திலே 'இதைச் செய், இதைச் செய்' என்று கர்த்தவ்யங்களை விதிக்கும்; மற்றொருபுறத்திலே 'இதைச் செய்யாதே, இதைச் செய்யாதே' என்று நிஷித்தங்களை விலக்கும். இத்தகைய விதி நிஷேதங்கள் சேதநனைப்பற்றி அவதரித்தனவே யல்லது ப்ரக்ருதியைப்பற்றி அவதரித்தனவல்ல. ப்ரக்ருதிக்கேதான் கர்த்ருத்வமென்னில் சாஸ்த்ரங்களில் காணும் விதி நிஷேதங்கள் ப்ரக்ருதியை நோக்கியவை யென்ன வேணும். ஆகவே சாஸ்த்ரவச்யத்வம் சேதநனுக்குக் குலைந்ததாகும். அன்றியும், விஹிதங்களான ஸத்கருமங்களைச் செய்து. நிஷித்தங்களான துஷ்கருமங்களை விலக்கி வர்த்திக்கின்ற சேதநன் நல்ல பலன்களை யநுபவிக்கையும், விஹிதங்களை விட்டு நிஷித்தங்களைச் செய்து திரியும் சேதநன் தீய பலன்களை யனுபவிக்கையும் ஸர்வ ஸம்ப்ரதிபந்நமா யிருக்கின்றது; இப்படிப்பட்ட ஸுக துக்க ரூப பல போக்த்ருத்வமும் சேராமற் போகும். பல சொல்லி என்? சேதநன் கர்த்தாவாகாதபோது சாஸ்த்ரமே வீண் என்ன வேண்டிவரும். ஆனால் இந்த சேதநனுக்கு எல்லா விதமான கர்த்ருத்வமும் ஸ்வரூப ப்ரயுக்தமாமோ வென்னில்; அன்னபாநாதிகளான லௌகிக போகங்களை யுத்தேசித்துப் பண்ணும் ஸ்வவ்யாபாரங்களில் கர்த்ருத்வம் ஔபாதிகமாகையாலே ஸ்வரூப ப்ரயுக்தமன்று. ஆனால் அது இவனுக்கு வந்தபடி தான் என்னென்னில் ஸத்வ ரஜஸ் தமஸ்ஸுக்களாகிற குணங்களினுடைய ஸம்ஸர்க்கத்தாலே யுண்டானதென்று சாஸ்த்ரம் சொல்லும்.

ஆத்மாவுக்குச் சொன்ன கர்த்ருத்வம் ஈச்வராதீனமென்று மூதலித்தல்

8. இனி இந்த கர்த்ருத்வமானது ஸ்வாதீநமா? பராதீனமா? என்கிற சங்கையிலே சொல்லவேண்டியவை சொல்லப்படுகின்றன. ஆத்மாவின் கர்த்ருத்வம் ஈச்வராதீநமென்று நிரூபிக்கப்படுகிறது. சாஸ்த்ரம் அர்த்தவத்தாக வேண்டியதற்காக கர்த்ருத்வம் ஆத்ம தர்மமென்று கொள்ளவேணும். அந்த கர்த்தாவுக்கு தர்மமான ஜ்ஞானம் இச்சை ப்ரயத்நம் ஆகிறவிவை பகவானுக்கு அதீனங்களா யிருக்கையாலும், பகவானுடைய அநுமதியில்லாமல் அந்த ஞானம் முதலியவை க்ரியாஹேதுவாக மாட்டாமையாலும் இவனுடைய கர்த்ருத்வம் ஈச்வராதீநமென்று கொள்ளவேணும். இங்ஙனே கொண்டால் புண்யபாபங்கள் ஈச்வரனுக்கேயாக வேண்டாவோ? சேதநனுக்கு ஆக இடமில்லையே! என்கிற சங்கை உதிக்

கக்கூடும். "சேதநனுடைய புத்திமூலமான ப்ரயத்நத்தை யபேக்ஷித்து ஈச்வரன் அநுமதி பண்ணுகையாலே அந்த க்ரியையைப்பற்றி வரும் புண்ய பாபங்களும் சேதநனுக்கே யாகின்றன" என்று நம் பூருவாசாரியர்கள் அருளிச் செய்கின்றனர். ப்ரஹ்ம ஸூத்ரத்தில் *பராத் து தத் ச்ருதே:* என்கிற ஸூத்ரத்தினுல் ஆத்மாவினுடைய கர்த்ருத்வம் பராயத்த மென்று சொல்லப்பட்டிருப்பதும், *க்ருதப்ரயத்நாபேக்ஷஸ் து விஹிதப்ரதிஷித்த அவையர்த்யா திப்ய:* என்கிற ஸூத்ரத்தினுல் சங்கா பரிஹாரம் செய்யப்பட்டிருப்பதும் குறிக்கொள்ளத் தக்கது. விதி நிஷேத சாஸ்த்ரங்கள் வீணுகாமைக்காக இச்சேதநன் பண்ணின ப்ரதம ப்ரயத்நத்தை யபேக்ஷித்துக்கொண்டு ஈச்வரன் ப்ரவர்த்திப்பிக்கிறுனென்றதாயிற்று.

ஆத்மாவின் அந்தரங்க நிரூபக நிரூபணம்

9. ஆத்மாவுக்கு ஜ்ஞாத்ருத்வத்திற் காட்டிலும் சேஷத்வமே முக்கியமென்பது குறிக்கொள்ளத்தக்கது. இவ்விஷயத்தைக் கூரத்தாழ்வான் திருக்கோட்டியூர் நம்பிபக்கலிலே ஆறுமாஸம் ஸேவித்திருந்து நிதியாகப் பெற்று எம்பெருமானுர்க்கு விண்ணப்பம் செய்தார். இப் பரமார்த்தத்தை எம்பெருமானுர் கீதாபாஷ்யத்திலே (ஏழாமத்யாயத்திலே) ஜ்ஞாநீ என்னு மதிகாரியை விவரித்தருளுமிடத்தில் "பகவச் சேஷதைகரஸ ஆத்மஸ்வரூபவித்" என்கிற ஸ்ரீ ஸூக்தியாலே யருளிச்செய்தார். ஈச்வர ஸ்வரூபத்தை யறிந்தவன் ஜ்ஞானியென்று சங்கரபாஷ்யத்திலுள்ளது. அதைத் தள்ளி எம்பெருமானுர் "பகவச் சேஷதைகரஸே" த்யாதியை யருளிச்செய்தது திருவாய்மொழியில் (8-8-2) *அடியேனுள்ளா னென்ற சந்தையிலுள்ள நிதியான விசேஷத்தைத் திருவுள்ளம்பற்றியே யென்பதை குருமுகமாக விரியக்கேட்டுணர்வது. ஆத்ம ஸ்வரூபம் பத்தர் முக்தர் நித்யர் என்று மூன்று படிப்பட்டிருக்கு மென்பதும் மூவகைப் பட்ட ஆத்மவர்க்கமும் தனித்தனியே அனந்தமா யிருக்குமென்பதும் அறியத்தக்கவை.

அசித்தத்வத்தின் பாகுபாடு

10. இனி அசேதந தத்வத்தைப்பற்றி அதி ஸம்க்ஷேபமாக விஜ்ஞாபிக்கிறேன். அசேதநமென்ருலும் அசித்து என்ருலும் பரியாயமே யென்று ஏற்கெனவே தெரிவிக்கப் பட்டது. அறிவற்றதாய் விகாரப்பட்டுக்கொண்டே யிருப்பது அசித்தெனப்படும். இது சுத்தஸத்வமென்றும் மிச்ரஸத்வமென்றும் ஸத்வசூன்யமென்றும் மூன்று வகைப்படும். சுத்த ஸத்வமென்பது பரமபதம். அது அசேதன கோடியிற் சேர்ந்தாலும் ஜடமாக இருக்கவேணு மென்கிற நிர்ப்பந்தமில்லை. அஜடமென்று கொள்ளலாம். ஜடமென்று கொள்ளுகிற பக்ஷமுமொன்றுண்டு; தத்வ முக்தாகலாபத்தில் *இஹ ஜடாம் ஆதிமாம் கேசிதாஹு:* என்ருர் வேதாந்த வாசிரியர். மிச்ரஸத்வமாவது ப்ரக்ருதி. இது ரஜோகுணத்தோடும் தமோகுணத் தோடுங் கூடின ஸத்வகுணத்தை யுடைத்தாகையாலே இது மிச்ரஸத்வ மென்னப்படுகிறது. ஸம்ஸாரி சேதனர்களின் ஞானத்தையும் ஆனந்தத்தையும் மறைக்குமிது. விபரீத ஞானத் தையு முண்டாக்கும். எம்பெருமானுடைய லீலைக்கு இது பரிகரமா யிருக்கும். இதையிட்டே லீலா விபூதியென்பது. ப்ரக்ருதி யென்கிற பெயரோடுகூட அவித்யை மாயை என்கிற பெயர் களுமுண்டு இதற்கு. ஆச்சரியமான ஸ்ருஷ்டியைப் பண்ணுவதால் மாயை யென்கிறது.

ஸத்வசூன்யமென்கிற காலத்தைப்பற்றின நிரூபணம்

11. ஸத்வ சூந்யமென்று மூன்ருவதாகச் சொல்லப்பட்ட அசித்தத்வமாவது காலம். ப்ரக்ருதியினுடையவும் ப்ராக்ருதங்களினுடையவும் பரிணுமத்திற்கு இது ஹேதுவாயிருக்கும். அதாவது, எம்பெருமான் தன்னுடைய ஸங்கல்பத்தாலே இவற்றைப் பரிணமிக்கச் செய்கிற போது காலத்தினுடைய அவஸ்தா விசேஷங்களைப் பார்த்துக்கொண்டிருந்து அவ்வக் காலங்கள் வந்தவாறே பரிணும நிர்வாஹம் செய்து போருகையாலே இதற்குக் காலம் அவச்யா பேக்ஷிதமா யிருக்குமென்று கொள்க. சிலர் காலமென்பதே கிடையாதென்ருர்கள். ஸ்தாவர

ஜங்கம ரூபங்களான ஸகல பதார்த்தங்களும் காலத்தினுலாய பரிணுமமுள்ளனவாகவே கட்கூடாகக் காணப்படுதலாலும், கலாகாஷ்டா முஹூர்த்தாதிகளைப்பற்றியும், வஸந்தம் முதலான ருதுக்களைப்பற்றியும், மதுமாதவாதி மாஸங்களைப்பற்றியும், மற்றும் இவற்றைச் சேர்ந்த பலவற்றைப்பற்றியும் வேதங்களிற் சொல்லுகையாலும் காலத்தை இல்லை செய்வது கூடாது. திக்குஎன்று தனியேஒருத்ரவ்ய முண்டென்று பலர் சொல்லுவது அயுக்தம்.

இருபத்துநான்கு தத்வ நிரூபணம்

12. முக்கியமாக, அவித்யையென்றும், மாயையென்றும் சொல்லப்படுகிற ப்ரக்ருதியானது இருபத்துநான்கு தத்துவமாயிருக்கும். (அவற்றின் விவரணம்) சப்தாதி விஷயங்கள் ஐந்து; ஆகாசாதி பூதங்கள் ஐந்து; பஞ்ச ஜ்ஞானேந்திரியங்கள், பஞ்ச கருமேந்திரியங்கள், இவற்றுக்கு ஸஹகாரியான மனஸ்ஸு. மஹான் அஹங்காரம் ப்ரக்ருதி என்பனவாம். திருவாய்மொழியில் *பொங்கைம்புலனும் பொறியைந்தும் கருமேந்திரிய மைம்பூதம், இங்கிவ்வுயிரேய் பிரகிருதி மானங்கார மனங்களே *என்கிற பாசுரத்தை யநுஸந்திப்பது. இவை, போக்யம் போகோப கரணம் போகஸ்தானம் என்று மூவகையாயிருக்கும். விஷயங்கள் போக்யங்களாம். செவி வாய் கண் மூக்கு முதலானவை போகோபகரணங்களாம். பதினன்கு லோகங்களும் ஸகலதேஹங்களும் போகஸ்தானங்களாம். அசித்ஸ்வரூப நிரூபணமாயிற்று.*

ஈச்வர தத்வ நிரூபணம்

13. கீழே நிரூபித்த சேதநா சேதநங்களுக்கு நியாமகனனவன் ஈச்வரனென்றும் ஸர்வேச்வரனென்றும் சொல்லப்படுவன். விஷ்ணு நாராயண வாஸுதேவாதிகளான திருநாமங்களினுல் சொல்லப்படுவன். *தேவோ நாமஸஹஸ்ரவாந்' என்றும், *ஓராயிரமா யுலகேழளிக்கும் பேராயிரங்கொண்டதோர் பீடுடையன்* என்றும் சொல்லுகிறபடியே ஆயிரந் திருநாமங்கள் படைத்தவனுதலால் அந்தத் திருநாமங்களுக்கு ஸ்ரீபராசரபட்டர் அருளிச்செய்த **"பகவத்குண தர்ப்பணம்"** என்னும் மறுபெயருடைத்தான பாஷ்யத்தை ஸேவித்தால் எம்பெருமானுடைய ஸ்வரூப ரூபகுண விபவைச்வரியங்களெல்லாம் விசதமாக விளங்கும்.

எம்பெருமானுடைய உபயலிங்க நிரூபணதிகள்

14. நம்மாழ்வார் திருவாய்மொழி தொடங்கும்போதே *உயர்வற வுயர்நல முடையவன்* என்று தொடங்கினராதலால் எம்பெருமானை ஸமஸ்தகல்யாண குணகண நிதியாக அறிவதே முக்கியமானது. *அகிலஹேய ப்ரத்யநீக கல்யாணைகதாநனென்று அறியவேணும். அகிலஹேய ப்ரத்யநீகத்வமும் கல்யாணைகதாநத்வமுமாகிற இவை யிரண்டும் உபயலிங்கமெனப்படும். ஒருவிதமான தோஷமும் தட்டாமலிருக்கைதான் அகிலஹேயப்ரத்யநீகத்வமாகும். கல்யாணகுணமென்று பேர்பெற்றவை யெல்லாவற்றிற்கும் கொள்கலமாயிருக்கை—கல்யாணைகதாநத்வமாகும். துக்கப்படுகை ஹேயகுணமானுலும் பரதுஃக்க துஃக்கித்வமென்பது ஹேயகுணமன்ருதலாலும், ஸ்ரீராமாயணத்தில் *பஹவோ ந்ருப! கல்யாணகுணாஃ புத்ரஸ்ய ஸந்தி தே* என்ற மகுடத்தின்கீழ் *வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம்பவதி துஃக்கிதஃ* என்று கூறின முகத்தால் கல்யாண குணமாகவே ஸ்பஷ்டமாகக் கூறியிருப்பதாலும் "பரதுக்க துக்கித்வத்தை ஸர்வேச்வரனுக்குக் கொண்டால் ஹேயப்ரத்யநீகத்வத்திற்கு மாருகும்" என்கிற வாதத்திற்கு இடமில்லை.

15. எம்பெருமானுக்கு அநந்தனென்கிற திருநாமமு முண்டு. அந்தமாவது பரிச்சேதம். தேசபரிச்சேதம், காலபரிச்சேதம், வஸ்துபரிச்சேதம் என்கிற மூவகையான பரிச்சேதமு மில்லாதவன் எம்பெருமான் என்றபடி. 'இன்ன தேசத்திலுள்ளான், இன்ன தேசத்திலில்லை' என்று சொல்லமுடியாதபடி எல்லா தேசங்களிலு முளனுகையாலே தேசபரிச்

சேதமில்லாதவன். 'இன்னகாலத்திலுள்ளான், இன்னகாலத்திலில்லை' என்று சொல்லமுடியாதபடி எல்லாக் காலத்திலு மிருக்கையாலே காலபரிச்சேத மில்லாதவன். 'இன்ன வஸ்துவாக இருக்கிறான், இன்ன வஸ்துவாக இல்லை' என்று சொல்லமுடியாதபடி ஸகல வஸ்து ஸ்வரூபனாகவு மிருக்கையாலே வஸ்து பரிச்சேதமில்லாதவன்.

அந்தர்யாமித்வத்தில் தோஷஸம்பந்தமில்லாமை

16. எம்பெருமான் ஸகல வஸ்துக்களிலும் அந்தர்யாமியா யிருப்பனென்றால் அந்தந்த வஸ்துக்களிலுள்ள தோஷங்கள் இவன்பால் ஒட்டாதோ? என்று சங்கைவரும். அந்த சங்கை வேண்டா. ஜீவாத்மாவானவன் சரீரத்தினுள் இருக்கச்செய்தேயும் சரீரத்திற்குண்டான இளமை முதுமை முதலியன எப்படி அந்த ஆத்மாவுக்கு வருவதில்லையோ அப்படியே ஸர்வவஸ்து சரீரகனான பகவானுக்கும் ஒரு வஸ்துவினுடையவும் ஒருவிதமான தோஷமும் தட்டாது. இதற்கொரு நிதர்சனம் காணலாம் குற்றம் செய்ததற்காக ராஜதண்டனையடைந்த குற்றவாளி சிறைச்சாலையில் புகுவிக்கப்பட்டுத் துக்கங்களை யனுபவிக்கிறான். அதே சிறைச்சாலையில் அதற்கு நியாமகனான அதிகாரியும் உறைகின்றான். சிறையில் இருப்பு என்பது இவ்விருவர்க்கும் உள்ளதா யிருக்கச் செய்தேயும் அதிகாரியான பிரபுவுக்கு எவ்வித மான துக்கமும் கிடையாது. ஏன்? இவன் சிறைச்சாலையிலிருப்பது குற்றஞ் செய்தது காரணமாகவன்று; நியமிப்பதற்காக விருக்கிறான். ஆகவே 'இவனுக்கு துக்கமில்லாததோடு கூட மாதந்தோறும் ஆயிரம் இரண்டாயிரம் சம்பளம் பெறுகையாகிற ஆனந்தமுமுள்ளது. இதேபோல, கருமம் காரணமாக ஜீவன் சரீரவாஸம் பெறுகையாலே துக்கமுடையவனாக ஆகிறான். பரமபுருஷன் அங்ஙனன்றிக்கே *அந்த: ப்ரவிஷ்டச் சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா* என்று வேதாந்த மோதினபடியே சாஸ்தாவாக அந்த: ப்ரவிஷ்டனா யிருப்பதனால் இவனுக்கு எவ்விதமான தோஷமும் ஒட்டாது.

எம்பெருமானுடைய நீர்மைக் குணங்களின் சிந்தனை

17. ஈச்வரன் ஒப்புயர்வற்ற:எண்ணிறந்த திருக்குணங்களோடு கூடியிருக்கிறானெனினும் முக்கியமாக தயை பொறுமை வாத்ஸல்யம் முதலான சில திருக்குணங்களையே நாம் நிச்சலும் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். பிறர் நோவு கண்டால் ஐயோவென்று இரங்கியிருப்பன். அவர்களுக்கு எப்போதும் நன்மையையே சிந்தித்திருப்பன். நிலாத்தென்றல் சந்தனம் தண்ணீர்போலே பிறர்க்கே உரிமைப்பட்டிருப்பன். தன்னை யடிபணிந்தவர்களிடத்தில் பிறவி அறிவு ஒழுக்கம் முதலானவற்றா லுண்டான தண்மையைச் சிறிதும் பாராமல் தன்னைப் பணிந்தவர்களென்பதொன்றே கொண்டு நேசித்திருப்பன். உற்றுருறவினர் கைவிட்ட காலத்திலும்தான் கைவிடாதே யிருந்து செயற்கரியன செய்தும் அவர்களின் அபேக்ஷிதங்களைத் தலைக்கட்டிக்கொடுப்பன், அவர்களது காரியம் தலைக்கட்டினால் தன் காரியம் தலைக்கட்டிற்றாக வெண்ணி க்ருதக்ருத்யனா யிருப்பன். அவர்களுக்குத் தான்செய்த நன்மைகளில் ஒன்றையும் நினையாதே அவர்கள்செய்த ஸ்வல்ப ஸுக்ருதங்களையே மலையாகக்கொண்டு அவர்களை யநுக்ரஹிப்பதிலேயே நோக்காயிருப்பன். மனைவியர் மக்கள் செய்யும் குற்றங்களைக் காணக் கண்ணிட்டிருக்கும் புருஷனைப்போல அவர்கள் குற்றங்களை நினையாதே, குற்றங்களைப் பெரிய பிராட்டியார் காட்டினாலும் 'என்னடியார் அது செய்யார்' என்று சொல்லியும், *செய்தாரேல் நன்று செய்தார்* என்று சொல்லியும் வாத்ஸல்யம் காட்டியிருப்பன். மனமொழி மெய்களால் அவர்கள் குடிலர்களா யிருந்தாலும் தான் செவ்வியனா யிருந்து பரிமாறுவன். இப்படிப்பட்ட அரிய பெரிய திருக்குணங்களை அநுபவ ரஸிகர்களான பெரியார் தங்களுடைய அநுபவத்திற்குப் போக்கு வீடாக எடுத்துரைத்தால் அதில் வெறுப்பும் அதிர்ச்சியு மின்றிக்கே யிருப்பதுதான் நம்போலியர்க்கு குணாநுபவம்,

எம்பெருமானுடைய ஸகல காரணத்வ நிருபணம்

18. எம்பெருமானுடைய நீர்மைக்குணங்களைக் கீழே பரக்கப் பேசினபடி, மேன்மைக் குணத்தைப் பேசப்புக்கால் 'ஸகலஜகத்துக்களுக்கும் அவனே காரண பூதன்' என்றறிவதொன்றே போதுமானது. நான்கு அத்யாயங்கள் கொண்ட சாரீரக மீமாம்ஸை யென்னும் ப்ரஹ்மஸூத்ரத்தில் இரண்டத்யாயங்களால் அவனுடைய ஸகல ஜகத்காரணத்வமே பலவகைப் பூர்வபக்ஷங்களையும் நிரஸித்து ஸ்தாபிக்கப்படுகிறது. ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்கள் மூன்றும் எம்பெருமானுடைய ஸங்கல்ப மாத்திரத்தினுல் நிகழ்பவை. காரணத்வமானது உபாதாநத்வம் நிமித்தத்வம் ஸஹகாரித்வம் என்று மூவகையாயிருக்கும். ஒரு பானை யுண்டாக வேணுமானுல் மண் உபாதான காரணமாயிருக்கும். குயவன் நிமித்த காரணமாயிருப்பன். தடி சக்கரம் தண்ணீர் முதலானவை ஸஹகாரி காரணமா யிருக்கும். உலகில் எந்த வஸ்து ஜனிக்கவேணுமானுலும் இங்ஙனே மூன்று காரணங்கள் இன்றியமையாதனவாம். ஸகல ஜகத்துக்களுக்கும் உத்பாதகனுன ஸர்வேச்வரன் தானொருவனே மூவகைக் காரணமாயுமிருப்பன் என்பதை நெஞ்சில் திடமாகக்கொள்ளவேணும்.

பரவ்யூஹ விபவாந்தர்யாம்யர்ச்சாநிரூபணம்

19. ஈச்வர ஸ்வரூபமானது--பரத்வம் வ்யூஹம் விபவம் அந்தர்யாமித்வம் அர்ச்சாவதாரம் என்று ஐந்து ப்ரகாரத்தோடே கூடியிருக்கும். இவ்வைந்தையும் சுருக்கமாக உபபாதிக்கக் கேளீர், [பரத்வம்.] *நலமந்த மில்லதோர் நாடு* என்கிற பரமபதத்திலே நித்யஸூரிகளான அனந்தகருட விஷ்வக்ஸேனாதிகளுக்கும், ஸம்ஸார ஸம்பந்தமற்றுச் சென்று சேர்ந்த முக்தாத்மாக்களுக்கும் போக்யனுய்க்கொண்டு எழுந்தருளி யிருக்குமிருப்பு பரத்வமெனப்படும். [2. வ்யூஹம்.] இதற்கு உபயோகம் லீலாவிபூதியி லாகையாலே இவ் விபூதியினுடைய ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களை நிர்வஹிக்கைக்காகவும், புபுக்ஷுக்களான ஸம்ஸாரிகளை இஷ்டப்ராபண அநிஷ்ட நிவாரணங்களாலே ஸம்ரக்ஷிக்கைக்காகவும் உபாஸகர்களை யநுக்ரஹிக்கைக்காகவும் ஸங்கர்ஷணப்ரத்யும்ந அநிருத்த ரூபேண நிற்கும் நிலை வியூஹமெனப்படும். [3- விபவம்.] *அஜாயமாநோ' பஹுதா' விஜாயதே* என்றும் *பிதா புத்ரேண பித்ருமாந் யோநியோநௌ* என்றும் உபநிஷத்து ஓதுகிறபடியும், *எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்* *மீனுயாமையுமாய் நரசிங்கமுமாய்க் குறளாய், கானுரேனமுமாய்க் கற்கியாமின்னங் கார்வண்ணனே* என்று ஆழ்வாரருளிச் செய்கிறபடியும் மநுஷ்யதிர்யக் ஸ்தாவராதி ஜன்மங்கள் கொள்ளுகை விபவமெனப்படும்.[4. அந்தர்யாமித்வம்.]*ய ஆத்மாநம் அந்தரோ யமயதி* சாஸ்தா விஷ்ணுரசேஷஸ்ய ஜகதோ யோஹ்நுதி ஸ்தித:* இவற்றுளெங்கும் மறைந்துறைவாய்* இத்யாதிகளிற் சொல்லுகிறபடியே சேதநருடையவுள்ளே ப்ரவேசித்து ஸகல ப்ரவ்ருத்திகளுக்கும் நியாமகனு யிருக்குமிருப்பு அந்தர்யாமித்வமெனப்படும். [5. அர்ச்சாவதாரம்.] *தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவந்தானே* என்கிறபடியே நமக்கு அபிமதமான த்ரவ்யத்தைத் திருமேனியாகக் கொண்டு நம்போல்வாருடைய ஆராதனைக்கு எளியனுய் ஸர்வஸஹிஷ்ணுவாய் ஸ்நாநபோஜநாதி ஸகல வ்யாபாரங்களும் அர்ச்சக பராதீனமா யிருக்கப்பெற்ற நிலைமை அர்ச்சாவதார மெனப்படும்.

20. பிள்ளை லோகாசார்ய ரருளிச்செய்த தத்வ த்ரயத்தில் முடிவான சூர்ணை—"ஸ்வஸ்வாமிபாவத்தை மாருடிக்கொண்டு அஜ்ஞரைப்போலேயும் அசக்தரைப்போலேயும் அஸ்வதந்த்ரரைப்போலேயு மிருக்கச்செய்தேயும் அபார காருண்ய பரவசனுய்க்கொண்டு ஸர்வாபேக்ஷிதங்களையும் கொடுத்தருளும்"—என்பது. இஃதொன்றை நிச்சலும் சிந்தனை செய்து கொண்டு வாழ்வாரே வாழ்வார். ... ... *

தத்வத்ரயப் பதினெட்டு முற்றிற்று.

ஸ்ரீ:

அஷ்டாதசாஷ்டாதசமஹார்த்த நிதியில் ஸ்ரீவசநபூஷணத்தில் பதினெட்டு

ஸ்ரீவசனபூஷணப் பெருமை.

1 ஸ்ரீவசன பூஷணத்திலும் ஆசார்ய ஹ்ருதயத்திலும் பதினெட்டு விஷயங்களை யெடுத்து அநுபவிப்பதனால் பர்யாப்தி பிறவாது. முமுக்ஷுப்படியிற்போல ஒவ்வொரு ப்ரகரணத்திலிருந்தும் பதினெட்டெடுத்து அநுபவித்தாலாவது சிறிது த்ருப்தியாகும். ஆனாலும் ப்ரதிஜ்ஞையின்படி பதினெட்டே கொண்டு அநுபவிக்கலாகிறது. மணவாள மாமுனிகள் உபதேசரத்தினமாலையில் சில ஆழ்வார்களுக்கு ஒரு பாசுரம் சில ஆழ்வார்களுக்கு இரண்டு பாசுரம், மூன்று பாசுரம், பெரியாழ்வார்க்கு ஐந்து பாசுரம் இப்படியாக இட்டருளினவர், *அன்னபுகழ் முடும்பையண்ண லுலகாசிரியர் இன்னருளால் செய்த கலை யாவையிலும்—உன்னில் திகழ்வசன பூடணத்தின் சீர்மையொன்றுக் கில்லை* என்று தொடங்கி ஏழு பாசுரங்களிட்டருளினர் ஸ்ரீவசனபூஷணத்திற்கு. *ஆர்வசன பூடணத்தி னாழ்பொருளெல்லா மறிவார்?* என்றருளிச் செய்ததோ மர்மஸ்பர்சியானது. இதற்குள்ள பல தனியன்களில் *ஸாங்காகில த்ரவிட ஸம்ஸ்க்ருத ரூபவேத ஸாரார்த்த ஸங்க்ரஹ மஹாரஸ வாக்யஜாதம், ஸர்வஜ்ஞலோக குருநிர்மித மார்யபோக்யம் லந்தே ஸதா வசநபூஷண திவ்ய சாஸ்த்ரம்* என்கிற வொரு தனியன் போதும் இதன் அப்ரமேயமான பெருமையை யுணர்த்துவதற்கு. "ஸர்வஜ்ஞலோக குருநிர்மிதம்" என்று இதற்கிட்ட விசேஷணமானது யதார்த்தமானது. பிள்ளை லோகாசார்யருடைய ஸர்வஜ்ஞத்வம் ஒருபுறமிருக்க, அவருடைய பரமப்ராமாணிகத்வம் அநந்ய ஸாமாந்யமன்றே. எந்த அர்த்தத்திலும் ஆக்ரஹ மின்றிக்கே ப்ரமாண ஸம்ப்ரதிபந்நமானவளவே அருளிச் செய்யும் வைகரி வேறு எந்த ஆசார்யருடைய நூலிலும் காணமுடியாத தொன்றன்றே. இவ்வதிசயங்க ளெல்லாவற்றுக்கும் மேற்பட மணவாள மாமுனிகளால் வியாக்கியானிக்கப்பெற்ற தென்னு மதிசயம் ஸர்வோத் க்ருஷ்டமானதன்றே. இந்த மஹாக்ரந்தத்தை நான்கு ப்ரகரணமாகக் கொண்டிருப்பது அத்யயந அத்யாபனங்களுக்கானதொரு ப்ரக்ரியையே யொழிய ஒன்பது பிரகரணமான விச்சேதமும் ஆறு ப்ரகரணமான விச்சேதமுமே வியாக்கியானத்தாலும் தனியன்களாலும் ஸித்தமானது, ஸ்ரீவசநபூஷணமென்று க்ரந்தத்திற்குத் திருநாமம் செவிக்கினிதாக அமைந்துள்ளது. ரத்னங்களை நிறைத்துச் சமைத்ததொரு பூஷணத்திற்கு ரத்நபூஷணமென்று பெயராகிறாப்போலே பூருவாசாரியர்களின் சிறந்த வசனங்களை நிறைத்துச் செய்தருளப்பட்டதாய் அநுஸந்திக்குமவர்களுக்கு மிக்க அழகு பெறுவிக்குமதா யிருக்கையாலே இதற்கு ஸ்ரீவசந பூஷணமென்று திருநாமமாயிற்று. இது உபதேச ரத்தினமாலையில்* முன்னங்குரவோர் மொழிந்த வசனங்கள் தன்னை என்னும் பாசுரத்தினால் விளங்கும். ... ... *

புருஷகார வைபவ விசதீகரணம்

2. *லக்ஷ்மீ: புருஷகாரத்வே நிர்திஷ்டா பரமர்ஷிபி:, மமாபி ச மதம் ஹ்யேதத் நாந்யதா லக்ஷணம் பவேத்* என்கிற பகவச் சாஸ்த்ரவசனத்தின்படி பிராட்டிக்குப் புருஷகாரத்வம் நியதமாயிருக்கும். ஸ்வத: பரமகாருணிகனாய், ஸம்ஸாரிகளை யநுக்ரஹிப்பதற்கு வழிதேடிக் கொண்டிருக்குமவனான எம்பெருமானுக்குப் புருஷகார க்ருத்யம் செய்ய ஒருவர் வேணுமோ? என்கிற சங்கைக்கு (ஸ்ரீகுணரத்நகோசத்தில்) பட்டர் ஸ்ரீஸூக்தியை யநுஸரித்து முமுக்ஷுப்படியிலே பரிஹார மருளிச் செய்யப்பட்டது. *பிதேவ த்வத்ப்ரேயாந்...

பவதிச கதாசித் கலுஷதீ:* என்பது பட்டர் ஸ்ரீஸூக்தி,*நீரிலே நெருப்புக் கிளருமாபோலே குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தாலே சீற்றம் பிறந்தால் பொறுப்பது இவளுக்காக* என்பது (முமுக்ஷுப்படியிலே) இவர் தம்முடைய ஸ்ரீஸூக்தி. ப்ரக்ருத ஸ்ரீ வசநபூஷணத்தில் (10, 11, 12, 13 ஆகிய)நான்குசூர்ணைகள் இன்சுவைமிக்கவை. (ஸாரமானகருத்துகேண்மின்.) ஸம்ச்லேஷதசையில் ஈச்வரனைத் திருத்துவளென்றும், அப்படி திருத்துவது உபதேசத்தாலே யென்றும், உபதேசத்தாலே ஈச்வரன் திருந்தாவிடில் அழகாலே திருத்துவளென்றும் சொல்லப்படுகிறது. இதைச் சிறிது விவரிப்போம்; தயாளுவென்றும் க்ஷமாநிதியென்றும் பேர்பெற்ற பெருமான் குற்றவாளர்களான அஸ்மதாதிகளையும் காத்தருளக் குதூஹல முடையவனே; அதனால் நமது குற்றங்களைக் கணிசியாமலே க்ஷமித்தோ போக்யமாகக்கொண்டோ அநுக்ரஹிப்பன். அவன்றான் ஹிதபரனுமாகையாலே குற்றங்களைக் கணக்கிட்டு நிக்ரஹிக்கவும் தண்டிக்கவும் புகுவன். அப்படிப்பட்ட ஸமயங்களில் * ஸஹதர்மசரீம் சௌரே: ஸம்மந்த்ரித ஜகத்திதாம், அநுக்ரஹமயீம் வந்தே நித்ய மஜ்ஞாத நிக்ரஹாம்* என்று ஒருகாலும் நிக்ரஹ மறியாதவளென்றும் அநுக்ரஹமே வடிவெடுத்தவளென்றும் போற்றப்பட்ட பிராட்டியானவள் நாதனுக்குச் சில உபதேசங்கள் பண்ணுவள், மன்றாடுவள், ஏதேதோ செய்வள்.

(இங்கு திவ்ய தம்பதிகளின் ஸம்வாதம் கேளீர்.)

3. **பிராட்டி**:—நாதா! மணற் சோற்றிலே கல்லாராய்வதுண்டோ? குற்றமே வடிவெடுத்த இவர்கள் பக்கலிலே நற்றம் தேடுவதும் அஃதில்லையென்று கைவிடப் பார்ப்பதும் தகுதியோ? சிறிது ஆலோசித்து விடைத்தரவேணும்.

நாதன்:—திருவே! நான் விதி நிஷேதங்கள் நிரம்பிய சாஸ்த்ரங்களை வெளியிட்டிருக்கிறேனென்பது உனக்குத் தெரியுமே. விதித்தவற்றைச் செய்தும் விலக்கியவற்றை விட்டும் நெறியிலே வர்த்திப்பவர்களை அநுக்ரஹிப்பதும், நெறி மீறினவர்களை நிக்ரஹிப்பதும் செய்வேனென்பதும் சாஸ்த்ரங்களிலெல்லாம் முறையிட்ட விஷயந்தானே. குற்றவாளர்களையெல்லாம் பரிக்ரஹிப்பதானால் சாஸ்த்ர மேதுக்கு? இதை நீ ஆலோசிக்கவேணும்.

பிராட்டி:—நீர் சொன்னபடி சாஸ்த்ரமிருப்பது வாஸ்தவம். உம்மை தயாளுவென்றும் க்ஷமாசீலரென்றும் வத்ஸலரென்றும் சொல்லிப் போருகிற சாஸ்த்ரங்களுமுண்டே. அவற்றுக்கு ஜலாஞ்ஜலிதானோ? இதை நீ நன்கு ஆலோசித்து விடைத்தரவேணும்.

நாதன்: என்னுடைய க்ஷமை முதலான குணங்களும் ஜீவிக்கவேணும்; சாஸ்த்ரமும் ஜீவிக்கவேணும்; அதற்குரிய வழியை நீயே சொல்லு பார்ப்போம். எனக்குப் பிடிவாதமொன்றுமில்லை; யுக்தமான வழிகாட்டினால் அதைத் தழுவுகிறேன்.

பிராட்டி: நாதா! குற்றவாளர்களெல்லாரையுமா க்ஷமிக்கச் சொல்லுகிறேன் நான்? மேன்மேலும் குற்றஞ் செய்துகொண்டு மூலையடியே திரியுமவர்கள் பலருண்டே; அன்னவர்கள் திறத்தில் சாஸ்த்ரப்படி தண்டதரனாயிருப்பதை நான் தடுக்ககில்லேன். அநுதாப லேசமுமின்றிக்கே விமுகர்களாகவே யிருப்பார்திறத்தில் (க்ஷிபாமி) (நக்ஷமாமி) என்னும் சாஸ்தரங்களை தாராளமாகப் புகவிடும். அநுதாபங்கொண்டு திருவடிவாரம் வந்து சேர்ந்தவர்களைப் பழைய குற்றங் காரணமாகச் சீறுவது கூடாது என்றன்றோ நான் சொல்லுவது.

3. இங்ஙனே பிராட்டி கூறுவது கேட்டு எம்பெருமான் திருந்திவிடுவதுண்டு. சில சமயங்களில் 'ஆமாம் போ, உனக்கு வேறு பணியேது?' என்று உதறிவிடவுங்கூடும். அப்போது பிராட்டி கண்ணைப் புரட்டிக் கச்சை நெகிழ்த்தித் தன்னழகாலே நாதனைப் பிச்சேறும்படி பண்ணி, தான் சொன்னபடி செய்தன்றி நிற்கமாட்டாமே செய்திடுவள். இதனை நம்மாழ்வார் *அல்லிமலர்மகள் போகமயக்குக்களாகியும் நிற்குமம்மான்* என்கிற பாசுரத்தாலே காட்டினர்.

பட்டர் (ஸ்ரீகுணரத்நகோசத்தில்)*உசிதைருபாயைர் விஸ்மார்ய* என்ற விட்டுத்து உசிதோபாயங்களாக விவக்ஷிதங்கள் இவையேயாம்.

சரணுகதி வைபவ நிரூபணம்

5. புருஷகார பூதையான பிராட்டியின் வைபவம் கீழே நிரூபிக்கப்பட்டது. அப்பிராட்டி புருஷகாரம் செய்வது யார்க்கு? என்பதை யறியவேணும். குற்றங்களை மேன்மேலும் செய்துகொண்டே யிருந்து அநுதாப லேசமுமின்றிக்கே யிருப்பாரைத் திருவுள்ளத்தாலும் இட்டு எண்ணமாட்டாள். செய்த குற்றங்களுக்கு அநுதாபங் கொண்டு அபிமுகர்களா மவர்களுக்கே புருஷகாரம் செய்வள். அந்த ஆபிமுக்க்யத்திற்குப் பல பெயர்களுண்டு. சரணுகதி யென்பதும் ஒரு பெயர். சரணுகதியாவது என்ன? அதற்கு என்னென்ன நியமங்களுள்ளன? என்பதை முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டும். ஸ்ரீவசன பூஷணத்தில் செய்தருளும் நிரூபணங்களை நோக்குமளவில் (அதாவது) "ரக்ஷணத்துக்கு அபேக்ஷிதம் ரக்ஷ்யத்வாநுமதியே." "உன் மனத்தாலென்னினைந் திருந்தா யென்கிறபடியே ப்ராப்திக்கு உபாயம் அவன்னினைவு. அதுதான் எப்போது முண்டு; அது பலிப்பது இவன்னினைவுமாறிஞல்" இத்யாதி சூர்ணைகளை யநுஸந்திக்குமிடத்து "பகவத்ப்ரவ்ருத்தி விரோதி ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தி: ப்ரபத்தி:" என்பதுதான் தேறும். இது பிள்ளை லோகாசார்யருடைய ஸ்ரீ ஸூக்தியால் மட்டுமன்று தேறுவது. ஸகல சாஸ்த்ர ஸித்தாந்தமுமிதுவே. நம்முடைய ப்ரவ்ருத்தி நமக்கு ரக்ஷகமாக மாட்டாததோடு எம்பெருமான் செய்தருள நினைக்கும் ரக்ஷணத்திற்கு இடையூறாகவும் முடிந்து நிற்கும். இதை கஜேந்திராழ்வான் விஷயத்திலும் த்ரௌபதீ விஷயத்திலும் ஸ்பஷ்டமாகக் காணுகின்ரும். இவ்விருவரும் ப்ராணரக்ஷத்திலும் மானரக்ஷத்திலும் ஸ்வப்ரவ்ருத்தி பண்ணிக்கொண்டிருந்தவரையில் எம்பெருமானருளைப் பெற்றிலரென்பதையும், ஸ்வப்ரவ்ருத்தி ஓய்ந்தவுடனே அதனைப் பெற்றுர்களென்பதையும் அறியாதாரில்லை. முமுக்ஷுப்படி சரமச்லோகப்ரகரணத்தில் *ச்சால சாபஞ்ச முமோச வீர:* என்கிற ஸ்ரீராமாயண ச்லோகத்தை யெடுத்துக்காட்டி உண்டாக்கியிருக்கின்ற தெளிவையும் உணர்ந்திருக்கின்றீர்கள். ஆகவே ப்ரபத்திஸ்வரூபத்தை உள்ளபடியுணராமலும், இதுவொரு அத்யவஸாய விசேஷமே யென்று தெரிந்துகொள்ளாமலும் 'இது உபாயம்' என்கிற வாதத்தையுங் கிளப்பிப் போராடுமவர்கள் ப்ரபத்தி ஸ்வரூபத்தையே உணராதவர்கள் என்று உபேக்ஷிக்கத்தக்கவர்களத்தனை.

6. பகவச் சாஸ்த்ரத்தில் *ஸர்வஜ்ஞோபி ஹி விச்வேசஸ் ஸதா காருணிகோபிஸந். ஸம்ஸாரதந்த்ரவாஹித்வாத் ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே.*என்று ரக்ஷணத்திற்காக எம்பெருமான் ப்ரதீக்ஷிப்பது ரக்ஷ்யனுடைய அபேக்ஷை என்று சொல்லியிருக்கச் செய்தேயும் "ரக்ஷணத்துக்கு அபேக்ஷிதம் ரக்ஷ்யத்வாநுமதியே" என்று அபேக்ஷா சப்தத்தின் அர்த்தம் அநுமதி மாத்ரமாக அருளிச்செய்திருப்பது ஸகல சாஸ்ரங்களோடும் பொருந்துகைக்காகவேயாம். *இசைவித்தென்னையுன் தாளிணைக் கீழ் இருத்துமம்மானே?* என்ற நம்மாழ்வார் பாசுரத்தில் 'இசைவித்து' என்றதே உயிரான வார்த்தை.

"ப்ராப்தாவும் ப்ராபகனும் ப்ராப்திக்கு உகப்பானும் அவனே."

7. ஸ்ரீவசனபூஷணத்தில் (70) ப்ராப்தாவும் அவனே, ப்ராபகனும் அவனே, ப்ராப்திக்கு உகப்பானும் அவனே-என்று சேதநன் தலையில் ஒன்றுமில்லாதபடி துடைத்து எல்லாவற்றையும் எம்பெருமான் தலையிலே ஏற்றியிருப்பதுதகுமா? என்று சிலர் கலங்கியிருப்பார்கள். அவன் ப்ராபகனுகவும் ப்ராப்திக்கு உகப்பானுகவும் இருப்பதை ஒருவாறு ஒப்புக்கொள்வோம். ப்ராப்தாவும் அவனே யென்ருல் இது எப்படி பொருந்தும்? அர்த்தபஞ்சகத்தில் *ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணே ரூபம் ப்ராப்துச் ச ப்ரத்யகாத்மந:* என்று சேதநனையன்ரே ப்ராப்தாவாக

ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறது; *சரணௌ சரணம் ப்ரபத்யே*என்றும் *உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே* என்றும் சேதநனன்றோ சொல்லுகிறுன். உபநிஷத்தும் *ப்ரஹ்மவிதாப்நோதி பரம*என்று இவனையேயன்றோ ப்ராப்தாவாகச் சொல்லியுள்ளது. எம்பெருமானை ப்ராப்தாவாகச் சொல்லுவது எப்படி பொருந்தும்? என்று பலர் கலங்கியிருப்பர்கள். எம்பெருமானுர் ஸ்ரீஸூக்தியினுல்தான் நாம் தெளிவுபெற வேணும். ஸ்வாமி ஸ்ரீபாஷ்யத்தைத் தலைக்கட்டியருளுர்போது அநாவ்ருத்தி விஷயத்தில் தோன்றின சங்கையைப் பரிஹரிக்குமிடத்து "அத்யர்த்த ப்ரியம் ஜ்ஞாநிதம் லப்த்வா" என்று அருளிச் செய்திருப்பதில் லப்த்வா என்பதனுல் ஈச்வரனைத்தானே ப்ராப்தாவாகப் பேசியுள்ளார். உபநிஷத்தானது "ரஸோ வை ஸ:, ரஸம் ஹ்யேவாயம லப்த்வா ஆநந்தீ 'பவதி' என்றோதியிருப்பதில் 'லப்த்வா' என்பதற்கு சேதநனைக் கர்த்தாவாகச் சொல்லியிருப்பது எம்பெருமானுர்க்குத் தெரியாததன்று. தெரிந்திருந்தும் ஸ்ரீபாஷ்யத்தில் பரமபுருஷனை லாபகர்த்தாவாக வைத்து "பரமபுருஷ: ஜ்ஞாநிநம் லப்த்வா" என்றருளிச் செய்த்ததை உற்றுநோக்க வேணும். சாஸ்த்ரார்த்தங்களில் இரண்டு நிலையுண்டு; தீர்த்தங்களில் இது வடிக்கட்டினது, இது வடிக்கட்டாதது' என்னுமா போலே, வடிக்கட்டின சாஸ்ரார்த்தமும் வடிக்கட்டாத சாஸ்த்ரார்த்தமு முண்டென்று உணரவேணும். கீதையில் * ஸ மஹாத்மா ஸுதுர்லப:,* என்கிற பகவத் வசனத்தை ஊன்றி நோக்கினுல், அப்பெருமான் சேதநனைப்பெறுவதற்குப் படாத பாடுகள் படுகிருனென்பது தெற்றென விளங்கும். உலகில் 'ப்ரஸாதம் துர்லபம், ரத்னம் துர்லபம், என்றிங்ஙனே எவன் சொல்லுவன்? அவற்றை லபிக்க விரும்புமவனன்றோ சொல்லுவன். ஆக, ப்ராப்தாவும் அவனே யென்றருளிச் செய்தது பரமசாஸ்த்ரார்த்தமென்று தேறிற்ருகும். எவன் ப்ராப்தாவோ அவன்தான் ப்ராப்திக்கு உகப்பானென்பதும் தேறிற்று.

"குணக்ருததாஸ்யத்திலுங் காட்டில் ஸ்வரூப ப்ரயுக்தமானதாஸ்யமிறேப்ரதாப் நம்"

8. நம்முடைய அடிமைக்கு இலக்கு மூன்று விஷயங்கள். பகவத் விஷயம், பாகவத விஷயம், ஆசார்ய விஷயம் என்று. இவ்விஷயங்களில் சிலபல குணங்களிருப்பது கண்டு நாம் அடிமைப்படுகிறோமா? அடிமைப்பட வேண்டியது கடமையென்று அடிமைப்படுகிறோமா? என்று ஆராயுமளவில், குணங்கண்டால்தான் அடிமை செய்யத் தோன்றுமென்று நினைக்க நேருமாதலால் குணத்திற்காகத்தான் அடிமைப்படுகிறோமென்று கொள்ளலாகும். ஆனுல் இக்கொள்கை தவருனதேயாகும். குணங்கண்டு அடிமைப்படுவதானுல், அந்யதாஞ் ஞான விபரீத ஜ்ஞானங்களுக்குக் கொள்கலமான நாம், உண்மையில் குணமுள்ளவிடத்திலுங் கூட குணமில்லையென்று மருண்டு அடிமையை விட்டுவிட நேரும். குணமில்லாதவிடத்தில் நாம் அடிமைப்படலாமோ? நாம் மருளாதே உண்மையாகவே குணஹீநமாயிருந்தால் அங்கு அடிமையை விட்டுத்தானே தீரவேண்டும் என்றிப்படி சிலர் வாதம் பண்ணுவார்கள். இஃது ஏலாத வாதம். அடிமைக்கு ப்ராப்தஸ்தலமென்றும் அப்ராப்த ஸ்தலமென்றும் இரண்டுண்டு. அப்ராப்த ஸ்தலத்திலடிமையைப் பற்றி இங்கு விசாரமில்லை. அப்ராப்தஸ்தலத்தில் காசு கிடைத்தால் அடிமை, இல்லையானுல் இல்லை' என்பது தெரிந்ததே. ப்ராப்தமான ஸ்தலத்தில் ப்ராப்தி யென்பது தவிர வேறு எந்த உபாதியும் காணலாகாது. *கண்டாரிகழ்வனவே காதலன் தான் செய்திடினும், கொண்டானையல்லால் அறியாக் குலமகள் போல்* என்கிற குலசேகராழ்வார் பாசுரத்தையும்,* ஆகிலுங் கொடியவென்னெஞ்சம் அவனென்றே கிடக்குமெல்லே* என்கிற திருவாய்மொழிப் பாசுரத்தையும், ஸ்ரீராமாயணத்து அயோத்யா காண்டத்தில் அத்ரி பகவானுடைய ஆச்ரமத்திலே அவருடைய தேவியாரான அநஸூயா தேவிக்கும் ஸீதாபிராட்டிக்கும் நடந்த ஸம்பாஷணையையும் கண்டு கொள்வது. * குணைர்